# MOGANAMBAL

OR

## LOVERS TRIUMPH

A Detective Tamil Novel

BY

K. SHUNMUGA MUDALIAR.

SECOND EDITION

PUBLISHED BY

V. JAYAVELU MUDALIAR

AT SRI BHANUMATHI PRESS,

CHOOLAI, MADRAS.

1928.

*Copy Right Regd.*

*Price As. 8.*

PAGANI

## கனகபுரி அல்லது காஞ்சன மாலை 1 8 0

நாவல் விருப்பமுள்ள நண்பர்களே! நீங்கள் இதுவரை ஆயிரக் கணக்கான நாவல்களை வாசித்து ஆனந்த மடைந்திருப்பீர்கள். ஆயினும், இதை ஒருமுறை வாங்கி வாசிப்பீர்களானால், அவற்றாலுண்டான ஆனந்த முழுவதும், இதனாலேற்படும் பேரானந்தத்திற்கு இணையாகாதென்பதை உணர்வீர்கள். இந்நாவலைப் படிப்பவர்க்கு ஒவ்வொரு வார்த்தையும் மிக்க இனிமையை உண்டாக்கும். இதிலுள்ள கதையின் போக்கு, படிப்பவரின் கருத்தைக் கவர்ந்து புத்தகம் பூர்த்தியாகும்வரை கொண்டு போகத்தக்கது. இதைக் கையிலெடுத்துப் படிக்கத் தொடங்கியவர் என்ன அவசர வேலையிருந்தாலும் முடிக்காமல் இடையில் கீழே வைக்கமாட்டார்கள். எப்பேர்ப்பட்ட விசன முடையவர்களும் இதைவாசிப்பார்களானால் அவ்விசன முழுவதும் மாயமாய் மறைந்து ஆனந்தம் அதிசரிக்கும். இன்னும், இதில் நன்றி மறந்தவர்கள் அடையுங்கெடுதியும், செய்நன்றி மறவாதவர் பெறும் சிறப்பும், அயோக்கியர்கள் அவஸ்தைப்படுவதும், யோக்கியர்கள் மேன்மையுறுவதும், வரதக்ஷிணை வாங்குவதாலுண்டாகும் தீமைகளும் வேறு பல அரிய நீதிகளும் நன்கு விளக்கிக்காட்டப் பட்டிருக்கின்றது.

## அஞ்சனவதி அல்லது அன்னவாசல் அதிசயக்கொலை 1 4 0

இது ஓர் சிறந்த துப்பறியும் கதாசார மமைந்த நவீன தமிழ் நாவல். காதலால் நேர்ந்த கஷ்டங்களும், பிரிவாற்றாமையால் உண்டான விபரீதங்களும், சிநேகத்தால் விளைந்த சிறப்புகளும், பொறாமையால் வந்த போராட்டங்களும், கோபத்தால் சம்பவித்தகொடுமைகளும், துப்பறிபவனால் துலங்கிய உண்மைகளும், போலீஸ் கற்பனைக்கேசுகளின் அற்புதங்களும், கொலைக்கேஸ் விசாரணையின் கோட்பாடுகளும் படிக்கப்படிக்கப் பரமானந்தத்தையுண்டாக்கி கல்மனதையும் கரையச்செய்யும் அலங்கார சம்பாஷணைகளால் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. முதலிலிருந்து கடைசிவரையில் மனதுக்கிசைந்த உற்சாக சம்பவங்களும், இடையிடையே மனந்திடுக்கிடக்கூடிய அரியவிஷயங்களும் அமைந்திருக்கின்றன. துப்பறியும் நாவல்களில் இதுமிகவும் சிறந்ததென்பதை இதை வாங்கி வாசிப்பவர்களே யறிதல்கூடும். அஞ்சனவதியின் அற்புத செயல்களும், கமலேசன் என்னும் அவன் காதலனுடைய முன்னேற்ற முறைகளும், படிப்போரின் மனதைப் பரவசப்படுத்தும். 384-பக்கங்களடங்கிய பெரிய புத்தகம்.

உ

ஸ்ரீராமஜெயம்

# மோகனாம்பாள்

அல்லது

## காதலரின் வெற்றி

ஓர் துப்பறியும் நாவல்.

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

இஃது

க. ஷண்முக முதலியாரால்

இயற்றப்பட்டு

இரண்டாம் பதிப்பு.

வெ. ஜெயவேலு முதலியார் அவர்களால்

சென்னை, சூளை

ஸ்ரீ பானுமதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1928.

ரிஜிஸ்டர் காபிரைட்]

[விலை அணா 8.

# முகவுரை.

சகோதர சகோதரிகளே! இச்சிறு நாவலை எழுதிய என்னுடைய கருத்து என்னவெனின் அநேகமாக நமது குடும்பங்களில் மணமக்களின் அபிப்பிராயமறியாமல் அவர்களுக்கு விருப்பமில்லாத விவாகங்களை செய்வித்து அவர்கள் ஒருவருக்கொருவர் ஜன்ம சத்துருக்கள்போல் இருந்து கொண்டு இல்லறத்தை நடத்துவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். "மணம் என்பது மணமக்களின் மனமொத்தது" என்பதேபோல் பெற்றோர்கள் தங்களருமை மக்களின் சுகவாழ்க்கையைக் கருதி அவர்கள் அபிப்பிராயமறிந்து விவாகம் செய்விக்கும்படி கோருகிறேன்.

யான் வயதிற் சிறியவனாதலினாலும், உலகானுபவ மறியாதவனாதலினாலும் இச்சிறு புத்தகத்தில் எவ்வித குற்றமிருப்பினும் வாசகர்கள் என்னை மன்னித்து இன்னும் இத்தகைய சிறு புத்தகங்களை எழுத ஆதரவாயிருப்பார்கள் என்று எண்ணுகிறேன். இந்நூலை எழுதி அச்சிடுவதற்கு எனக்கு உதவிபுரிந்த என் நண்பர்களுக்கு நான் ஆன்பார்ந்த வந்தன மளிக்க கடமைப்பட்டவனாயிருக்கிறேன்.

இப்படிக்கு,

க. ஷண்முகம்.

PAGANERI.

# அபிப்பிராயம்.

மோகனும்பாள் என்று பெயரிடப்பட்ட இக்கட்டு ரைச் சரித்திரமானது படிப்போர்க்கு இன்பம் தரத்தக்க தாய் இருக்கிறது. இதில் உள்ள சில சம்பவங்கள் மிகவும் ஆச்சரியப்படத்தக்கனவாய் இருக்கின்றன. தற்காலம் நமது தமிழ்மொழியால் அநேக துப்பறியும் கதைகள் மேல்நாட்டு கதைகளை ஒட்டி எழுதப்பட்டவைகளில் இது வும் ஒன்று. இதில் கூறப்பட்ட துப்பறிவோனாகிய தக்ஷணா மூர்த்தி என்பவன் மிகவும் சாமர்த்தியமாக துப்பு துலக்கு கிறான்.

இக்கதையினால் சதாசிவ முதலியாரைப்போல் யோக் கிய முள்ளவர்களும், மோகனும்பாளைப்போல் கற்புடைய பெண்களும், துஷ்டர்களால் பலவித துன்பத்திற்குட்பட் டாலும் முடிவில் சுகம் எய்துவார்கள் என்றும், இதில் காணப்பட்ட திருடர்களைப்போலவும் மோகனும்பாளைத் துன்புறுத்திய துஷ்டர்களைப் போலவும் உள்ளார் முத வில் சந்தோஷமுள்ளவர்கள்போல் காணப்பட்டபோதி லும் முடிவில் கடவுளால் தண்டிக்கப்படுவார் என்றும் நன்கு விளங்குகின்றது.

இச்சரித்திரத்தை வாசிக்க இதை இயற்றிய மிஸ்டர் ஷண்முக முதலியார் வயதிற் சிறியோராயினும் புத்தி கூர் மையில் மிகப்பெரியோராவர் என்பது திண்ணம். இது போல் இன்னும் பல அதிக உபயோகமுள்ள கதைகளை எழுதி படிப்போர்க்கு மகிழ்ச்சியும் தனக்குப் புகழ்ச்சியும் உண்டாக்கிக்கொள்வார் என்று நம்புகிறேன்.

S. SOMASUNDARAM PILLAI,

*B. A. B. L., M. L. C.,*

*High Court Vakil.*

# பூலோக விநோதமென்னும் ஜாலரத்நாகரம்.

இப்பூலோகத்தில் ஆச்சரியப்படத்தக்க ஜால விநோதங்கள் அநேகமிருக்கினும் அவ்வித்தைகளை தாம் தாமே செய்து தங்கள் பிரமைகளை நிவர்த்தி செய்துக்கொள்ளும் பொருட்டு பூலோக விநோதமென்னும் ஜாலரத்நாகரத்தை ஒவ்வொருவரும் வாங்கி இன்பத்தை யடையவேண்டியது அவசியம். இதில் காணும் ஒவ்வொரு ஜாலவிநோத வித்தைகளையும் அநுபோகமாகச்செய்து பார்த்து மனோதிர்ப்தி யடைந்து மற்றவர்களுக்கும் ஆனந்தத்தை விளைவிப்பது உசிதம் ஆதலால் அவ்வித வித்தைகளடங்கிய இப்புத்தகத்தை ஒவ்வொருவருங் கண்ணுராவிடில் ஆவலடங்காது. இதை ஒரு முறை வாசித்தவுடன் இந்திர, தந்திர, மஹேந்திர வித்தைகள் செய்யயூகைகள் உண்டாவதுடன் அற்புதமான ஜாலங்கள் செய்ய உடனே முயலுவார்கள். இதில் அடங்கிய விஷயங்களை எழுதவிரியுமாதலால் சுருக்கிச் சொல்லுவாம். அட்டமாசித்திகள் செய்யலாம், வசியவகைகள்செய்யலாம், மணலை கிளரி விநாயகர் காட்டலாம் மகேந்திர ஜாலம்செய்யலாம் இந்திரஜால பட்டணங்களைத் தோன்றச்செய்தல் நினைத்த தேவர்களைக் காட்டலாம் கோகர்ன வித்தை கண்கட்டு ஜாலம் பாதாள அஞ்சனம் செய்தல் சர்வ வசியம் பச்சைப்பாம்பு மேய்தல் பேயோட்டுதல் மாஞ்செடி முளைத்தல் வயிற்றில் நூல் எடுப்பது ஜாலகாரடி வித்தைகள் பாதாள மை ஜாலம் மாரண ஜாலம் மோடிவைக்கும் வித்தை மனிதர்களுக்கு சிரசில்லாமல் செய்யும் ஜாலம் சத்துரு நாசமாகும் ஜாலம் காசுகள் உண்டாகும் வித்தை இருட்டில் சூரியனைக்காட்டும் ஜாலம் மூப்புசெய்யும் ஜாலம் சாவவாத்திய ஜாலம் மணலை அல்வாசெய்யும் ஜாலம் இராஜ வசியம் எக்காளம் வாசிக்கும் ஜாலம் குட்டிச் சாத்தான் ஜாலம் வழக்குகள்வெல்லும் ஜாலம் பூதபிசாசுகள் விலகும் ஜாலம் சொக்குத்தூள் ஜாலம் குறிசொல்லும் ஜாலம் ஷை ஜாலங்கள் ஒவ்வொன்றைக்கொண்டு பத்து பதினைந்து ஜாலங்கள் செய்யும்படியாய் சுமார் 2000 வித்தைகள் அடங்கியிருப்பதுடன் மூலிகையின் பெயர் அதன் அஃடயாளமும் சுப்ரமணியர் மூலமந்திர சக்கரங்களுடன் அடங்கியிருக்கின்றது.

இதன் விலை ரூபா 1 0 0.

### இந்த உலகமே பிரம்மித்து ஆச்சரியப்படும்படியான
### மகா அருமையும் ஆச்சரிய விஷயங்களடங்கிய புத்தகமான

# மகா மோசக்களஞ்சியம்.

இந்த இந்தியாதேசத்தில் பட்டணங்கள், கிராமங்களில் லண்டனில், அமெரிக்காவில், ஜெர்மெனியில், பிரான்சில், ஜனங்களை எப்படி ஏமாற்றி மோசம் செய்கிறார்கள், மக்கள் எப்படி ஏமாறிப் போகிறார்கள். மேனாட்டின் அதிசயம், மனம் மலைக்கக்கூடிய வெள்ளைப் பெண்கள் மோசம் முதலியதையும் நம்நாட்டில் பெண்டுகள் ஏமாறும் விதத்தையும் நோட்டடிக்கும் மோசம், டிராமா மோசம், இன்ஷியூரன்ஸ் மோசம், பத்திரிகை மோசம், வீடுவிற்கும் மோசம், போலீஸ்மோசம விளம்பரக்காரர் மோசம், அன்னதான மோசம் முதலிய எண்ணரிய மோசங்களை இப்புத்தகத்தில் வெகு அருமையாக தக்க ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டிருக்கிறது. உலக அனுபவம் பெற இப்புத்தக ரத்தினம் மெத்தவும் உதவி. உலகில் நடக்கும் அபாரமோசங்களை இதில் பார்த்தால் இவ்வளவு மோசங்களும் உலகில் உண்டா என மனம் மலைக்கும். இப்புத்தகத்தால் நாம் பல மோசக்காரர்களின் படுகுழியில் வீழாமல் மோசக்காரர்களின் எண்ணத்தை வெட்ட வெளிச்சமாக்கி நாம் எவ்விதத்தும் ஏமாந்து போகாமல், நமதுகைப் பொருளும் மோசம் போகாமல் காப்பாற்றப்படலாம். ஒருதரம் படித்து எறியும் நாவலல்ல. புத்தகம் துண்டு துண்டாக கிழியும் வரையில் பத்திரமாக வைக்க ஏற்பாடு செய்வீர்கள். இது போன்ற புத்தகம் வந்ததுமில்லை, இனிவருவதுமில்லை. மற்ற எப்புத்தகமும் இதற்கீடல்ல. உடனே பெற்றுக்கொள்ளுங்கள். விலை ரூபா 1.

---

எமது விலாசம்:—வே. ஜெயவேலு முதலியார்,
நெ. 29, ஆரிமுத்துமேஸ்திரி வீதி, சூளைபோஸ்டு, மதராஸ்.

# மோகனாம்பாள்.

## அத்தியாயம் 1.

### புத்திரப்பேறு.

நாதா! உலகத்தில் ஜனங்கள் அன்னவஸ்திரமின்றி எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். நமக்கோ அவ்வாறின்றி எல்லா பாக்கியங்களும் நிறையப்பெற்றிருந்தும், நாம் சந்தோஷமாகவிருந்து காலங்கழிக்கக் கொடுத்து வைக்கவில்லையே? நமக்கு கலியாணமாகி ஆறு வருஷங்களாகின்றன, நம்மோடு கலியாணம் செய்துகொண்டவர்களெல்லாம் சந்தோஷமாய் குழந்தைகுட்டிகளுடன் வாழ்ந்திருக்க, நாம் இவ்வாறு புத்திரபாக்கியமின்றி வருத்தப்பட, இச்சென்மத்தில் செய்த பாவமா! அல்லது நம் மூதாதைகள் பூர்வீகத்தில் செய்த பாவமா! எத்தனையோபேர் அன்னவஸ்திரமின்றி அவஸ்தைப்பட அவர்களுக்கு ஏராளமாய் குழந்தைகளிருக்க, எல்லா செல்வங்களும் நிறையப்பெற்றிருக்கும் நமக்குப் புத்திரப்பேறைக் கொடுக்க கடவுளுக்குத்தான் நம்மேல் ஏன் அவ்வளவு வைராக்கியமோ. அல்லது நாம் கோயில் குளங்களுக்குப் பொகாததால் கடவுள் நம்மேல் கோபமுற்றிருக்கிறாரோ. ஆகையால், நாம் முக்கியமான ஸ்தலங்களுக்குச் சென்று நமக்குப் புத்திரப்பேறு உண்டாகும்படி கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும் என்று தன் கணவனாகிய சதாசிவ முதலியாரைப் பார்த்து விசாலாக்ஷியம்மாள் சொன்னாள்.

சதாசிவ முதலியார் :— ஆ அதற்கென்ன? நீ சொல்லுகிறபடி செய்; எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆனால் இப்பொழுது எல்லா நாடுகளிலும் சீதோஷ்ண ஸ்திதி சரியாகவில்லையாதலால், எங்குபார்த்தாலும் வியாதிகள் அதிகமாயிருக்கின்றன. அதைக் கருதியே தான் சீதோஷ்ணஸ்திதி சரியான நிலைமைக்கு வந்த பிறகு உன் எண்ணத்தை நான் பூர்த்திசெய்ய உத்தேசித்திருக்கிறேன்.

விசாலாக்ஷி :— அதற்காகத்தான் நான் உங்களிடத்தில் ஒன்றும் சொல்லுகிறதில்லை. நான் ஏதாவது சொன்னால், அதற்கு மாறாக சொல்லுவீர்களென்று எனக்கு முன்னதாகவே தெரியும். ஆனாலும், என்னுடன் கலியாணம் செய்துகொண்ட எனது பெரிய தகப்பனாரின் குமாரத்தி அம்புஜத்துக்கு, இரண்டு குழந்தைகளிருப்பதைப் பார்க்க எனக்கு வருத்தம் அதிகமானபடியால் சொன்னேனேயொழிய வேறல்லவென்று சற்றுக்கோபத்துடன் சொல்லிவிட்டு, ஏதோ அவசரமான வேலையைப் பார்ப்பவள்போல் சரேலென்று எழுந்து தன்னிருப்பிடத்தை நோக்கி செல்ல வாரம்பித்தாள்.

சதாசிவ முதலியார் :— விசாலாக்ஷி! நீ ஸ்தலங்களுக்குப் போக ஆவலுடனிருப்பதாயும், நான் தாமதிப்பதினால் உனக்கு கோபமுண்டாகும் என்று தெரிந்திருந்தால் நான் அப்படி சொல்லியே இருக்கமாட்டேன். ஆனால் சரி, நாளையதினம் காலை எட்டேகால் மணி வண்டிக்குப்போகத் தயாராயிரு என்று சொல்லிவிட்டு, தன்வேலையைப் பார்க்க வெளியில் போய்விட்டார்.

மேற்கூறிய இருவரும் சென்னை புரசைவாக்கத்திலுள்ள சண்முகானந்தவிலாஸ் என்னும் பங்களாவில் வசித்துக்கொண்டிருந்தார்கள். சதாசிவமுதலியார் சென்னையிலுள்ள ஓர் பிரபலமான துபாஷ். அவருடைய பங்களாவைச் சார்ந்தாற்போல் பின்பக்கத்தில் ஒரு தோட்டமுண்டு. அத்தோட்டத்தில் கண்களுக்கு காக்ஷியைத்தரக்கூடிய அநேக சிறிய செடிகளும், தங்குவதற்கு நிழலைக் கொடுக்கக்கூடிய மா, பலா, வாழை முதலிய கனிவர்க்க மரங்களும் நிறைந்திருந்தன. தோட்டத்தில் உலாவ வருபவர்களை சந்தோஷிப்பதுபோல் அநேக புஷ்பச்செடிகள் புஷ்பித்து தங்களுடைய நறுமணத்தை வீசிக்கொண்டிருந்தன. தோட்டத்தைச்சுற்றிலும் அநேகவிதமான அழகிய சிறு இலைகளையுடைய கொடிகள் ஆகாயத்தை நோக்கி அங்கிருக்கும் சந்திரனைப்பிடிப்பதுபோல் அதி விரைவாக மேல்நோக்கி வளர்ந்துகொண்டு வந்தன. அந்த பங்களாவோ சுண்ணும்படிக்காமல் மழமழவென்று பார்ப்பதற்கு கண்ணாடிபோல் வெகு அழகாயிருந்தது. பங்களாவின் முன்கட்டில் ரவுண்ட் டேபில் என்று சொல்லக்கூடிய ஒரு வட்டமான மேஜையும், அதைச்சுற்றி நான்கு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. அங்குதான் சதாசிவமுதலியார் தனது நண்பர்களுடன் சம்பாஷிப்பது. அக்கூடத்தில் எதிர் எதிராக இரண்டு கண்ணாடி பீரோக்கள் போடப்பட்டிருந்தன. மெத்தையின்பேரில் குஷன்சேர் என்று சொல்லப்பட்ட சில நாற்காலிகளும், சோப்பாக்களும் போடப்பட்டிருந்தன. சுவரில் ரவிவர்மாவால் எழுதப்பட்ட சில படங்களும், பொட்டகிராப் என்னும் சில புகைப்படங்களும் மாட்டப்பட்டிருந்தன. அங்கிருந்த மேஜைகளின்மேல் அநேக அழகான கண்ணாடிப் பதுமைகள் வைக்கப்பட்டிருந்தன.

வெளியே சென்றிருந்த சதாசிவ முதலியார் தான் மறுதினம் ஸ்தலயாத்திரைச் செய்யப்போவதால், தன்னுடைய வேலைக்காரர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய வேலையைச் சொல்லிவிட்டு, தானும் தன்னுடைய பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டு வீடு வந்து சேர்ந்தார். அவர் சொன்னப்பிரகாரமே மறுநாள் எட்டேகால்மணி வண்டியேறி அவரும் அவர் பெண்ஜாதியும் முக்கிய ஸ்தலங்களாகிய மதுரை, காஞ்சீபுரம், திருத்தணிகை, திருப்பதி, திருவள்ளூர் முதலிய இடங்களுக்குச் சென்று, தங்களுக்குக் குழந்தை பிறந்தால் ஒவ்வொரு கோயிலிலும் நெய்விளக்கேற்றி, அபிஷேகம் செய்துவைப்பதாகப் பிரார்த்தித்துக்கொண்டு இரண்டு மாதத்திற்குள் தங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் திரும்பிவந்த சில தினங்களுக்குப் பிறகு விசாலாக்ஷியம்மாள் கர்ப்பம் தரித்து, ஐயிரண்டு திங்களும் கடந்த பின்பு ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். தன் மனைவி ஆண்குழந்தை பெற்றாள் என்ற செய்தி சதாசிவ முதலியாருக்குத் தெரிந்ததும், அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பிறகு தானும் தன்மனைவியும் அந்தந்த ஸ்தலங்களுக்கு பிரார்த்தித்தவாறு பூர்த்திசெய்து முடித்தனர். இரண்டு வருஷங்கள் கழிந்தபிறகு விசாலாக்ஷியம்மாள் ஓர் பெண் குழந்தையையும் பெற்றாள். இரண்டு குழந்தைகளும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர்.

மூன்றும்பிறை சந்திரன் நாளுக்குநாள் உருவிலும் பிரகாசத்திலும் அதிகரிப்பதுபோல் அவர்களுடைய அழகும் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவர்களுக்கு தாமோதரனென்றும், மோகனும்பாளென்றும் பெயர் வைத்து,

பெற்றோர்கள் அன்புடன் வளர்த்து வந்தார்கள். அவர்களுக்குத் தக்கவயது வந்தவுடனே சதாசிவ முதலியார் தன்னுடைய ஸ்ரீமந்த புத்திரனாகிய தாமோதரனை 'மில்லர் ஸ்கூல்' என்று வழங்கும் கிறிஸ்தவ கலாசாலையில் கல்வி பயிலும்படி செய்வித்தார். தனது அருமைப் புதல்வியையும் கல்விபயிலுவதற்கு ஓர் பெண்பாடசாலையில் விட்டதுமல்லாமல், வீட்டில் அவளுக்கு சங்கீதம் கற்றுக்கொடுக்க தக்க ஏற்பாடுகளும் செய்தார்.

# அத்தியாயம் 2.

## இரண்டு சிநேகிதர்கள்.

சென்னை புரசைவாக்கத்திலுள்ள சண்முகானந்த விலாஸ் என்னும் பங்களாவிற்கு எதிரில் ராமமந்திரம் என்ஞோர் பங்களாவிருந்தது. அதில் கோட்டையில் மானேஜராகவிருந்து பென்ஷன் (Pension) வாங்கின ஏகாம்பர முதலியார் வசித்துக்கொண்டிருந்தார். அவருக்கு இராஜரத்தினம் என்ற குமாரனும், பங்கஜவல்லி என்ஞெரு குமாரத்தியுமுண்டு. ராமமந்திரம் என்னும் பங்களாவும் அதைச் சார்ந்ததோட்டமும் சண்முகானந்த விலாசத்தைப்போல் அவ்வளவு பெரியனவாய் இல்லாவிட்டாலும், சற்றேறக் குறைய அதைப்போலவே அழகாக கட்டப்பட்டிருந்தது. இராஜரத்தினமும் மில்லர் ஸ்கூலில் தாமோதரன் படித்துக்கொண்டிருந்த அதே வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தான். தாமோதரனைப் போலவே இராஜரத்தினமும் நன்நடக்கை யுடையவனுதலாலும், இருவரும் ஒரே வகுப்பில் வாசிப்பதாலும், மேலும் இருவரும் அருகில் வசித்துக்கொண்டிருந்ததாலும், ஒருவரை யொருவர் அதிகமாக நேசிக்கத்தொடங்கிஞர்கள். நாளாவட்டத்தில் இவர்களுடைய சிநேகம் முதிர்ந்துவிட்டது. இவர்களிருவரும் ஒவ்வொரு வருஷமும் தப்பாமல் தேர்ச்சிபெற்று மற்ஞோர் வகுப்புக்கு மாற்றப்படுவதால், கடைசியாக மெட்ரிகுலேஷன் (Matriculation) வகுப்பில் வந்து சேர்ந்தார்கள்.

இவ்வகுப்பில் வாசிப்பவர்கள் யூனிவர்ஸிடி எக்ஸாமினேஷன் (University Examination )பரிக்ஷையில் தேற வேண்டும். அங்குபோய் அநேக பிள்ளைகள், கேட்கும் கேள்விகளுக்கு சரியான விடைகொடுக்கத் தவரிவிடுவ

தால், தங்கள் பாடசாலையின் பெயர்கெட்டுப் போகிற தென்று அவ்வகுப்பின் உபாத்தியாயர்கள் நன்றாக வாசிக் கக்கூடிய சிலரைமாத்திரம் அனுப்பிவிட்டு மற்றவர்களை நிறுத்திவிடுவது வழக்கம் (Selection Examination) ஆனால் தாமோதரனும் இராஜரத்தினமும், நன்றாக வாசிக் கக்கூடியவர்கள் என்று உபாத்தியாயர்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு அவ்வருஷம் யூனிவர்ஸிடி எக்ஸாமினேஷ னுக்கு அனுப்பப்பட்டார்கள். அப்பரிக்ஷை ஒருவாரம் நடைபெறுவது வழக்கம். பரிக்ஷைகளெல்லாம் முடிந்து விட்டதனால், ஸ்கூலும் விடுமுறைக்காக மூடப்பட்டது. பரி க்ஷைகளெல்லாம் முடிந்துவிட்டபடியாலும், தங்கள் பாட சாலை சென்னை கடற்கரைக்கு அருகாமையிலிருப்பதாலும், தாமோதரனும், இராஜரத்தினமும் கடற்கரையில் சற்று நேரம் உல்லாசமா யிருந்துவிட்டு தங்கள் வீட்டுக்குப் போக வுத்தேசித்து கடற்கரைக்குச் சென்றார்கள்.

தாமோதரன் :—ராஜா ! எக்ஸாமினேஷனில் நீ சரியாய் ஆன் சர் செய்தாயா ?

இராஜரத்தினம் :— தாமு ! நான் ஒருவாறாகச் செய்திருக்கி றேன். நீ எவ்வாறு செய்திருக்கிறாய் சொல் பார்ப் போம் ?

தாமோதரன் :—ராஜா ! நானும் ஸாடிஸ்பாக்டரியாகத் தான் செய்தேன், ஆனால் எப்படியாகுமோ வென்று பயமாயிருக்கிறது.

இராஜரத்தினம :—தாமு ! நாம் இங்கு சற்றுநேரம்உல்லாச மாயிருந்துவிட்டு போகலாமென்று வந்து அதைப் பற்றி நினைத்து நாம் ஏன் கவலைப்படவேண்டும் ? எப்படியும் இன்னும் ஒரு மாதத்திற்குள் கெஜட்டில்

நமதுரிசலட் வந்துவிடப்போகிறது; என்று இராஜ ரத்தினம் சொல்லி முடிந்தபிறகு இருவரும் தலை குனிந்தவண்ணம், மூன்று நிமிஷம் வரையில் மௌனமாயிருந்தார்கள். பிறகு:—

இராஜரத்தினம் :— தாமு ! இவ்வுலகில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் மனிதனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்பொருட்டே அவர் சிருஷ்டித்தாரென்று நான் நம்புகிறேன். அப்பேர்ப்பட்ட கருணைக்கடலாகிய கடவுளுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம். இதோ பார்! இவ் அலைகள் வருபவர்களை அன்புடன் அழைப்பனபோல் உயரக் கிளம்பி கரையைமோதி மறுபடியும் சமுத்திரத்தை நோக்கிப் பின் செல்லுகின்றது.

தாமோதரன் :—ராஜா ! நீ சொல்வது மிகவும் சரி; நீ சொல்வது போல் அவைகள் செய்கிறதாக எனக்குந் தோற்றுகிறது. எவ்விதத்திலும் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய கருணாநிதிக்கு நம்மால் ஆகவேண்டிய கைம்மாறு என்ன இருக்கிறது. நமக்கு இன்பம் வந்தபோதிலும், துன்பம் வந்தபோதிலும் அவரை மறவாமல் அன்புடன் நேசித்து, அவருடைய ஆக்ஞைகளை மீறி நடவாமலிருப்பதே நாம் அவருக்குச் செய்யக்கூடிய கைம்மாறாகும்.

இராஜரத்தினம் :—தாமு ! அதிருக்கட்டும். சில நிமிஷங்களுக்கு முன்பு வெகுதூரத்தில் நாம் பார்த்த கப்பலானது எவ்வளவு சீக்கிரத்தில் ஹார்பரை(Harbour) வந்து சேர்ந்துவிட்டது பார்த்தாயா ! நம்முடைய மூதாதைகள் காலத்தில் இவ்விதமான சுகங்களில்

லாததாலல்லவோ அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவில்லை.

தாமோதரன் :—ராஜா! நாம் இப்பொழுது இந்த ராஜாங்கத்தாரால் அனுபவிக்கும் அவ்வளவுசௌகரியங்கள் முன் காலத்தில் வசித்த நமது மூதாதையர்கள் அனுபவிக்க வில்லை. முற்காலத்தில் வசித்த ஜனங்கள் ஒரு நாட்டி லிருந்து மற்றொருநாட்டிற்கு ஜலமார்க்கமாக போக வேண்டியதாயிருந்தால், பாய்மரங்கள் கட்டப்பட்ட தோணிகளில் ஏறிக்கொண்டு அதிக கஷ்டத்துடன் அநேக நாட்களுக்குப் பிறகு தாங்கள் கோறிய இடத் தைப்போய் அடைவார்கள்.

இராஜரத்தினம் :—தாமு! நாம் இந்த ராஜாங்கத்தாரால் அதிகசௌகர்யங்களை அடைந்துகொண்டுவருகிறோம். அதிருக்கட்டும் நான் உன்னை ஒன்று கேட்கவேண்டு மென்றிருந்தேன். அது இப்போதுதான் என் ஞாபகத்துக்கு வந்தது. நீ இந்த லீவை எப்படி கழிக் கப் போகிறாய்?

தாமோதரன் :—ராஜா! நானும் அதைப்பற்றி உன்னிடம் பேசலாமென்றுதானிருந்தேன். ஆனால் வழியில் போகும்போது பேசிக்கொள்ளலா மென்றிருந்த என்னை கியாபகப்படுத்தியதால் அதை இப்போதே உனக்கு சொல்லிவிடுகிறேன். இந்த லீவில் எனது தகப்பனார் குடும்பத்துடன் நீலகிரிபோக உத்தேசித் திருப்பதால், உன்னை விட்டுப்பிரிய எனக்கு மனமில் லாததுபற்றி நீயும் என்னுடன் நீலகிரிக்கு வரும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன் என்ன சொல்லு கிறாய்?

இராஜரத்தினம் :—தாமு! நான் பள்ளிக்கூடத்திலும் உன்னோடிருக்கிறேன். அதுவுமல்லாமல் அடிக்கடி உங்கள் வீட்டுக்கு வந்தும் உன்னோடு காலத்தைப் போக்குகிறேன். இது போதாமல் வீவிலும் நான் உன்னோடு வரவேண்டுமோ? அப்படியானால் நான் என் தகப்பனாரைக் கேட்டுக்கொண்டு பிறகு சொல்லு கிறேன்.

தாமோதரன் :—கெடியாரத்தை எடுத்துப் பார்த்து ராஜா! இதற்குள் நாம் இங்குவந்து ஒன்றரைமணி நேரமாகி விட்டது.

இராஜரத்தினம் :—தாமு! ஆனால் நேரமாகிறது. புறப்படு நாம் வீடுபோய் சேர்வோம் என்று சொன்னதும் இருவரும் எழுந்து தங்கள் வீட்டிற்குப் புறப்பட்டார் கள்.

---

## அத்தியாயம் 3.

### ஆழ்ந்த சிந்தனை

மோகனும்பாள் நாளுக்குநாள் கல்வியில் நல்ல தேர்ச்சிபெற்று வந்ததாலும், அவளுக்கு யௌவனபருவம் வந்துவிட்டபடியாலும், சதாசிவ முதலியார் அவளை பாடசாலையினின்றும் நிறுத்திவிட்டார். இவள் வீணையை வாசித்துக்கொண்டே அதனுடைய நாதத்திற்கு ஒத்தாற்போல் இனிமையாகப்பாடுவாள். ஆனால் இவள் வீணையைப்போல் பிடில், ஆர்மோனியம் வாசிக்கமாட்டாள். இவளுடைய பாட்டைக்கேட்டு ஆநந்திக்காதவர்கள் யாரும் கிடையாது. இவளுக்கோ வயது பதினாறு. இவளுடைய வயதையொற்ற மற்றப்பெண்கள் இவ்வளவு நன்றாகவாசிக்க மாட்டார்களென்று இதை வாசிப்பவர்களே யூகித்துக் கொள்ளலாம். இவளோ பொன்னால்செய்த பதுமை யென்று சொல்லக்கூடிய அவ்வளவு அழகைப் பெற்றிருந்தாள். இவளுடைய கூந்தலோ மேகம்போல் கருத்த நிறத்துடன் முழங்காலுக்குமேல் நீண்டும், அடர்ந்தும் அதிக பாரமாயிருந்ததால், இவளைக் கண்டோர்கள் இவ்வளவு சிறியபெண் அவ்வளவு பெரிய பாரமான கூந்தலை எப்படி சுமந்துகொண்டிருக்கிறாளென்று அதிசயப் படாமலிருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். இவளுடைய தேகம் பருத்திராமல் மெல்லிய பூங்கொடியைப்போல் மெலிந்திருந்ததுடன் இவளுடைய இடை இவ்வளவுதான் சிறியது என்று ஒப்பிட அரிதாயிருந்தது. மோகனும்பாள் கண்கள் குவளைமலர்களை ஒத்திருந்தன. புருவங்கள் வில்லைப்போல வளைந்திருந்தன. மூக்கோ கோட்டை வைத்தாற்போல அளவுக்கு அதிகமாகாமலும், குறுகாமலும் சரியாக இருந்

தது. இவளுடைய இதழ்கள் கோவைப்பழம்போல் சிவந்திருந்தன. இவளுடைய முகமோ காண்போரின் கண்களை கவரத்தக்க சக்தியுள்ளது. மோகனத்தின் அழகைக்கண்டு திகைத்து நிற்காதவர்களே கிடையாது. இவளை அழகில் லக்ஷ்மிக்கும், கல்வியில் சரஸ்வதிக்கும், குணத்தில் பூமா தேவிக்கும் ஒப்பிடலாமேயொழிய வேறுயாருக்கும் சமானமாக கூறமுடியாது. சூரியனைக்கண்ட தாமரை மலர்வதுபோல் இவள் எப்பொழுதும் முகமலர்ச்சியுட னிருப்பாள். அழகுக்கு அழகுசெய்வதுபோல் இவள் இயற்கையாகவே அழகாயிருந்தபோதிலும், சில ஆபரணங்களையும் அணிந்துகொண்டிருந்தாள். கைகளில் மங்களூர் வளையல் என்று சொல்லபபடும உருட்சியான பொன்னாற் செய்த வளையல்களையும், கொலுசும் அணிந்திருந்தாள். அநேகமாக இந்துக்கள் காதில் அணிந்துக்கொள்ளும் குருட்டுப் பாவல், கர்ணப்பூ முதலிய நகைகளின்றி சூரியனுடைய பிரகாசத்தைக்கெடுத்து, அவனுக்கு அகௌரவத்தை உண்டுபண்ணுவதுபோல் பிரகாசித்துக் கொண்டிருந்த வைரத்தோடுகளை மாத்திரம் காதில் அணிந்துக் கொண்டிருந்தாள். நக்ஷத்திரங்களின் ஒளியை கெடுக்கவந்ததுபோல் தோன்றிய விலையுயர்ந்த கற்களால் அமைக்கப்பட்ட மோதிரங்களை வலதுகைவிரல்களில் இரண்டும், இடதுகைவிரல்களில் இரண்டுமாக அணிந்திருந்தாள். மூக்கில் ஒருபக்கத்தில் சிகப்புக் கல்லால் செய்த மூக்குத் திருகாணியும், மற்றொருபக்கத்தில் பேசர் என்று சொல்லப்படும் மூன்று கற்களாலாகிய ஆபரணத்தையு மணிந்திருந்தாள். இவள் கழுத்தில் பூர்ணசந்திரன்போல் பிரகாசித்துக்கொண்டிருந்த ஒரு பதக்கத்தையுடைய கெம்பு அட்டிகையை அணிந்திருந்தாள் அதோடுகூட ஒருசரடும்,

செயின் (Chian) என்று சொல்லப்படும் சங்கிலியொன்றையும் அணிந்திருந்தாள். காலில் அணியும் அநேக ஆபரணங்களில் சேமியாபட்டடை என்று வழங்கும் ஓர் வெள்ளி ஆபரணத்தை மாத்திரம் அணிந்திருந்தாள். இவள் எப்பொழுதும் மெல்லிய வஸ்திரம் தரிப்பதில் விருப்பமுள்ளவள். ஆனால் அநேகமாக பொம்பாய்பட்டிலதைத்த பாவாடைகளையும், பட்டோடு சரிகைக்கலந்த தாவணிகளையும், மஸ்லின் என்று சொல்லும் ஓர்வித மெல்லிய பட்டில் தைத்த ஜாக்கெட்டுகளையும் அணிந்துகொள்வது வழக்கம். மோகனும்பாள் விரததினங்களில் குங்குமபொட்டும், மற்றயதினங்களில் சாந்து பொட்டும் இட்டுக்கொள்வாள். இவள் தினந்தோறும் தன்னுடைய தோழியான கமலாக்ஷியோடு மாலைப்பொழுதை தோட்டத்தில் கழிப்பது வழக்கம்.

மோகனும்பாள் தான் சிறுபெண்ணாக இருந்தபோது இராஜரத்தினத்துடன் பழகியிருப்பதாலும், அவனுடைய நற்குணங்களை தான் நன்றாக அறிந்திருப்பதாலும், அவன் தைரியமுள்ள வீரனென்று தெரிந்திருந்ததாலும், தன்மனதிற்கிசைந்த மணாளன் அவன்தான் யென்று தான் நினைத்திருந்ததாலும், தன்னைப்போல் அவன் அவ்வளவு தனவந்தனாக இல்லாவிட்டாலும், "கைநிறைந்த செல்வத்தைப்பார்க்கிலும் கண்ணிறைந்த புருஷனேமேல்" என்பதைப்போல், அவனை காதலிக்கவாரம்பித்தாள். அக்காதல் என்னும் விதையானது நாளுக்கு நாள் செடியாகி, மரமாகி, பூ பூர்த்து, பிஞ்சுவிட்டு, காயாகி, பழமாகிவிட்டது. மோகனும்பாள் தான் எப்பொழுது அக்கனியைப்புசித்து ஆனந்தமடைவதென்ற அவாவாலும், தான் எண்ணிய காரியம் சித்திக்குமோ என்ற சந்தேகத்தாலும், யாருட

னும் அதிகமாக பேசாமல் மௌனமுற்றிருக்க ஆரம்பித்தாள். அவள் எப்பொழுதும் தான் நினைத்த காரியம் கைகூடுமாவென்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்ததினால் சரியான போஜனம் உட்கொள்வதும கிடையாது. நிர்ச்சிந்தையாய் நித்திரைசெய்வதும் கிடையாது.

ஒரு நாள் மாலைப்பொழுது வழக்கம்போல் மோகனும்பாள் தனது தோழியான கமலாக்ஷியுடன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தபொழுது, கமலாக்ஷி மல்லிகை மலர்களையும், ரோஜா புஷ்பங்களையும் கொய்து, மல்லிகை மலர்களையெல்லாம் ஒரு சரமாகக்கட்டி அந்த மல்லிகை சரத்தையும் ரோஜாபுஷ்பங்களையும் மோகனத்தின் கூந்தலில் வைக்கப்போனாள். அப்போது மோகனும்பாள் தான் நினைத்தகாரியம் அதிக நாட்களாயும் நிறைவேறாத படியால், அதை பூர்த்திசெய்யும் வழிகளைத்தேடும் பொருட்டு, அநேக மார்க்கங்களை ஆழ்ந்து ஆலோசித்துக்கொண்டிருந்ததால், சற்று கோபத்துடன் தனது தோழிமுகமாகத் திரும்பி "நான் இதை யெலலாம் வைக்குப்படி உன்னை கேட்டேனா, வேண்டுமானால் நீ வைத்துக்கொள்" என்று சொன்னாள்.

**கமலாக்ஷி** :—மோகனா ! நம்போன்ற மங்கையர்க்கல்லாமல் மற்றயாருக்கு கடவுள் இப்பேர்ப்பட்ட அழகும் வாசனையுமுள்ள புஷ்பங்களை உண்டாக்கினார் ?

**மோகனும்பாள்** :—கமலா ! அப்படியானால் நீயே சந்தோஷமாய் வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டு மறுபடியும் தன்னுடைய எண்ணங்களைப்பற்றி சிந்திக்கலானாள்.

**கமலாக்ஷி** :—மோகனா ! என்னம்மா, நான் என்ன சொன்ன போதிலும் அதை ஒரு பொருட்டாக மதியாமல் தாங்

கள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்ந்திருப்பது போல் தோன்றுகிறதே என்று இவ்வாறு மோகனும் பாளை அடிக்கடி தொந்தரவு பண்ணிக்கொண்டிருந்த தால், அவளுக்கு கோபம்வந்து, ஆமாம் "நான் உன் னுடைய கலியாண விஷயத்தைப்பற்றி ஆழ்ந்த சிந் தனையில் அமிழ்ந்திருக்கிறேன்" என்று சொன்னாள்.

இதைக் கேட்டவுடனே கமலாக்ஷி "ஆமாம்" மோகனா! நான் இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். எனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை என்று நீ விச னப்படுவானேன். பந்திபோஜனங்களில் இப்படித்தான் ஒருவருக்கு ஒரு பதார்த்தம் வேண்டியதாயிருந்தால் பக் கத்திலிருப்பவருக்கு வேண்டுமென்று சொல்லுவது வழக் கம். அப்படி அவருக்கு அப்பதார்த்தத்தை பரிமாறும் போது தனக்கும் வேண்டுமென்று கேட்பார்கள். அதைப் போல் உனக்கு கலியாணமாக வில்லையென்று நீ வருத்தப் பட எனக்கு ஆகவில்லையென்று நீ வருந்துவதாக சொல் லுகிறாயே. இத்தனை நாட்களாக நீ ஏன் முகவாட்டத்துட னிருந்தாயென்பதை இப்பொழுதுதான் நான் கண்டுபிடித் துக்கொண்டேன்.

மோகனும்பாள் :—கமலா! நீ கண்டுபிடித்து விட்டதை கைசோரவிடாமல் பத்திரப்படுத்தி வைத்துக்கொள். நான் இங்குவந்து அதிக நேரமாகிறது என்று சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்று அங்குள்ள ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு எதையோ ஒன்றை உற்று கவனிப்பதுபோல், ஹாலில் தன் னுடைய தாய்தந்தையர்கள் சம்பாஷித்துக் கொண் டிருந்ததை அதிக கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந் தாள்.

விசாலாக்ஷி :—நாதா! நம்முடைய குழந்தை நாளுக்கு நாள் ஊண் உறக்கமின்றி மெலிந்துபோகிறாள்.

சதாசிவ முதலியார் :—விசாலாக்ஷி! நானும் அதைக்கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். ஒரு வேளை அன்ன ஆகாரத்தின் சௌக்கியம் குறைந்திருக்கிறது போலும்.

விசாலாக்ஷி :—நாதா! நமது குழந்தை மோகனம் யௌவன பருவத்தை அடைந்திருப்பதால், இப்பொழுதே அவளுக்கு கலியாணம் செய்துவிட்டாலல்லவோ நல்லது. அவளுடைய யௌவன பருவத்தை தாயார் வீட்டில் கழித்துவிட்டு பிறகு கலியாணம் செய்துக்கொண்டு புருஷனிடம் என்ன சுகமனுபவிக்கப்போகிறாள்.

சதாசிவ முதலியார் :—விசாலாக்ஷி! "நான் அதைப்பற்றி ஒன்றும் கவலை எடுத்துக் கொள்ளவில்லையென்று நீ நினைக்கவேண்டாம். நம்முடைய குழந்தையை எத்தனையோ இடங்களில் கேட்கிறார்கள். ஆனால் தக்க புருஷனுக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுத்து நாம் கண்குளிர பார்க்கவேண்டு மென்பதுதான். இல்லாவிட்டால் என்னுடைய அக்காள் குமாரன் துர்மார்க்கப்பயல் ரகுபதிக்கு நமது குழந்தையை கேட்டார்களே அப்போதே கொடுத்திருக்க மாட்டேனா; என்று சொல்லிவிட்டு சதாசிவ முதலியார் தன்வேலையைப் பார்க்கும்பொருட்டு வெளியேசென்றார். விசாலாக்ஷியம்மாளும் வீட்டுக்காரியங்களை கவனிக்கலானாள்.

---

# அத்தியாயம் 4.

## காதலரின் சந்திப்பு.

இராஜரத்தினம் அடிக்கடி தனது நண்பன் தாமோதரனின் வீட்டுக்குப் போய்வருவது வழக்கமாதலால், அவன் மோகனும்பாளை அடிக்கடி சந்திக்கநேரிடும். அவன் அவளைப் பார்க்கும்போதெல்லாம் தனக்குள் ஆச்சரியமடைவான். அவள் ஒரு பெண்ணோ அல்லது தெய்வ லோகத்து கந்தர்வஸ்திரியோ அல்லது அழகே ஒரு பெண்வடிவெடுத்து இப்பூலோகத்தில் ஜனித்தது போலும், ஒருக்கால் லக்ஷ்மியே மண்ணுலகை விஜயம் செய்யும் பொருட்டு வந்துதித்தனளோ; நான் பிரத்யக்ஷமாகப் பார்த்து அழகுள்ள ஸ்திரிகளென்று நினைத்திருந்த எல்லோரையும் ஒன்று சேர்த்தாலும் இவள் ஒருத்திக்கு சமானமாக சொல்லமுடியாது. இப்பேர்ப்பட்ட அழகிய உருவத்தை கனவிலும் காண்பதரிது. சித்திரம் எழுதுவதில் எத்தனையோபேர் கியாதிபெற்றிருக்கிறார்களே அவர்களில் ஒருவரேனும் இவளைப்போல் சித்திரம் வரைவார்களாவென்று நான் சந்தேகிக்கிறேன் என்று தனக்குள் தானே நினைத்துக்கொள்வான். பிறகு அவன் மோகனும்பாளைப் பார்த்தும் பார்க்காதவன்போல் நண்பனிடம் பேசிவிட்டு வீடுபோய்ச் சேர்வான்.

இராஜரத்தினம் நற்குண நற்செய்கைகள் உடையவனாதால் அன்னியஸ்திரிகளை தன் சகோதரிகளைப்போல் பாவித்திருந்தாலும், வில் பவர் (Will Power) என்று சொல்லப்படும் மனோதிட சக்தியினால் மனம்போன போக்கெலாம் விடாமல் அடக்கியாளும் திறமையுடையவனும்

யிருந்தபோதிலும், மோகனும்பாள்பேரில் தனக்கு உண்டான காதலை அடக்க இவை ஒன்றும் பயன்படவில்லை. இன்னும் சில தினங்களுக்குள் நான் அவளைக்கண்டு, என் எண்ணத்தை அவளுக்குத் தெரிவித்து, இஷ்டத்தைப் பூர்த்திசெய்துக் கொள்ளாவிடில் நான் இப்பூலோகத்தில் ஜனித்ததின் பயனென்னவென்று, தனக்குத் தானே சொல்லிக்கொள்வான். இனி இப்படியிருந்தால் பயனில்லை. எப்படியும் நான் அவளைத்தனியாக சந்திக்கும்படி தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டு தன் அறையில் மேஜைக்கெதிரிலுள்ள ஓர்நாற்காலியில் அமர்ந்து, ஏதோ ஒரு அவசியமான காரியத்தைப்பற்றி யோசனை செய்பவன்போல் மௌனமாய் உட்கார்ந்துகொண்டிருப்பான். சற்றுநேரத்திற்குப் பிறகு அவன் ஓர் தீர்மானத்திற்கு வந்தவன்போல் அந்நாற்காலியை விட்டெழுந்து, தன்னுடைய தினசரி வேலைகளைப் பார்க்க வாரம்பிப்பான்.

ஒரு நாள் பௌர்ணமியன்று பூரணச்சந்திரன் தன்னுடைய முழு ஒளியையும் இவ்வளவுதானென்று ஜனங்களுக்குக் காண்பிப்பதுபோல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அன்றைய சாயந்திரம் மந்தமாருதமானது அந்தமாய் வீசிக்கொண்டிருந்தது. மரத்திலுள்ள இலைகளெல்லாம் நான்கு திக்குகளையும் சுற்றிப்பார்ப்பதுபோல் காற்றினால் அலைந்துகொண்டிருந்தன. புஷ்பங்களெல்லாம் நன்றாக புஷ்பித்து புருஷர்களைக்கண்ட பெண்கள் நாணத்தால் தலை குனிந்துகொள்வது போல் ஓர்புறமாக சாய்ந்துகொண்டிருந்தன. அத்தோட்டத்தில் வசித்துக்கொண்டிருந்த குயில்கள் ஒவ்வொன்றும் தன்னுடைய சாமர்த்தியத்தை காட்டுவதுபோல் பாட ஆரம்பித்தன. அங்குள்ள

மரங்களில் வசித்துக்கொண்டிருந்த பஞ்சவர்ணக் கிளிகள் அழகில் தங்களுக்கு நிகர் யாரும் இல்லையென்று காட்டுவது போல் அங்குமிங்கும் தொத்தித் தொத்திப் பறந்துகொண்டிருந்தன.

மோகனம்பாள் சாப்பிட்டானதும், வழக்கம்போல் சற்றுநேரம் உல்லாசமாய் பொழுது போக்கும் பொருட்டு தோட்டத்திற்குத் தனியே சென்று, அங்குள்ள ஒவ்வொரு புஷ்பத்தையும் பரிக்ஷித்துப் பார்ப்பதுபோல் எல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு ஒரு மாஞ்செடியின்கீழ் வந்து நின்றுகொண்டு வானத்திலுள்ள நக்ஷத்திரங்களை எண்ணிப் பார்ப்பவள்போல் ஆகாயத்தை உற்று நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க, மோகனம்பாளைத் தனியேகண்டு தன் எண்ணத்தை அவளுக்குத் தெரிவித்து தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்துக்கொள்ள வேண்டுமென்ற அவாமேலிட்ட இராஜரத்தினம் பங்களாவிற்கு பின்புறமாக வந்து தோட்டத்திலுள்ள ஒரு பலாச்செடியின் மறைவில் நின்றுகொண்டிருந்தான்.

மோகனம்பாள் ஆகாயத்தை ஆனந்தத்துடன் உற்று நோக்கிக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து, அவளுக்கு தெரியாமல் பின்புறமாகவந்து அவளை அணுகி என் கண்ணே ! என்று; சொல்லி அவளுடைய இரண்டு கைகளையும் பிடிக்கப்போனான். தன்னைத்தவிர தோட்டத்தில் வேறுயாரும் இல்லையென்று நினைத்துக்கொண்டிருந்த மோகனம்பாள் ஓர் ஆண்குரலைக் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள். திரும்பிப்பார்க்கவே நெடுநாளாக தான் காதலித்த ஓர் புருஷன் நிர்க்கக்

கண்டாள். உடனே அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் குணங்களைத் தனக்கு அணிகலமாகக் கொண்டிருந்த மோசனும்பாள் வேடனைக்கண்ட மான்போல் அதிவேகமாக பங்களாவுக்குள் நுழைய வாரம்பித்தாள். இதையறிந்த இராஜரத்தினம் அவளைப் போகவொட்டாமல் வழிமறித்துக்கொண்டு, "என் கண்ணே! மோகனம்! நான் இப்போது உன்னை கேட்கப்போகும் கேள்விகளை நான் விளையாட்டாக கேட்பதாகவும், அல்லது புத்தி ஸ்வாதீனமில்லாமல் கேட்பதாகவும் நினைத்துக்கொண்டு அலக்ஷியம் செய்யாமல், அவைகளுக்கு அனுகூலமான உத்தரமளிப்பாயென்று நான் நம்புகிறேன். நாமிருவரும் சிறுவர்களாயிருந்தபோது நாம் அடிக்கடி சந்தித்துக் கொண்டிருந்தோம். ஆனால் நீ யௌவன பருவத்தை அடைந்த பிறகு நான் உன்னை சந்திக்க சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அது முதற்கொண்டு நான் உன்னை எப்போது சந்திக்கப் போகிறேனென்ற அவாவுடன் காத்துக்கொண்டிருந்தேன். இப்போது நான் உன்னைக்கண்டதும் எப்பொழுதும் பெறமுடியாதென்று எண்ணிக் கொண்டிருந்த பிறவிக்குருடன் கண்களைப்பெற்றால் எவ்வளவு ஆனந்தமடைவானோ அவ்வளவு ஆனந்தத்தை அடைந்தேன்" என்று சொல்லிவிட்டு, என்ன மோகனு! நான் கேட்கும் கேள்விகளுக்கு உததரமளிக்க விருப்பமுண்டா இல்லையா?

**மோகனும்பாள்:**—ஒரு யௌவன ஸ்திரியோடு அவளுடைய பெற்றோர்கள் இல்லாமல் தனிமையாய் இருக்கும் சமயம்பார்த்து பேசுவது தங்களைப்போன்ற ஆடவர்களுக்குத் தகுதியல்லவே.

**இராஜரத்தினம்:**— நீ சொல்வதுபோல் தகுதியல்லவென்று எனக்குந்தெரியும். ஆயினும் உன்மேல் எனக்குண்டா

யிருக்கும் காதல் மேலிட்டு இதையெல்லாம் ஒரு பொருட்படுத்தாமல், உன் பொருட்டு எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அதை அனுபவித்து உனக்காக என் உயிரைவிட நான் காத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை உண்மையாக நம்பு. நீ எனக்கு அநுகூலமான உத்தரவு அளிக்காவிட்டால் நான் என் உயிரை மாய்த்துக்கொள்வேன் என்பதையும் நீ மனதில் வைத்துக்கொள்.

மோகனம்பாள் :—சரி, அதிருக்கட்டும் எனக்கு நேரமாகிறது. எந்த காரணத்தைப்பற்றித் தாங்கள் இப்படி என்னைப் போகவொட்டாமல் வழிமறித்துக் கொண்டிருக்கிறீர். சீக்கிரம் சொல்லுங்கள், நான் போக வேண்டும்.

இராஜரத்தினம் :—எனது உயிருக்குயிரான மோகனா! நான் உன்னுடைய காதல் என்னும் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். என்னை அவ்வலையினின்றும் மீட்கவேண்டும். நீ அவ்வாறுசெய்ய தவறுவாயாகில் என் உயிர் இவ்வுடலைவிட்டுப்போகும் என்பதை நீ நிச்சயமாய் நம்பலாம். அப்படி ஒருவன் உன் பொருட்டு உயிர் துறக்க நீ சம்மதிக்க மாட்டாய் என்று நான் உறுதியாகக் கூறுவேன்.

இதைக்கேட்ட மோகனம்பாள் வெட்கத்தால் தலை குனிந்துகொண்டு, ஐயா! தாங்கள் சொன்னது வாஸ்தவந்தான். ஒருவருக்கு ஒரு கஷ்டம்நேரிட்டால் நான் பார்த்துக்கொண் டிருக்கமாட்டேனாகிலும் என்மேல் காதல் கொண்ட ஒருவருக்கு மறுத்து உத்தரவளிக்கமாட்டேன் என்று தாங்கள் நினைப்பது சரியல்ல. ஆனாலும்

நீங்கள் கேட்கும் கேள்வி நமதிருவருடைய வாழ்நாளி லுள்ள சுகதுக்கங்களை குறித்திருப்பதால், அதற்கு இப் பொழுதே எப்படி உத்தரவளிப்பது. சற்று யோசித்து தான் சொல்லவேண்டும் என்று பதிலுரைத்துத் தான் பங் களாவுக்குப்போக ஒரு அடியெடுத்து வைத்தாள். உடனே இராஜரத்தினம் அவளுடைய இருகரங்களை யும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இவ்வாறு சொல்லி விட்டுப்போய்விட்டால் எப்படி ? நாம் இருவரும் மறுபடி எப்பொழுது எங்கு சந்திப்பது ?

**மோகனும்பாள் :**—ஐயா ! தாங்கள் இனிமேல் இங்கு வந்து என்னைப் பார்க்கவேண்டாம். நாமிருவரும் இங்கு சந்திப்பதை எனது பெற்றோர்கள் கண்டுவிட்டால் அவர்கள் என்ன நினைப்பார்கள்.

**இராஜரத்தினம் :**—ஆனல் நான் உனக்கு கடிதம் போடட்டு மா ? நீ எனக்கு பதிலெழுதுகிறாயா ?

**மோகனும்பாள் :**—தாங்கள் அப்படி செய்வது சரியல்ல. கலியாணமாகாத பெண்களுக்கு புருஷர்கள் கடிதம் எழுதுவது சந்தேகத்துக்கிடமல்லவா. அதனுல் அதை பெற்றோர்கள் வாசித்துப்பார்க்க நேரிடும்.

**இராஜரத்தினம் :**—ஆனல் நமது காரியமாவதெப்படி ?

**மோகனும்பாள் :**—நான் உங்களுக்கு ஏதாவது சமாச்சாரம் தெரிவிக்க வேண்டுமென்றால், ஓர் கடிதமெழுதி இம் மரத்தின்கீழ் வைத்து மண்ணை மூடி விடுகிறேன். தாங் கள் அதைப் பார்த்துக்கொண்டு ஏதாவது பதில் தெரி விக்கவேண்டியதா யிருந்தால் தாங்களும் அப்படியே செய்து வைத்தால் நான் அதைப் பார்க்கக் கூடும் என்று சொல்லிவிட்டு தன்னுடைய படுக்கை அறைக்

குச்சென்று படுத்துக்கொண்டாள். ஆனால் அவளுக்கு தூக்கம்பிடிக்கவில்லை. அன்று தோட்டத்தில் நடந்த சமபவங்களைப்பற்றியும், தானென்னபதில் எழுதுவ தென்பதைக் குறித்தும் யோசித்துக் கொண்டேயிருந் தாள்.

இது இப்படியிருக்க வீட்டிற்குச்சென்ற இராஜரத்தி னம் தன்னுடைய காரியம் பலிக்குமோ பலிக்காதோ யென்ற சந்தேகத்தினால் அவனுக்கும் தூக்கம் பிடிக்க வில்லை. அடிக்கடி கெடியாரம் பார்த்துக்கொண்டு இந்த கிளாக் என்ன இவ்வளவு சுலோவாக போகிறதே, இப்போது தான் "பீ ஆர் அண்டு சன்ஸில்" வாங்கி மூன்று வருஷங்க ளாகிறது. ஐந்து வருஷம் காரண்டீயாச்சே! நான் இந்த வாரம் கீ கொடுக்கவில்லைபோலும் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

மறுநாள் காலை ஐந்தடித்ததும் யாருக்கும் தெரியா மல் தோட்டத்திற்குள் வந்து குறிப்பிட்ட மரத்தடியில ஏதாவது கடிதமிருக்கிறதாவென்று தேடிப்பார்த்தான். அங்கு ஒரு கடிதமும் இல்லாததைக்கண்டு அதிகவருத்தத் துடன் "யோசித்துச் சொல்லுகிறேன் என்று சொன் னாளே ஒருக்கால் நாளைக்கு எழுதிவைப்பாள் போலிருக்கி றது" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டவனாய், மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். அன்று அவனோடு பேசவந்தவர்களை யெல் லாம் கோபித்துக்கொண்டான். அன்றெல்லாம் அவன் சரி யாக சாப்பிடாமல் தன்னுடைய வேலைகளையும் பார்க் காமல் மௌனமாயிருந்தான்.

இது இவ்வாறிருக்க யோகனம்பாள் தான் இராஜ ரத்தினத்தை சந்தித்த மறுநாளே அவனுக்கு கடிதம்எழுது

கிறேன் என்று சொல்லிவிட்டு எழுதாததினால் அவன் எங்கு வந்து தன்னை மறுபடியும் சந்திக்கப் போகிறானோ என்ற பயத்தால், தான் அவனை சந்தித்த மூன்றாம்நாள் ஓர் கடிதம் எழுதி, தான் சொன்னபடியே குறிப்பிட்ட மரத்தடியில் வைத்துவிட்டு, தன் அறைக்குப்போய் புக் ஷெல்ப்பிலுள்ள ஒரு நாவலை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

தன்னுடைய வேண்டுதலுக்கு மோகனாம்பாள் என்ன பதிலெழுதுகிறாளோ என்ற அவாவுடைய இராஜரத்தினம் மறுதினமும் அதே நேரத்தில் அந்த மரத்தடியில் வந்து பார்த்தான். அங்கு ஒரு கடிதம் இருக்கப்பார்த்து அதை எடுத்துக்கொண்டு, அதிவிரைவாக தன் வீட்டிற்குச் சென்று தன்னுடைய அறைக்குட்போய் கதவுகளைத்தாளிட்டுக்கொண்டு வாசித்தான்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது :—

சண்முகானந்த விலாஸ்,
சென்னை, ஜூன் மீ 5-தேதி.

எனது பால்ய நண்பா !

தாங்கள் என்னை ஜூன் மீ 3-தேதி இரவு 9-மணிக்கு தோட்டத்தில் சந்தித்தது முதல் சஞ்சலமில்லாமல் உல்லாசமாயிருந்த என் மனது, ஒருவித வேறுபாடடைந்திருக்கிறது. தங்களுக்கு என்மேலுண்டான காதல் மிகுதியால் கன்னிகையான எனதிருகரங்களையும் என் அனுமதியின்றி பிடித்துக்கொண்டீர்கள். அன்றுமுதல் வேறு புருஷர்களைக்கண்டால் எனது சகோதரர்களாக பாவித்துவருகிறேன். எனக்காக உயிரையும் விடத் துணிந்திருக்கும் தங்களுக்கு யாதொரு இடையூறும் நேராமலிருக்கும்படி கட

வுளைப் பிரார்த்திக்கிறேன். நம்முடைய விவாகத்தைப்பற்றி பிறகு யோசித்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

தங்களன்பிற்கிசைந்த

மோகனும்பாள்.

இதை வாசித்ததும், இராஜரத்தினத்துக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. தான் வாசித்தது உண்மை தானு, அல்லது தான் மனதில் எண்ணியிருந்தது கடிதத்தில் எழுதியிருப்பதுபோல் தோற்றுகிறதோ வென்ற சந்தேகத்தினுல் இரண்டு மூன்றுதரம் வாசித்தான். (அநேகமாக ஜனங்கள் சந்தோஷ செய்தியை கேள்விப்பட்டால் இரண்டு மூன்றுதரம் சொல்லும்படி கேட்பார்கள். அல்லது கடிதத்தை வாசித்தால், படித்ததையே திருப்பித் திருப்பி பலமுறைப்படிப்பார்கள்) பிறகு இராஜரத்தினம் தனக்கு கிடைத்த கடிதத்தைப் பத்திரப் படுத்திக்கொண்டு அதற்கு ஒரு பதிலெழுதி, தான் கடிதத்தைக்கண்டெடுத்த அதேயிடத்தில் வைத்துவிட்டு, வீடுவந்து சேர்ந்தான்.

அன்று சாயங்கிரம் மோகனும்பாள் புஷ்பங்களை பரிப்பதற்கு தனிமையாக தோட்டத்திற்கு வந்தாள். அங்கு மாமரத்தடியில் ஒரு பழம் நன்ருகப்பழுத்து விழுந்திருப்பதைப்பார்த்து, எடுக்க அதனருகிற் செல்ல, அங்கு மண்குவித்திருப்பதைக் கண்டு கிளறிப்பார்த்தாள். அதில் ஒரு கடிதம் இருக்க அதை ஆவலுடன் எடுத்துக்கொண்டு, அங்குவாசித்தால் யாராவது பார்க்கப்போகிருர்களென்ற அச்சத்துடன் தனதறைக்குள் சென்று, தானே வாசித்துக்கொண்டாள்.

சென்னை ராமமந்திரம்.
ஜ-ன்மீ 5-தேதி.

கற்புக்கரசே! குயிலையும் பழிக்கச்செய்யும் குரலை யுடைய மோகனா நான் உன்னுடைய கடிதத்தை கண்டதும் அநுபவித்த சந்தோஷம் இதுவரையிலும் அநுபவித்ததே கிடையாது. நீ எனக்கு இன்று சந்தோஷ முண்டாக்கியதுபோல் நான் உனக்கு ஆயுள்பரியந்தம் சந்தோஷமுண்டாக்க முயல்வேன் என்பதை நீ நிச்சயமாய் நம்பலாம். உன் அன்பான கடிதத்தை நான் கண்டபிறகு தான் என்மனம் ஒருவாறு திருப்தி அடைந்திருக்கிறது. நீ எனக்கு பிரதி கூலமான உத்திரவளித்திருந்தால் நான் இக்நேரம் எமபுரம் சென்றிருப்பேன். நமது விவாகத்தைக்குறித்து நான் ஒன்றும் அவசரப்படவில்லை.

இப்படிக்கு,
உனது மனதிற்கிசைந்த பணாளன்,
இராஜரத்தினம்.

# அத்தியாயம் 5.

---

## விருப்பமில்லா விவாகம் விபத்தையுண்டாக்கும்.

ஒரு நாள் சாயந்திரம் 3-மணிக்கு இராஜாத்தினத்தின் தாயார் மீனாக்ஷியம்மாள் தன் புருஷனாகிய ஏகாம்பர முதலியாருக்கு வெற்றிலைமடித்துக் கொடுத்துக்கொண்டே "நாதா! நமது குழந்தை இராஜாத்தினத்துக்கு தக்க வயதாகியும் அவனுடைய விவாகத்தைப்பற்றி தாங்கள் ஒன்றும் ஏற்பாடு செய்யாதிருந்தாலெப்படி?" என்று சொன்னாள்.

ஏகாம்பர முதலியார் :—மீனாக்ஷி! நான் அதைப்பற்றி பிரயத்தினம் ஒன்றும் செய்யவில்லையென்று உனக்கு என்ன தெரியும். நானும் எத்தனையோ இடங்களில் தான் பார்த்துவருகிறேன். ஆனால் ஒன்றும் நமக்குத் தகுந்ததாயில்லை.

மீனாக்ஷியம்மாள் :—என்ன நாதா! நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே. பெண் ஏன் பார்க்கவேண்டும்; வீட்டில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கலைவதுபோல் உமது மைத்துனராகிய எனது அண்ணன் மாணிக்க முதலியாரிடத்தில் பெண்ணிருக்க வெளியே யெல்லாம பார்ப்பானேன்.

ஏகாம்பர முதலியார் :—நீ சொல்வது சரிதான். அதைப் பற்றி உன் அண்ணன் மாணிக்க முதலியாரும் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அப்படி உன் அண்ணன் குமாரத்தியாகிய ஜெகதாம்பாளை நமது குழந்தை இராஜாத்தினத்துக்கு கலியாணம் செய்து வைப்பதாயிருந்தால், நான் அதை எத்தனையோ

நாளைக்குமுந்தி முடித்திருப்பேன். ஆனால் அது எனக்கு இஷ்டமில்லை.

மீனாக்ஷியம்மாள் :—நாதா ! ஏன் அப்படி விருப்பமில்லையென்றுசொல்லுகிறீர்கள். இராஜரத்தினத்திற்குஜெகதாம்பாளை கட்டாமல் யாரை அவனுக்குமனைவியாக்க உத்தேசித்திருக்கிறீர். ஏன் அவளுக்கு என்ன குறை ? பெண் கருப்பா யிருந்தாலென்ன ? சம்சாரி பெண்களுக்கு அழகு என்னத்திற்கு ? குணம்தான் தேவை. ஒருக்கால் அவர்கள் ஏழைகள் என்று யோசிக்கிறீர்களா ? ஏன் சீதனம் கொடுக்கும்போது இரண்டு காணி நிலம் வைக்கமாட்டார்களா ?

ஏகாம்பர முதலியார் :—நீ சொல்வதுசரியல்ல. பட்டணத்து பிள்ளைகள் நாட்டுப்புறத்து பெண்களைவிரும்பார்கள். இப்பொழுது நான் அவர்களை ஏழைகள் என்று சொல்லவில்லை. அவர்களுடைய இரண்டுகாணிநிலம் இங்கு யாருக்குவேண்டும். நமக்கிருக்கும் சொத்தை வைத்துக்கொண்டு அவன் செலவழித்தாற்போதும். நான் இப்பொழுது உன் அண்ணன் மகளைக் கொள்ள மறுத்ததின் காரணமென்னவெனில் நாட்டுப்புறத்துப் பெண்களுக்கு படிப்பு இன்னதென்றே தெரியாது. அதுவுமல்லாமல் உன் அண்ணன் மகளுக்கு அழகு என்பதே கிடையாது. அப்பேர்ப்பட்ட பெண்ணை பட்டணத்திற்பிறந்து வளர்ந்த நமது குழந்தை விரும்புவானா ?

மீனாக்ஷியம்மாள் :—தாங்களே இப்படி சொன்னால் பின் அவன் என்ன சொல்லுவான். நாம் சொன்னபடி அவன செய்யவேண்டியவன்தானே ! நாம் பெண்

ணைப்பார்த்து எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு, தாலியைக்கட்டென்றால் அவன் கட்டவேண்டிய வன்தானே. நமது பெரியவர்களெல்லாம் இப்படித் தான் பிள்ளைகளின் அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டு கல்யாணம் செய்துவந்தார்களா ?

ஏகாம்பர முதலியார் :—அந்த காலத்துப் பிள்ளைகளுக்கும் இந்தகாலத்துப் பிள்ளைகளுக்கும் அதிக வித்தியாஸமுண்டு.

மீனாக்ஷியம்மாள் :—நீங்கள் சொல்வது ரொம்பநன்றாயிருக்கிறது. இந்தகாலத்துப் பிள்ளைகளுக்கு என்ன கொம்பு முளைத்திருக்கிறதுபோலும். ஏது நீங்கள் ஒன்றும் தெரியாமல் பேசுகிறீர்களே. நமக்கு தெரியாத ஒரு புதுயிடத்தில் பெண்பார்த்துவிட்டால் அங்கேதாவது தப்பு இருந்தால் பிறகு யார்கஷ்டப்படுவது. குலத்தைப்பார்த்து ஒரு குரங்கைகொள்ளென்பார்கள். பெண்கள் படித்தென்ன ? ஆபிஸ் உத்தியோகம் செய்யப்போகிறார்களா ? எவ்வளவு படித்தாலும் அடுப்பண்டை இருக்கவேண்டியவள்தானே ? பெண் அழகாயிருந்து நாற்காலிமேல் உட்கார்ந்து கொண்டால் புருஷன்வயிர் நிரம்பிவிடும்போலிருக்கிறது. பெண் புத்திசாலித்தனமாய் வீட்டுவேலைகளைக் கொண்டு மாமன் மாமியாரை எதிர்க்காமலிருந்தால் போதுமானது.

ஏகாம்பர முதலியார் :—மீனாக்ஷி ! நீ பேசுவதைப்பார்த்தால் உனக்கு ஜெகதாம்பாளையே கொள்ளவேண்டுமென்ற விருப்பம் இருக்கிறதுபோல் தெரிகிறது.

மீனுக்ஷியம்மாள் :—என்ன அப்படி சொல்லுகிறீர்கள். நம்ம இனத்தில் ஒருபெண்கொண்டால் நம்முடைய அந்தியகாலத்தில் அது ஆதாரவாயிருக்கும்.

ஏகாம்பர முதலியார் :—எனக்கு உன் அண்ணன் மகளைக் கொள்ள கொஞ்சமேனும் விருப்பம் கிடையாது.

ஜெகதாம்பாளை இராஜரத்தினத்திற்கு விவாகம் செய்து வைக்க இஷ்டமில்லையென்று ஏகாம்பர முதலியார் சொன்னதும், மீனுக்ஷியம்மாள் அதிக கோபத்துடன், தலைவிரி கோலமாய்க் கண்களில் நீர்த்ததும்ப "எனக்கிருப்பது ஓர் ஆண் குழந்தை அதற்கு என்னிஷ்டம்போல் கல்யாணம் செய்து பார்க்க நான் கொடுத்துவைக்க வில்லையே" என்று சொல்லிவிட்டு தரையில் படுத்துக்கொண்டாள். பிறகு ஏகாம்பர முதலியார் என்ன சமாதானம் சொல்லியும்அவள் கேட்க வில்லை. ஜெகதாம்பாளைத்தன் புத்திரனுக்கு விவாகம்செய்து வைக்காவிட்டால் தான் உயிரை மாய்த்துக் கொள்வதாக உறுதியாய்ச் சொல்லிவிட்டாள். அந்தோ பாவம்! ஏகாம்பர முதலியார் முதலிலிருந்து பெண்சாதி சொற்படி நடந்துவிட்டு இப்பொழுது மறுத்தால் முடியுமா? இப்பவும் அவள் சொற்படி நடக்கவேண்டியதுதான். கடைசியாக அவளிஷ்டப்படி தான் செய்வதாக ஒப்புக்கொண்ட பிறகு அவள் தன்னுடைய வேலைகளைப்பார்க்க எழுந்தாள்.

ஒரு பெண்ணை ஒருவருக்கு விவாகம் செய்துகொடுப்பதாயிருந்தால், தாயார் தனவந்தனுக்கு கொடுக்கவேண்டுமென்று விரும்புவாள். தகப்பனர் கல்வி யறிவுடையவனுக்கு கொடுக்க இஷ்டப்படுவார். பெண்ணின் சகோதரர்களோ தங்களோடு உல்லாசமாகயிருப்பவனுக்குக் கொடுக்

கப்பிரியப்படுவார்கள். பந்துக்களோ நல்லகுலத்திற் பிறந்தவனுக்குகொடுக்க சம்மதிப்பார்கள். பெண்ணோ அழகுள்ள வாலிபனை மணந்துகொள்ள ஆசைப்படுவாள்.

அநேகர் சிறு கன்னிகைகளை பணத்துக்காசைப்பட்டு மீசையும், தாடியும் நரைத்த ஆசை நிறக்காத கிழவர்களுக்கு மணம் செய்து கொடுக்கிறார்கள். அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்திருத்தலரிது. அநேகமாக கிழவர்களை விவாகம் செய்துக்கொண்ட கன்னிகைகள் தங்களுடைய யௌவனபிராயத்திலேயே விதவைகளாகி புருஷனுடையசொத்துக்களை எடுத்துக்கொண்டு அதிசீக்கிரத்தில் வீடுவந்துசேர்ந்து இளம் குமாரர்களைக் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள்.

சில பெண்கள் படிப்பதினால் கள்ளப்புருஷருக்கு கடிதம் எழுத உபயோகப்படுகிறது என்கிறார்கள். அவர்கள் கொண்ட அபிப்பிராயம் தப்பு என்று நாம் ஆக்ஷேபிப்போம். எழுதப்படிக்கக் கற்றுக்கொண்ட ஸ்திரிகள் மாத்திரம் அப்படி செய்வார்களே தவிர, நல்ல கல்வியறிவுடைய ஸ்திரிகள் அப்படிச்செய்யமாட்டார்களென்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். முற்காலத்திலுள்ள ரிஷிகளுடைய கல்வியறிவு வாய்ந்த பத்தினிமார்கள், எப்படி நடந்து கொண்டார்களென்பதை அவர்களறிந்திருந்தால் அவ்வாறு சொல்லமாட்டார்கள். பெண்கள் வாசித்திருந்தால்மாத்திரமே தங்கள் கணவருடைய வரவுக்குத் தக்க செலவு செய்வார்கள். புருஷர்கள் துன்பமுற்றிருக்குங் காலத்திலும் அவர்களுக்கு இன்பமுண்டாகப் பேசித் தேறுதல் கூறுவார்கள்.

விருப்பமில்லாத தம்பதிகளுக்கு தாய்தந்தையர்கள் கட்டாயப்படுத்தி கலியாணம் செய்து வைப்பார்களேயா

னால், அவர்களுடைய வாழ்நாட்கள் முழுவதும் வீணநாட்களாகக் கழிப்பார்கள். அவர்களுக்கு சச்சரவு நேரிடும்போதெல்லாம் புருஷன் பெண்சாதியைப்பார்த்து "எனக்கென்று பிரமன் உன்னை சிருஷ்டித்தானே" என்று வருத்தத்துடன் கூறுவான். அவன் அதற்கு "என்னை எங்கெங்கோ நல்ல இடங்களிலெல்லாம் கேட்டிருக்க அவர்களுக்கெல்லாம் கொடாமல் பாழுங் கிணற்றில் தள்ளுவதுபோல் உன்னிடத்தில் என்னைக்கொண்டுவந்து தொலைத்தார்களே" என்று சலிப்புடன் கூறுவாள்.

இவ்வத்தியாயத்தின் முதலில் கூறியவாறு ஜெகதாம்பாளை இராஜரத்தினத்துக்கு கலியாணம் செய்துவைக்கும் பொருட்டு மீனாக்ஷியம்மாளும், ஏகாம்பர முதலியாரும் தக்க ஏற்பாடுகளை அதிக விரைவாக நடத்திக்கொண்டு வந்தார்கள்.

இவைகளையறிந்த இராஜரத்தினம் தனக்கு ஜெகதாம்பாளை விவாகம்செய்துகொள்ள சற்றும்மனமில்லாததினால் தன்தாயிடம் சென்று தனக்கு விவாகம் வேண்டாமென்று மறுத்தான். அதைக்கேட்ட அவன் தாய் அதிக கோபங்கொண்டு தாய்தந்தையர்களுடைய இஷ்டப்படி நடக்க வேண்டியது புத்திரர்களுடைய கடமையென்றும், விவாக விஷயத்தில் நீ தலையிடுவது அனாவசியமென்றும் சொல்லி அனுப்பிவிட்டாள்.

இனி யென்னசொல்லியும் தன் தாயார் கேட்கமாட்டாளென்பதை யறிந்த இராஜரத்தினம் தன்னறைக்குள் சென்று அன்றையதினத்து "மதருஸ் மெயில்" (Madras Mail) என்னும் தினசரிப் பத்திரிகையிலுள்ள "வாண்டெட்" (Wanted) என்னும் பகுதியை வாசித்தான்.

## விருப்பமில்லாவிவாகம் விபத்தையுண்டாக்கும்

அதில் கீழ்வரும் ஒரு சமாச்சாரமடங்கிய ஒரு பிரசுரமிருந்தது.

தேவை (Wanted)

நல்ல கல்வியும், நன்னடக்கையும், நற்சாக்ஷிப்பத்திரங்களையும் உடைய ஒருவர் பூனாவிலுள்ள "ஜீஜீபாய் அண்டு சன்ஸ்" கம்பனிக்கு (Jeejeeboy & Sons) சூப்பரின்டெண்ட் (Superintendent) வேலைக்கு இம்மாதம் 30-ந்தேதிக்குள் முயற்சி செய்யலாம்.

அதை வாசித்தவுடனே இராஜரத்தினத்திற்கு ஒருவித திருப்தியுண்டாயிற்று. ஏனெனில் அவன் அங்கே இருந்திருப்பானாகில் அவனுடைய பெற்றோர்கள் அவனுக்கு விருப்பமில்லாதபெண்ணை விவாகம் செய்துவைத்திருப்பார்கள். இராஜரத்தினம் தன் கையிலிருந்த 200-ரூபாயில் முக்கியமான சில உடைகளையும், சாமான்களையும் வாங்கிக்கொண்டு, 9-ந்தேதி யன்று சாயங்காலம் 6¼-மணிக்கு இரண்டாம்வகுப்பு டிக்கட்டு(Second Class Ticket) வாங்கிக்கொண்டு பொம்பாய் மெயில் (Bombay Mail) ஏறி பூனாவுக்கு வந்து சேர்ந்தான். பூனாவைச்சேர்ந்ததும், ஜீஜீபாய் கம்பனியின் அதிகாரிகளைக் கண்டான். அவர்கள் அவ்வேலைக்கு தகுந்தவனென்று தெரிந்துகொண்டு அவ்வேலையை ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவளித்தார்கள். அவன் அவ்வேலையை ஏற்றுக்கொண்டபிறகு, தான் தன் இருப்பிடத்தைப்பற்றி தாய்தந்தையர்களுக்குத் தெரிவித்தான்.

அவனுடைய பெற்றோர் அவன்விரும்பாத பெண்ணை அவனுக்கு கலியாணம் செய்ய எத்தனித்திருந்ததால் இவ்வளவுவிபத்துகள் உண்டாயிற்றென்று நாம் உறுதியாகக் கூறுவோம்.

# அத்தியாயம் 6.

## கனவிலும் நினையாத கொலை

அக்டோபர் மாதம் 6-ந்தேதியன்று காலை புரசைவாக்கம் ஆண்டியப்பன் தெருமுகனையிலுள்ள ஒரு வெற்றிலை பாக்கு கடைக்கெதிரில் தலையில்லாத ஒருபிணம் விழுந்து கிடந்தது. கொலைசெய்யப்பட்டவர் ஆமதாபாத் வேஷ்டி கட்டிக்கொண்டும், காலில் செருப்பு போட்டுக்கொண்டும், உடம்பில் ஒரு நீளமான அல்பாக்காகோட்டும் அணிந்து கொண்டிருந்தார். மேற்கூறிய வீதி கிழக்கு மேற்குமாயுள்ளது. உதிரம் மேற்குமுகமாய்த்தான் பரவியிருந்தது.

அத்தெருமுகனையில் வெற்றிலைப்பாக்கு கடைவைத்திருக்கும் எதிராஜலு நாயுடு கடையை திறக்கும்பொருட்டு காலை 6-மணிக்கெல்லாம் கடையண்டைவந்தார். அவர் அச்சவத்தைக் கண்டவுடனே அடியற்றமரம்போல் ஐந்து நிமிஷம்வரையில் திகைத்துநின்றார். அச்சவம் தன்கடைக்கு எதிரிலிருப்பதால் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தன்மேல் சந்தேகப்படப்போகிறார்களென்று, உடனே அவர் போலீஸுக்குத்தெரிவித்து, ஒரு இன்ஸ்பெக்டரையும் கான்ஸ்டேபிலையும் அழைத்துவந்தார். இவர்கள் வருவதற்குள்ளாக ஜனங்கள் அதிகமாக கும்பல் கூடிவிட்டார்கள்.

எதிராஜலு நாயுடு அழைத்துவந்த இன்ஸ்பெக்டர் பெயர் துரைசாமி முதலியார். அவர் அப்பொழுதுதான் புதிதாக போலீஸ் உத்தியோகத்தில் அமர்ந்ததால் தான் நல்ல சாமர்த்தியமுள்ள உத்தியோகஸ்தன் என்று தன் அதிகாரிகளுக்குத் தெரியும்பொருட்டு, அதிகக் கஷ்டப்

பட்டு ஊக்கத்துடன் உழைத்துவந்தார். ஆனால் இவருக்கு பெருமை பாராட்டிக்கொள்ளும் குணமுண்டு. கான்ஸ்டேபில்கள் கண்டுபிடிக்கும் கேஸில் தானாக தலையிட்டுக் கொண்டு, அக்கேஸ் ஜெயமடைந்தபிறகு, நாலுபேர்முன்பாக தான் அக்கேஸைக் கண்டுபிடித்ததுபோல் தன்னைப்பற்றி அதிகமாக புகழ்ந்துபேசுவார். அவர்கள் அவருக்கு திருப்தி உண்டாக்கும்படி அவரைமெச்சி பேசுவார்கள். அதனால் அவர் அதிக ஆனந்தமடைவார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார் அச்சவத்தை இப்படியும் அப்படியும் பிரட்டி, அதைச்சற்றுநேரம் உற்று நோக்கிவிட்டு பிறகு ஏதோ ஓர் தீர்மானத்துக்கு வந்தவர்போல், பெருமூச்சுவிட்டெழுந்து, அக்கூட்டத்திலுள்ள சிலநண்பர்களை நோக்கி கொலைசெய்தவரை தான் எளிதில் கண்டு பிடித்துவிடுவதாகக் கூறினார்.

**இன்ஸ்பெக்டர் :**—அடே! டுவல் சேவன்டித்திரி? தூங்கிக் கொண்டிருக்கிறாயா என்ன? ஜனங்கள் இப்படிவந்து சூழ்ந்துகொண் டிருக்கிறார்களே. எனக்கு கொஞ்சங்கூட காற்று வரவில்லையே. அவர்களை கொஞ்சம் விலக்கக்கூடாதா?

**கான்ஸ்டேபில் :**—சார்! இதுவரையில் நான் மரியாதையாய்ச் சொல்லிப்பார்த்தேன். அவர்கள் போவதாயில்லை. இனிமேல் என்வேலையைப் பார்க்கவேண்டியதுதான்.

**இன்ஸ்பெக்டர் :**—துபாஷ் சதாசிவ முதலியார்கொலைசெய்யப்பட்டதாகவும், அவருடையகுமாரர் தாமோதர முதலியாரை தன்னிடம் வரும்படியாயும் ஒரு கடிதமெழுதி கான்ஸ்டேபிலிடம் கொடுத்து

அதிசீக்கிரம் அழைத்துவரும்படி கட்டளை யிட்டார்.

தமோதர முதலியார் தன் தகப்பனர் முந்தினநாளிரவு வீட்டிற்கு வாராததினல் தனக்குத்தெரிந்த இடங்களிலெல்லாம் தேடிவிட்டு வருத்தத்துடன் சிந்தித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் இன்ஸ்பெக்டரின் உத்தரவுபடி சேவகன் அக்கடிதத்தை தாமோதர முதலியாரிடம் கொண்டுவந்து கொடுக்க, அவர் அக்கடிதத்தை வாசித்து முடிந்ததும், முகம்வேறுபாடடைந்தது. மீண்டும் அவர் முகம் அதிக துக்கத்தையும். ஆச்சரியத்தையும் குறித்தது. உடனே அவர் அக்கடிதம் கொண்டுவந்த சேவகனைப் பின் தொடர்ந்து போனர்.

தாமோதர முதலியார் :—ஐயா ! இன்ஸ்பெக்டர் அவாள் ? தாங்கள் இக்கேஸை எப்பொழுது கண்டுபிடித்தீர்.

இன்ஸ்பெக்டர் :—இன்றுகாலையில் தான்.

தாமோதர முதலியார் :—தாங்கள் கொலைசெய்தவரை கண்டு பிடிக்க முடியுமா ?

இன்ஸ்பெக்டர் :—என்ன ஐயா ! அப்படி சொல்லுகிறீர். அப்படி எனக்கு இக்கேஸைக்கண்டுபிடிக்க திறமை இலலாவிட்டால், நான் ஏன் இந்த பெயரைவைத்துக் கொண்டு திரியவேண்டும்.

தாமோதர முதலியார் :—ஐயா ! தாங்கள் என்பேரில்கோபித்துக்கொள்ளவேண்டாம். எத்தனைநாளைக்குள் தாங்கள் கொலைசெய்தவரை கண்டுபிடிக்கக்கூடும் ?

இன்ஸ்பெக்டர் :—கோபமென்ன இருக்கிறது. இப்பிரமாதமான கேஸைக்கண்டுபிடிக்க எத்தனை நாள் வேண்டும.

நான் ஒருவனே இக்கேசை வெகுசீக்கிரத்தில் சுலப மாக கண்டுபிடித்து விடுவேன்.

தாமோதர முதலியார் :—ஐயா ! அனுல் அதிசீக்கிரத்தில் கொலைசெய்தவரை கண்டுபிடிக்கும்படி தங்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்று சொலலிவிட்டு, தாமோதா முதலியார் வீட்டுக் குச்சென்று தன்னுடைய தாயாரிடமும், தங்கையிடமும் தன் தகப்பனாராகிய சதாசிவ முதலியார் கொலைசெய்யப் பட்டதாக தெரிவித்தார்.

அதைக்கேட்டதும் அவர்கள் மாத்தின்மேல் இடி விழுந்தால் மாமானது பூமியில் எப்படிவிழுமோ அதைப் போல் அவர்கள் தரையில்விழுந்து புரண்டு புரண்டு அழத் தொடங்கினார்கள்.

தாமோதர முதலியார் மனதில் கொலை செய்தவரை கண்டுபிடிப்பதற்கு ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தரையும் அமர்த்தவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. அவர் பத்திரி கையிலுள்ள கோர்ட்டு வர்த்தமானங்களை வாசிக்கும் போது, அடிக்கடி அதில் குறித்திருக்கும் திருவனந்தபுரம் தக்ஷணமூர்த்தியின் அதியற்புதமான செயல்களைப்பற்றி வாசித்திருப்பதால், அவரை வரவழைக்க வேண்டு மென்ற ஆவா அவருக்கு உண்டாயிற்று. உடனே திருவனந்தபுரம் தக்ஷணமூர்த்தியை தன்னிடம் புறப்பட்டு வரும்படியாக ஒரு தந்திகொடுத்தார்.

இஃது இவ்வாறுகவிருக்க ஒரு நாள் தக்ஷணமூர்த்தி தன்னுடைய நண்பரான ராமராமேவாடு பேசிக்கொண் டிருந்தார்.

ராமராவ் :—எப்பொழுது வந்தாலும் தங்களை வீட்டில் காண்பதரிதாயிருக்கிறதே ! தவிர அடிக்கடி தாங்கள் வெளியில் சர்கூட்போய்க்கொண்டே இருக்கிறீர்கள்.

தக்ஷிணாமூர்த்தி :—என்னசெய்கிறது சார் ! தங்களைப்போல் உள்ளூரிலேயே வேலையிலிருந்தால் வருகிறதை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்யலாம்.

ராமராவ் :—தங்கள்வேலை சௌக்கியம் சார். ஊரார்பணத்தில ஊரையெல்லாம் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகிறீர்கள்.

தக்ஷிணாமூர்த்தி :—என்வேலை உங்களுக்குத்தான் சௌகர்யமாயிருக்கும். நான் எத்தனையோ சமயங்களில் பிராணவாபத்துகளில் சிக்கிக்கொண் டிருக்கிறேன். எத்தனையோ துஷ்டர்கள் நான் அவர்களைப் பிடிக்கும் பொருட்டு மாருவேடம் பூண்டிருப்பதை யரிந்து அவர்கள் என்னைக்கொல்ல யெத்தனிப்பதுண்டு.

ராமராவ் :—பேஷ் ! நன்ருய் சொன்னீர்கள். உங்கள்வேலை எனக்கு சௌகர்யம் என்கிறீர்களே நான் அப்பேர்பட்ட ஆபத்துகளில் சிக்கிக்கொண்டிருந்தால் தப்பிப்பிழைக்க வழிதெரியாமல் அவர்கள் கையாலேயே மாண்டிருப்பேன். அதிருக்கட்டும். நீங்கள் ஏன் இந்ததரம் சர்க்கூட்டில் அதிகநாள் எடுத்துக்கொண்டீர்கள்.

தக்ஷிணாமூர்த்தி :—என்ன செய்வது வேலை அப்படியிருக்கிறது. இந்தவிசை ராமாநாயுடுவின் குமாரன் மன்னர்சாமி நாயுடுவைக்கொன்ற கோவிந்தசாமி நாயுடுவை கண்டுபிடிக்கப்போயிருந்தேன். கோவிந்தசாமி நாயுடுவைக்கண்டுபிடிக்க நான் பட்ட கஷ்டத்தைச்சொல்ல

முடியாது. நான்கு நாளைக்குமுந்திதான் கோர்ட்டில் விசாரணையாகி குற்றவாளியை தூக்கிடும்படி உத்தர வாயிற்று. பிறகு எனக்கு சேரவேண்டிய தொகை யைப் பெற்றுக்கொண்டு நேற்றுகாலையில்தான் ஊர் வந்து சேர்ந்தேன். மேற்சொன்ன கேஸில் நான் அதிக கஷ்டப்பட்டிருப்பதால், சிரம பரிகாரம் தீர்த்துக் கொள்ளும்பொருட்டு சிலநாளைக்கு இங்கேயே தங்கி யிருக்க நான் நிச்சயித்திருக்கிறேன்.

என்று சொல்லிமுடிந்ததும் தக்ஷணாமூர்த்திக்கு ஓர் தந்திவந்தது. அதில் கீழ்வருமாறு வரையப்பட்டிருந்தது.

சண்முகானந்த விலாஸ், சென்னை.

6உ அக்டோபர் மீ

தாங்கள் ஒரு கொலைகேஸை துப்பு துலக்குவதற்காக உடனே புறப்பட்டு என்னிடம் வரும்படியாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தாமோதரன்.

தக்ஷணாமூர்த்தி அதை வாசித்துமுடிந்ததும் "காசிக் குப்போனாலும் கர்மம்துலையவில்லை" எங்கேபோனாலும் என்பாவம் என்னைத் துரத்திக்கொண்டே வருகிறது. சில நாளைக்காவது தங்களோடு சுகமாக காலங்கழிக்கலாமென் றால் அதை அனுபவிக்க நான் கொடுத்துவைக்கவில்லை. என்ன செய்கிறது. அவரவர்கள் பூர்வ ஜென்மத்தில்செய்த பாவபுண்ணியத்தை அவரவர்களே அனுபவிக்கவேண்டும். "நாமொன்றுநினைக்க தெய்வமொன்று நினைக்கும் என்பது என்விஷயத்தில் ருஜுவாகிவிட்டது" என்று சொன்னார்.

ராமராவ் :—என்ன அவ்வாறு சொல்லுகிறீர்கள்.

தக்ஷணாமூர்த்தி :—நான் இன்றையதினம் சாயங்காலவண்டிக்கு ஒரு கேஸின்விஷயமாக மதருஸுக்கு போக வேண்டியிருக்கிறது.

ராமராவ் :—போனால் எத்தனைநாளைக்குள் வந்துவிடுவீர்கள்?

தக்ஷணாமூர்த்தி :—அதை நான் எப்படிசொல்லக்கூடும். நான்போவது கொலேக்கேஸ் விஷயமாக. திருட்டுக்கேஸாயிருந்தால் நகையினுடைய அடையாளங்களால், அதை அணிந்துக்கொண்டிருப்பவர் மூலமாகவாவது, வைத்திருப்பவர்களின் மூலமாகவாவது அல்லது அதை விலைக்கு வாங்கினவர்களின் மூலமாகவாவது திருடர்களை கண்டுபிடித்துவிடலாம். ஒரு கொலேயை பலபேர்சேர்ந்து செய்திருப்பார்களானல், ஒருவனில்லாவிட்டாலும் ஒருவன் வெகு சீக்கிரத்தில் அகப்பட்டுக்கொள்வான். ஒருவனே ஒருகொலேயைச் செய்துவிட்டு வேறுதேசத்திற்கு ஓடிப்போய் மாறுவேஷத்துடன் திரிந்துகொண்டிருப்பானுகில் கண்டுபிடிப்பது மகாகஷ்டம்.

ராமராவ் :—நீர் கொலேக்கேஸ் விஷயமாக போனுலெனக்கென்ன, களவுக்கேஸ் விஷயமாக போனுலெனக்கென்ன. மதருஸிலிருந்துவரும்போது எனக்கென்ன வாங்கிக்கொண்டு வருகிறீர்கள்.

தக்ஷணாமூர்த்தி :—நீர் எதைக்கேட்கிறீரோ அதை வாங்கிக் கொண்டு வருகிறேன்.

ராமராவ் :—மதருஸிலிருந்து வரும்போது பெனாரஸ் ஸில்க் குட்டை ஒன்றும், மதுரைப்பட்டுகரை வேஷ்டி ஒரு ஜதை சொல்பகிரயத்தில் வாங்கிக்கொண்டு வரவும்.

தடசணுமூர்த்தி :—வெளியூர் சாமான்கள் அங்குவந்து விற்பனை ஆகிறபடியால் சாமான்களின்விலை அதிகமாகவே யிருக்கும். அதற்கென்ன வாங்கிக்கொண்டு வருகிறேன்.

ராமராவ் :—இனிநான் உங்களோடுகூட யிருந்தால் பேசிக்கொண்டேயிருப்பேன். அதனால் சாயந்திரம் வண்டிக்குப்போக தங்களுக்கு தாமதமாகிவிடும். ஆகையால நான் போய்வருகிறேன். நீங்கள் வருவதற்குமுந்தி எனக்கொரு லெட்டர் போட்டால் நான் அந்த டிரெயினுக்குவந்து மீட்பண்ணுகிறேன்.

தட்சணுமூர்த்தி :—சரி அப்படியே செய்கிறேன்.

ராமராவ் தக்ஷணுமூர்த்தியிடம் விடைபெற்றுக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார். பிறகு தக்ஷணுமூர்த்தி போஜனம் முடித்துக்கொண்டு, மாலை வண்டியேறி மறுநாள் மதருஸ்வந்து சேர்ந்தார். தட்சணுமூர்த்தி தனக்கு வந்த தந்திசகாயத்தால், விலாசத்தைக்கண்டு பிடித்துக்கொண்டு, தாமோதர முதலியாரைப்பார்த்து தன்னை வரவழைத்த காரணமென்னவென்று கேட்டார்.

தாமோதர முதலியார் தன்னுடைய வேண்டுகோளின்படி புறப்பட்டுவந்ததற்கு வந்தனமளித்துவிட்டு, அவருக்கு தக்க மரியாதைகள்செய்து அவரை ஓர் ஆசனத்தில் அமரச்செய்தார்.

தாமோதர முதலியார் :—ஐயா ! என்னுடைய தகப்பனர் சதாசிவ முதலியார் அக்டோபர் மாதம் 6-ந்தேதியன்று காலை கொலை செய்யப்பட்டு, தலையில்லாமல், ஆண்டியப்பன்தெரு முக்கோயின் ஓர் வெற்றிலைப்பாக்குக்கடைக்கெதிரில்விழுந்துகிடந்தார். அப்போர்பட்ட

கொலைசெய்தவரைக் கண்டுபிடிக்கும் பொருட்டு நான் தங்களை இங்கே வரவழைத்தேன்.

தட்சணாமூர்த்தி :—அந்த வெற்றிலைப்பாக்குக்கடையாருடையது.

தாமோதர முதலியார் :—அது எதிராஜலு நாயுடுவின் கடை. அவர்தான் அன்றுகாலை 6-மணிக்கெல்லாம் பார்த்துப்பயந்து, போலீசாருக்குத் தெரிவித்தார்.

தட்சணாமூர்த்தி :—போலீஸிலிருந்து யார் வந்தது ?

தாமோதர முதலியார் :—போலீஸிலிருந்து இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியாரும், கான்ஸ்டேபில் கந்தசாமியும் வந்தார்கள்.

தட்சணாமூர்த்தி :—இன்ஸ்பெக்டர் என்ன சொன்னார் ?

தாமோதரா முதலியார் :—அவர் கொலைசெய்தவரை வெகு சீக்கிரத்தில் சுலபமாக தான் கண்டுபிடிக்கக்கூடுமென்று சொன்னார்.

தட்சணாமூர்த்தி :—அப்படியிருக்க என்னை ஏன் வீணாக வரவழைத்தீர்கள்.

தாமோதர முதலியார் :—அவர் அப்படி சொன்னாரே தவிர அவர் செய்வாரென்று நான் நம்பவில்லை. தாங்கள் அதிக சாமர்த்தியமாக துப்புதுலக்குவீரென்று நான் பத்திரிகைகளில் வாசித்திருப்பதால், நான் தங்களை வரவழைத்தேன்.

தட்சணாமூர்த்தி :—நான் என்னாலானவரையில் பிரயாசைப் பட்டுப்பார்க்கிறேன். நான் குற்றவாளியைக் கண்டு பிடிக்கக்கூடுமானால் கண்டுபிடித்துவிடுகிறேன்.

தாமோதர முதலியார் :—ஐயா! தாங்கள் குற்றவாளியைக் கண்டுபிடித்து விட்டால் இரண்டாயிரம் ரூபாய் இனு மளிக்க நிச்சயித்திருக்கிறேன்.

என்று சொல்லிவிட்டு தட்சணாமூர்த்தி தங்கியிருக்க, அவர் வீட்டில் ஒருரூம் காலிசெய்து கொடுத்தார். அதில் சதாசிவ முதலியாருடைய ஒரு சிறு பொட்டகிராப்படம் மாட்டியிருந்தது. அதை யாருக்கும் தெரியாமல் தன்ஜேபி யில் வைத்துக்கொண்டு, பிறகு தட்சணாமூர்த்தி வெற்றி லைப்பாக்குக்கடை எதிராஜலு நாயுடுவின் விலாசத்தைக் கேட்டுக்கொண்டுபோய் அவரைச் சந்தித்தார்.

தட்சணாமூர்த்தி :—ஐயா! ஒரு கோலாவில் ஐஸ்போட்டு டம்ளரில் கொடுங்கள். காலணாவுக்கு வெற்றிலையும் தூள்பாக்கும் கொடுங்கள்.

எதிராஜலு நாயுடு :—ஐயா! என்னிடம் ஐஸ் இல்லை.

தட்சணாமூர்த்தி :—என்னஐயா! வெயில்காலத்தில் ஐஸ் இல்லை என்கிறீர்களே, மழைகாலத்தில்தான் விற்பீர் களா?

எதிராஜலு நாயுடு :—இங்கு யாரும் அதிகமாக ஐஸ் வாங் காததினால், நான் வாங்கிவைத்திருந்தால் அதிசீக் கிரத்தில் ஜலமாகமாறி நஷ்டத்தை உண்டாக்குகிறது.

தட்சணாமூர்த்தி :—சரி, இருக்கிறதை கொடுங்கள். (எதி ராஜலு நாயுடு ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் கோலா வை ஊற்றிக்கொடுத்து காலணா வெற்றிலைப்பாக்கும் கொடுத்தார்). தக்ஷணாமூர்த்தி கோலாவைச் சாப் பிட்டுவிட்டு வெற்றிலைப்போட்டுக்கொண்டே பெரிய வரே! என்ன உங்கள் கடைக்கெதிரில் இப்படி உதிரம் பரவியிருக்கிறது. இங்குயாராவது வண்டியில் சிக்கிக்கொண்டார்களா என்ன!

எதிராஜலு நாயுடு:—என்னஐயா! தாங்கள் இந்த ஊருக்கு புதியவர்போல் தோன்றுகிறதே. இங்கு நேற்று சதாசிவ முதலியார் கொலைசெய்யப்பட்டார் என்பது தங்களுக்குத் தெரியாதா?

தட்சணாமூர்த்தி:—அவருக்கு என்னவேலை?

எதிராஜலு நாயுடு:—துபாஷ்வேலை.

தட்சணாமூர்த்தி:—பெரியவரோ? அவர் எப்பொழுது கொலை செய்யப்பட்டார்.

எதிராஜலு நாயுடு:—ஐயா! அது எனக்குத் தெரியாது. நான் நேற்றுகாலையில் தலையில்லாத பிரேதத்தைப் பார்த்து, பயந்து உடனே போலீசாருக்கு தெரிவித்தேன். அங்கிருந்து இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியாரும், கான்ஸ்டேபில் கந்தசாமியும் வந்து பார்த்து, டாக்டர் பரிசோதனைக்காக போலீஸுக்கு எடுத்துக்கொண்டுபோனார்கள். ஐயா! தங்கள் பெயரென்ன?

தட்சணாமூர்த்தி:—என் பெயர் ராஜாபாதர்.

எதிராஜலு நாயுடு:—ராஜாபாதர் என்றால் முதலியாரா, நாயுடா, செட்டியா ஒன்றும் விளங்கவில்லையே.

தட்சணாமூர்த்தி:—ராஜாபாதர் நாய்க்கர்பெரியவரே! குற்றவாளியைக் கண்டுபிடித்து அவருக்கு தண்டனை விதித்துவிட்டார்களா?

எதிராஜலு நாயுடு:—இன்னும் யாரும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஐயா! உங்கள் ஊர் எது?

தட்சணாமூர்த்தி:—என் ஊர் எதுவாயிருந்தால் தங்களுக்காகவேண்டியதென்ன?

எதிராஜலு நாயுடு :—ஏன் ஐயா ! கோபித்துக்கொள்ளுகிறீர்கள். ஒருக்கால் நான் அந்த ஊருக்கு வந்தால் தங்கள் உதவியை பெறலாமல்லவா !

தட்சணாமூர்த்தி :—நானிருப்பது திருவனந்தபுரம்.

எதிராஜலு நாயுடு :—ஐயா ! தாங்கள் திருவனந்தபுரமா ! திருவனந்தபுரத்தில் துப்பறியும் தட்சணாமூர்த்தியைப் பார்த்திருக்கிறீர்களா ?

தட்சணாமூர்த்தி :—பார்த்திருக்கிறேன். அவருக் கென்ன விசேஷம்.

எதிராஜலு நாயுடு :—விசேஷம் ஒன்றுமில்லை. ஜனங்கள் தக்ஷணாமூர்த்தி வந்தால்தான் இக்கேஸை கண்டு பிடிக்கக்கூடுமென்று சொல்லுகிறார்கள். மேலும் தாமோதரமுதலியார் அவருக்கு தந்திகொடுத்திருப்பதாகவும் ஒரு வதந்தி பிறந்திருக்கிறது. அவர் இன்னும் வந்ததும் வாராததும் தெரியவில்லை.

தட்சணாமூர்த்தி :—தந்திபோய் சேர்ந்திருந்தால் அவர் உடனே புறப்பட்டிருப்பார். நான் போய்வருகிறேன் ஐயா என்று சொல்லிவிட்டு, எதிராஜலுநாயுடு கடையிலிருந்து போலீஸ்டேஷனுக்குப்போக தென் திசையாய்த் திரும்பினதும், ஒருகடிதம் மடிக்கப்பட்டு சாக்கடை ஓரத்தில் விழுந்திருந்ததைக் கண்டு, அவர் ஏதோ கீழே விழுந்ததை எடுப்பவர்போல் எடுத்து தன்ஜேபியில் போட்டுக்கொண்டார். சென்னை முனிசிபாலிட்டியார் வண்டியில் ஜலம் கொண்டுவந்து வீதிகளெல்லாம் தெளிப்பதால் அக்கடிதம் ஜலத்தால் நனையப்பட்டிருந்தது. அக்கடிதம் இங்கிலீ எழுதியிருந்ததால் ஜலத்தில் ஊறி சில எழுத்துகள்

அழியப்பட்டிருந்தன. அக்கடிதத்தை யார் யாருக்கு எழுதினது என்று பார்த்தபொழுது ......பதிக்கு...... ...என்று எழுதியிருந்தது. அதற்குமுன் இரண்டு எழுத்துகள் அழியப்பட்டிருந்தன. கடைசியில் சதா .........தலியார் என்று கையொப்பமிட்டிருந்தது. அதற்கு மத்தியில் மூன்று எழுத்துகள் அழியப்பட்டிருந்தன. அதிலடங்கிய சங்கதி என்னவென்று பார்த்தபொழுது அந்த முதலியாருக்கு.........பதிக்குத் தனது குமாரத்தியைக் கொடுக்க இஷ்டமில்லை என்று எழுதியிருந்தது.

தட்சணாமூர்த்தி போலீஸ்டேஷனுக்குப்போய் இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியாரைக் கண்டார்.

இன்ஸ்பெக்டர் :—ஐயா ! தாங்கள் யார்? உட்காருங்கள்.

தட்சணாமூர்த்தி :— ஐயா ! நான் தான் துப்பறியும் திருவனந்தபுரம் தட்சணாமூர்த்தி.

இன்ஸ்பெக்டர் :—ஓ! உங்களை இந்தப்பெரியகேஸைக்கண்டு பிடிப்பதற்கு தாமோதர முதலியார் வரவழைத்தார்போலிருக்கிறது. நீங்கள் துப்பறிவதில் பிரக்யாதிப் பெற்றிருப்பதால், நான் உங்கள் பெயரை அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் எனக்குண்டு. அவர் உங்களை வரவழைத்ததால நான் தங்களைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றேன்.

தட்சணாமூர்த்தி :—என்னை ஏன் வீணில் நான் சந்தோஷப்படும்படி புகழ்ந்து பேசுகிறீர்கள். தாங்கள் சொல்வதுபோல் நான் அவ்வளவு சாமார்த்தியசாலி அல்லவே.

இன்ஸ்பெக்டர் :—தாங்கள் என்னைக்காணவந்ததின் காரண மென்ன ?

தட்சணாமூர்த்தி :—இப்பொழுது பிணம் எங்கிருக்கிறது ?

இன்ஸ்பெக்டர் :—நேற்று பகல் 11-மணிக்கு நான் அதை டாக்டர் பரிசோதனைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனேன். இப்பொழுதும் அங்குதான் இருக்கிறது.

தட்சணாமூர்த்தி இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்றுக் கொண்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப்போய், டாக்டர் ராஜாராமிடம் தான் இன்னாரென்று அவருக்குத் தெரிவித்து, அவர் அப்பிணத்தை பரிசோதித்ததில் என்ன தீர்மானத்துக்குவந்தது என்று கேட்டார்.

டாக்டர் :—பிணத்தின்மேலிருந்த உதிரம் சிகப்பாக இராமல், கட்டிப்போய் சிகப்பும் கறுப்பும் கலந்த நிறமாய் இருந்ததால், சதாசிவ முதலியார் 12-மணிநேரத்திற்குமுன் கொலைசெய்யப்பட்டாரென்று தெரிந்து கொண்டேன். அதாவது அவர் 5-தேதியன்று இரவு 10-அல்லது 11-மணிக்கு கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும். அவர் தெருவில் கொலை செய்யப்பட்டிருப்பதால் யாராவது துரத்திக்கொண்டு வந்து கொலை செய்தார்களாவென்று பார்த்தேன். அப்படி பார்த்ததில் அவர் துரத்தப்படவில்லையென்று தெரிந்தது. எப்படி என்றால விரோதிகள் இவரை துரத்திவந்திருந்தால், இவர் ஓடமுயன்றிருப்பார். அப்போது கால்களில் மண்படிந்திருக்கும். ஆனால் இவர்காலில் மண்படிந்திருக்கவில்லை. அதனால் யாரோ ஒருவர் இவர் வரும் வழியில் ஒளித்திருந்து, இவருக்குத்

தெரியாமல் பின்புறமாகவந்து, கொலை செய்திருக்கிறார்களென்று அறிந்து கொண்டேன். மேலும் ஒரே வெட்டில் தலை வெட்டப்பட்டிருப்பதாலும், வெட்டினவர் பலசாலியென்றும், அவர் உபயோகித்த ஆயுதம் கூர்மையானதென்றும், தெரிந்துகொண்டேன். பிறகு டாக்டர் வெளிசென்றதும் அவர் அச்சவத்தையும் தன்னிடமிருந்த படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து கைப்புத்தகத்தில் ஏதோ குறித்துக்கொண்டார்.

மறுபடியும் தட்சணாமூர்த்தி போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய், இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியாரைக் கண்டு, அவர் துபாஷ் சதாசிவ முதலியாரை கொலைசெய்த குற்றவாளியைக் கண்டுபிடிக்க என்ன பிரயத்தனம் செய்தாரென்பதையும், அவருக்கு யார்மேல் சந்தேகம் என்றும் கேட்டார்.

இன்ஸ்பெக்டர்:—நான் அன்றுமுதல் சதாசிவ முதலியார் கேஸில் பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நான் அவருக்கு விரோதிகள் யாராவது இருக்கிறார்களாவென்று விசாரித்ததில், அவருக்கு விரோதிகள் ஒருவரும் இல்லையென்று தெரியவந்தது. பிறகு இவர் யாரிடமாவது பணம் வாங்கிக்கொடுக்கத் தவறினாரென்றும் அல்லது இவரிடம் யாராவது பணம வாங்கி கொடுக்க தவறினார்களா வென்றும் கேட்டேன். குப்புசாமி முதலியார் தன் பிள்ளை தணிகாசல முதலியாரின் கலியாணத்திற்காக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கினாரென்றும், இப்பொழுது கொடுக்க சக்தி அற்றிருக்கிறாரென்றும் தெரியவந்தது. அதனால்(Suspicion)சஷ்பிஷன்பேரில் அவரை

அந்த அறையில் லாக்கப் (Lock Up) செய்துவைத்திருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டே ஒரு அறையைச் சுட்டிக்காட்டினார்.

உடனே தக்ஷணாமூர்த்தி அந்த அறையின் அருகிற் சென்று, அங்கு அடைக்கப்பட்டிருந்தவரைப் பார்த்து விட்டு இன்ஸ்பெக்டரிடம் வந்து,

தட்சணாமூர்த்தி :—சார் அந்த மனுஷனைப் பார்த்தால் அவன் செய்திருக்க மாட்டானென்று எனக்குத் தோன்றுகிறது.

இன்ஸ்பெக்டர் :—இவ்வளவுதானா தாங்கள்! நீங்கள் என்னமோ பிரக்யாதி பெற்றிருக்கிறீர்களென்று பார்த்தேனே. கொலை செய்தவன் நான் செய்தேனென்று நம்மிடம்வந்து சொல்லுவானா! இவன் வாங்கின கடனைக் கொடுக்க சக்தியற்று இருப்பதால், அவர் சம்மன் கொடுத்துத் தன்னை சிவில் ஜெயிலில் போடப் போகிறார் என்ற பயத்தால், இவனே கொலை செய்திருப்பான் என்பதை தாங்கள் யூகித்தறியக்கூடாதா?

தட்சணாமூர்த்தி :—எனக்கு அவ்வளவு நுட்பபுத்தி கிடையாது. ஒரு விஷயத்தைக்கொண்டு பல விஷயங்களையறியும் சக்தியும் எனக்கில்லை. நான் போய்வருகிறேன்.

என்று சொல்லிவிட்டு சண்முகானந்த விலாசத்துக்குச் சென்று தாமோதர முதலியாரோடு இராப்போஜனம் செய்துவிட்டு, தனக்கு கொடுத்திருந்த ஒரு அறையில் படுத்துக்கொண்டு, அன்று காலையிலிருந்து தான் செய்த வேலைகளை யோசித்துக்கொண்டு இருந்தார்.

---

# அத்தியாயம் 7.

## பலாத்காரம் பயன்படாது.

பெங்களூரில் சீதாராம முதலியார் என்று ஒரு பெரிய தனவந்தரிருந்தார். அவருக்கு விவாகமாகி பத்து வருஷங்களாகியும், ஒரு குழந்தையேனும் இல்லாததால் அதிக வருத்தத்துடனிருக்க சில வருஷங்கள் கழிந்தபின்னர், அவர் மனைவி ஓர் ஆண்குழந்தையைப் பிரசவித்தபிறகு ஜன்னிகண்டு இறந்துவிட்டாள். அநேக வருஷங்களாக சீதாராம முதலியாருக்கு குழந்தை யில்லாமலிருந்து ஒரு ஆண்குழந்தைபிறந்து சந்தோஷத்தைக் கொடுத்தபோதிலும், மனைவி இறந்தவருத்தம் அதிகமாயிருந்தது. தாயற்ற அச்சிறுகுழந்தையை அதிஜாக்கிறதையோடு வளர்த்து வந்ததுடன் "துரைசிங்கம்" என்ற செல்வப்பெயரிட்டு அழைத்துவந்தார். அக்குழந்தைக்கு ஐந்து பிராயமானதும், சீதாராம முதலியாருக்கு ஒரு வியாதி கண்டது. அவ்வியாதி ஒருநாள் இரண்டுநாளோடு ஒழியாமல் ஒரு மாதம் வரையில் நீடித்திருந்தது. டாக்டர்களெல்லாம் அவர் பிழைக்கமாட்டாரென்று கைவிட்டுவிட்டார்கள். இனி நாம் பிழைக்கமாட்டோமென்று அவருக்கும் நன்றாய் தெரிந்துவிட்டது. உடனே அவர் தன்னுடைய வேலைக்காரனையனுப்பி, தன் நண்பர் காளத்தி முதலியாரை அழைத்து வரச்சொல்லி ஓர் கடிதத்தில் என்னமோ எழுதிக்கொண்டிருந்தார். சீதாராம முதலியார் படுக்கையிலேயே படுத்துக்கொண்டு எழுதினதால், எழுதின சங்கதி கொஞ்சமாயிருந்தாலும், அதை எழுத அதிகநேரம் பிடித்தது. ஆயினும் காளத்தி முதலியார் வருவதற்குள் அக்கடிதத்தை எழுதி முடித்தார். அவர்வந்ததும், அவரைத் தன் படுக்

யைக்கு அருகில் உட்காரச்சொல்லி, தான் எழுதின கடிதத்தை அவர் கையில்கொடுத்தார். அவர் அக்கடிதத்தை வாசிப்பதற்குள்ளாக சீதாராம முதலியார் தன் குழந்தை துரைசிங்கத்தை அருகில் அழைத்து கண்களில் நீர ததும்ப அவனுடைய உடம்பைத் தன்னிருகைகளாலும் தடவி முத்தமிட்டு, அவனைப் பிடித்து தன் நண்பர் காளத்தி முதலியாரிடம் ஒப்பிவித்து "இனி இவன் உங்கள் குமாரன்" என்று சொல்லிக் கொண்டே கண்களை மூடிக் கொண்டார். என்ன நம்மை அழைத்து ஒன்றும் சொல்லாமல் கண்களை மூடிக்கொண்டாரே! ஒருக்கால் இளப்பினால் மூடிக்கொண் டிருக்கலாம் என்றெண்ணி அருகிலிருந்த பாலை எடுத்து அவா வாயில்விட்டார். பால் உட்செல்லாமல் வெளிவந்துவிட்டது. பிறகு அவரை இரண்டு மூன்று தரம் அழைத்தார். கடைசியாக அவருடைய கால்களை அசைத்தபோது அவைகள் அசைவற்று சில்லென்று கட்டைபோல் கிடந்தன. தன்னுடைய உயிர்த்தோழரான சீதாராம முதலியார் உயிர்துறந்தார் என்பதை அறிந்த காளத்தி முதலியார் அடைந்த வருத்தத்தை வரைய இடந்தராததலால் இங்கு விவரிக்கவில்லை. பிறகு காளத்தி முதலியார் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறதென்று பிரித்துப்பார்த்தார்.

மார்ச்சு மீ 8உ

பெங்களூர்.

எனது பிரியமுள்ள நண்பராகிய—

காளத்தி முதலியாருக்கு சீதாராம முதலியார் எழுதிக் கொண்டது என்னவென்றால், தாங்கள் எனக்கு எத்தனையோ உபகாரம்செய்திருக்கிறீர்கள். அதைப்போல் இப்பொழுதும் என்னுடைய திக்கற்றகுழந்தை துரைசிங்கத்தை

காப்பாற்றுவீர்களென்று நம்புகிறேன். என்னுடைய கைப் பெட்டியிலுள்ள ஐம்பதனுயிரம் ரூபாய்களையும் தங்கள் வசம்வைத்திருந்து, அவனுக்கு பதினெட்டு பிராயம் ஆன வுடன், அவனிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகி றேன். தவிர அவனுக்கு கல்வி ஞானம் உண்டாகும்படி செய்யவேண்டும். என்னுடைய வேண்டுகோளை தாங்கள் நிறைவேற்றுவீர்களென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

இப்படிக்கு,

திக்கற்ற குழந்தையின் தகப்பன்,

சீதாராம முதலியார்.

அக்கடிதத்தில் கண்டவாறு காளத்தி முதலியார் ஐம் பதனுயிரம ரூபாய்களையும் தன்வசப் படுத்திக்கொண்டு, குழந்தை துரைசிங்கத்தையும் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், கல்வி பயிலுவித்தார். காளத்தி முதலியா ருக்கு குழந்தை இல்லாததினுல் தன்நண்பர் குழந்தையை தன்னுடைய குழந்தைபோல் பாவித்து, அதிக அன்போடு வளர்த்துவந்தார். அவனுக்கு கல்வியில் நல்ல ஞானம் உண்டாவதற்கு அவர் எவ்வளவோ பாடுபட்டுப்பார்த்தார். ஆனுல் ஒன்றும பயன்படவில்லை. துரைசிங்கம் அநேகமாக ஒவ்வொருவகுப்பிலும் இரண்டுவருஷம் தப்பாமல் படித் தான். அவன் எழாவது வகுப்பு வாசித்து முடிப்பதற்குள் சிநேகிதர்கள் அதிகமாய் விட்டார்கள். அவனுக்கு பதி னைந்து பிராயமானதும், அவன் காளத்தி முதலியார் சொற்படி கேளாமல் தன்னிஷ்டம்போல் தனது சிநேகிதர் களுடன் போவதும் வருவதுமாயிருந்தான். அவன் பாட சாலைக்குப போவதுபோல் தன்னுடைய நண்பர்களுடன் கூடிக்கொண்டு எங்கேயாவது சுற்றிவிட்டு, வேளைக்குவந்து வீட்டில் சாப்பிடுவான். துரைசிங்கத்திற்கு அநேக சிநே

கிதர்க ளிருந்தபோதிலும், ஜெயராம் என்பவன்மேல்தான் அதிகப்பிரியம். ஏனென்ருல் அவன்தான் துரைசிங்கத்துடன் அநேகநாட்களாய் பழகி அவனிஷ்டம்போல் நடப்பவன்.

துரைசிங்கத்திற்கு பதினெட்டு பிராயம் முடிந்தபிறகு ஒருநாள் தனக்கு இனி படிக்க இஷ்டமில்லை யென்றும, தன்னுடைய பணத்தை தன்னிடம் கொடுக்கும்படியும், காளத்தி முதலியாரைக் கேட்டான். காளத்தி முதலியாருக்கு அவனிஷ்டப்படி விட அவருக்கு விருப்பமில்லையாயினும், தன்னிஷ்டப்படி அவன் இனி நடக்க மாட்டானென்று அவருக்கு நன்ருய்த்தெரிந்தது. ஆதலால் அவன் தகப்பன் வைத்துவிட்டுப்போன ஐம்பதனுயிரம் ரூபாய்களையும் அவனிடம் கொடுத்துவிட்டு, தன்னுடைய உதவி அவனுக்கு எப்பொழுதாவது தேவையாயிருந்தால் அவருக்குத் தெரிவிக்கும்படி சொன்னுர்.

துரைசிங்கம் அந்த ஐம்பதனுயிரம் ரூபாய்களையும் பெற்று ஜெயராமையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு ஜனவரிமாதம் 3-ந்தேதி சென்னை வந்து சேர்ந்தான். ஜெயராம் தன்னுடைய நண்பன் துரைசிங்கத்துக்காக தன்னுடைய உயிரையும் விடத்துணிந்தவன். ஜெயராமுக்கு வயது பதினெட்டா யிருந்தபோதிலும், பார்ப்பவர்களுக்கு 20-அல்லது 22-வயதானுற்போல் தோற்றப்படுவான். இவன் சிலம்பவித்தையில் நல்லதேர்ச்சியடைந்தவன். இவன் எப்பொழுதும் துரைசிங்கத்தின் நன்மையையே கோரியிருப்பான். இவர்கள் சென்னைக்கு வந்ததும் எழும்பூரிலுள்ள "பால் வில்லா," என்னும் பங்களாவை வாடகைக்குப்பேசி தங்களுக்கு சமயல்செய்து போடவும், வீட்டு வேலையைச் செய்யவும் சில வேலைக்காரர்களையும் அமர்த்

திக் கொண்டார்கள். இவர்கள் வெளியில் போவதாயிருந்தால் வாடகை மோட்டார் வண்டியில் போவதுண்டு.

துரைசிங்கம் ஜெயராமை தன்னுடைய சகோதரனைப் போல் பாவித்துவந்தான். துரைசிங்கம் ஏதாவது புதிதாக உடுப்புகள் வாங்குவதாயிருந்தால், தன்னுடைய நண்பனுக்கும் அதைப்போல் உடுப்புகள் வாங்குவான். இருவரும் ஒன்றாக சாப்பிடாவிட்டால் அவனுக்கு சாப்பிட்டாப் போலிராது. இவர்கள் சாயங்காலம் 4—மணிக்கு ஏதாவது சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு, உயர்ந்த பட்டால் தைத்த உடைகளைத்தரித்துக்கொண்டு, மோட்டார்வண்டியிலேறி, எங்கேயாவதுபோய் 7-அல்லது 8-மணிக்குள் வீடு வந்து சேர்வார்கள். வழக்கம்போல் இவர்கள் ஒருநாள் சாயங்காலம் சிற்றுண்டி செய்த பிறகு, மோட்டார் வண்டியிலேறி சென்னை கடற்கரையை அடைந்தார்கள். பிறகு மோட்டாரைவிட்டு கீழே இறங்கினதும், மோட்டாரை சற்று தூரத்தில் நிறுத்திவைக்கும்படி டிரைவரிடம் (Driver) சொல்லிவிட்டு, கடற்கரையோரத்தில் குளிர்ந்திருக்கும்படியான மணலின்மேல் ஒருவர்க்கொருவர் எதிர் முகமாக உட்கார்ந்தார்கள்.

ஜெயராம்:—துரை! இன்றிரவு சாப்பிட்டுவிட்டு, சர்க்கசுக்குப் (Circus) போகலாமா!

துரைசிங்கம்:—இன்றைக்குவேண்டாம். இன்னொருநாளைக்குப் போகலாம்.

ஜெயராம்:—ஏன் துரை! இன்றைக்குவேண்டாமென்கிறாய்.

துரைசிங்கம்:—எனக்கு உடம்பு சரியில்லை.

ஜெயராம்:—உன் உடம்புக்கு என்ன? உடனே சொல். ஏன் இத்தனைநேரம் என்னிடம் தெரிவிக்கவில்லை.

துரைசிங்கம்:—உடம்புக்கு ஒன்றுமில்லை. மனதிற்கு சந்தோஷ மில்லாததினால் நான் வாட்டமடைந்திருக்கிறேன்.

ஜெயராம்:—நான் நேற்றே உன்முகம் வாட்டமடைந்திருப்பதைக் கவனித்தேன். ஆனால் அதன் காரணத்தை கேட்க மறந்துவிட்டேன்.

துரைசிங்கம்:—நானும் முன்னமே சொல்லியிருப்பேன். ஆனால் அதை உன்னிடம் சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கிறது.

ஜெயராம்:—ஆண் பிள்ளைக்கு வெட்க மென்ன, உன்னுடைய பால்ய சிநேகிதனிடத்தில் சொல்லாமல் வேறு யாரிடத்தில் சொல்லப்போகிறாய் ?

துரைசிங்கம்:—நான் அதைத் தெரிவித்தால் நீ அதை முடித்துக் கொடுப்பாயா ?

ஜெயராம்:—அது என்னாலாகக்கூடிய காரியமா யிருந்தால் நான் அதைக் கட்டாயம் முடித்து உனக்கு சந்தோஷத்தை உண்டாக்குவேன்.

துரைசிங்கம்:—நாமிருவரும் நேற்று புரசைவாக்கத்துக்கு போனோமே கவனமிருக்கிறதா ?

ஜெயராம்:—ஆம். கவனமிருக்கிறது.

துரைசிங்கம்:—நாம் புரசைவாக்கத்துப் பக்கமாக வரும்பொழுது சண்முகானந்த விலாஸ் என்ற ஒரு பெரிய பங்களாவைப் பார்த்தேன். அதன் உன்னதத்தைக் கண்டு அண்ணாந்து பார்த்தபொழுது மாடியின்மேல் என்னால் வர்ணிக்கக் கூடாத ஒரு கன்னிகை இருக்கக் கண்டேன். அவள் ஏதோ விசனத்துடன் பூமியை உற்று நோக்கிக்கொண் டிருந்தாள். நான் அவளையே

அதிகநேரம் உற்றுப்பார்த்தும் அவள் என்னை கவனிக்கவேயில்லை. நான் அவளைக் கண்டதுமுதல் அவளை அடையவேண்டுமென்கிற ஆவல் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. நான் நினைத்தபடி அவளை அடையமுடியுமோ முடியாதோ என்ற சந்தேகத்தினால் மனம் வருத்தமடைகிறது. நேற்று இரவு நான் உன்னோடு படுத்துக் கொண்டேனே, உண்மையில் நான் தூங்கவில்லை. நான் வழக்கம்போல் சாப்பிடாமல் சாக்கு சொன்னதின் காரணமுமிதுதான். நான் இது வரையிலும் உன்னிடம் உண்மையை உரைக்காததின் காரணமென்னவென்றால் வெட்கத்தினாலேயன்றி வேறல்ல.

ஜெயராம் :—ஒரு பெண்ணின் பொருட்டா நீ இவ்வளவு வருத்தமுறவேண்டும். நீ அவளைப் பார்த்தபோதே என்னிடத்தில் தெரிவித்திருக்கக் கூடாதா. இப்பொழுதுதான் என்ன அவள் ஒரு வாரத்திறகுள் உன்னிடம் வந்து சேரும்படி செய்கிறேன். இனி நீ சந்தேகத்தைவிட்டு சந்தோஷமாயிரு. இருட்டிவிட்டது நேரமாகிறது வா வீட்டிற்குப் போகலாம்.

என்று சொன்னபிறகு இருவரும் எழுந்து மோட்டார் நின்றிருந்த இடத்திற்கு வந்து அதிமேலறிக்கொண்டு 8-மணிக்கெல்லாம் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

மேற்கூறிய சம்பவங்கள் நிகழ்ந்த ஒருவாரத்திற்குப் பின்பு ஜெயராம் 9-மணிக்கு ஒரு ஜட்காவண்டியைசென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போக வாடகைக்குப் பேசி சண்முகானந்த விலாஸ் தோட்டத்தின சமீபத்திலுள்ள ஒரு பிள்ளையார்கோயிலின் பக்கமாக வண்டியை நிறுத்திவைக்கச்சொன்னான். துரைசிங்கத்தை வண்டியிலேயே உட்கார

வைத்துவிட்டு, ஜெயராம் சண்முகானந்த விலாஸைச் சார்ந்ததோட்டத்திலுள்ள ஒரு மாமரத்தின் மறைவில் ஒளித்துக்கொண்டிருந்தான். சதாசிவ முதலியார் அகாரண மாககொலைசெய்யப்பட்டார் என்பதை அறிந்தது முதற் கொண்டு மோகனும்பாள் இரவில் சரியாக நித்திரை செய் வதே கிடையாது. அவள் இராப்போஜனம் செய்தபிறகு சற்றுநேரம் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்து விட்டு போய் படுத்துக்கொள்வாள். அவள் வழக்கம்போல் இராப்போஜனம் செய்தபிறகு தோட்டத்திற்கு உலாவச் சென்றாள். மோகனும்பாள் ஜெயராம் ஒளித்துக்கொண் டிருந்த மாமரத்தின் மற்றொரு புறமாய் நின்றுக்கொண்டு தன் பிதா அகாரணமாக கொலைசெய்யப்பட்டதை நினைத் துத் துக்கிக்க வாரம்பித்தாள். மோகனும்பாள் கண்களில் நீர் தாரை தாரையாக விட்டுக்கொண்டு "ஓ கருணானந்த வள்ளலே என் பிதா என்னோடு இன்னும் சிறிது காலம் ஜீவித்திருக்க தங்களுக்கு இஷ்டமில்லையா! என் பிதா யாருக்கு என்னகொடுமை செய்தார். அல்லது நான் தங் களுடைய ஆக்கினைகளுக்கு மீறி நடந்தேனே? ஒருபாவமு மறியாத ஏழைகளாகிய எங்கள்பேரில் ஏன் உங்களுக்கு அவ்வளவு கோபம் சென்ற வருஷம் பொங்கலுக்கு என் தகப்பனார், என திஷ்டப்படி எனக்கு வேண்டிய நகை களையும், துணிகளையும் வாங்கிக்கொடுத்தவரை இவ்வரு ஷம் நான் எப்படி அவரைவிட்டுப் பிரிந்திருப்பேன்," என்று அழுதுகொண்டே சென்றாள்.

(சாதாரணமாக ஸ்திரீகள் தங்களுடையஇறந்துபோன பந்துக்களை எப்பொழுதுநினைத்துக் கொள்கிறார்களோ அப் பொழுதெல்லாம் அழத்தொடங்குவார்கள். அநேகமாக ஸ்திரீகள் யாருமில்லாத ஒரு தனிமையான இடத்தில் உட்

கார்ந்துகொண்டு அழுவது வழக்கம். சில ஸ்திரீகள் அடுப்பின் எதிரில் உட்கார்ந்துகொண்டு அழுவார்கள். சிலர் தங்கள் வேலையைசெய்துகொண்டே அழுவார்கள். சிலர் இறந்துபோன ஒருவரை நினைத்துக்கொண்டு அழும்பொழுது, போனவருஷத்தில் பண்டிகைக்கு அவர் சந்தோஷமாக இருந்ததையும, இந்த வருஷம் வரும் பண்டிகைக்கு அவர் இல்லையேயென்றும் வருத்தப்படுவார்கள்.)

மோகனும்பாள் அழுது முடிந்ததும், கண்களிலிருந்து வடிந்த நீரை தன்னுடைய முந்தாணியால் துடைத்துக்கொண்டு தானே தேறுதலடைந்தாள்.

பின்புறத்தில் ஒளித்துக்கொண்டிருந்த ஜெயராம் அவளுக்குத் தெரியாமல் மெதுவாக வந்து அவள் எதிரில் நின்றான். அவள் கண்களைத்துடைத்துக்கொண்டே சற்று நிமிர்ந்து பார்த்தாள். ஒரு புது ஆள் எதிரில் நிற்பதைக் கண்டதும், இன்னதுதான் செய்வதென்று ஒன்றும் தோன்றாமல் அவள் பிரமித்து நின்றுவிட்டாள். உடனே ஜெயராம் தன்ஜேபியிலிருந்த கத்தியை எடுத்து அவளுக்குக்காட்டி, "நீ வாயைத்திறந்தால் ஒரே குத்தாய் இக்கத்தியால் குத்தி விடுவேன். உயிரோடு இருக்கவேண்டுமென்று உனக்கு எண்ணமிருந்து நான் சொல்வதுபோல் செய்தால் பிழைப்பாய்" என்றான். அவள் வேடன் வலையில் சிக்கிக்கொண்ட மான்போல் ஒன்றும் பதில்சொல்ல தோன்றாமல் திகைத்து நின்றாள். "இன்னமும் நீ என்சொற்படிநடந்தால் சுகமாக நெடுங்காலம் வாழ்ந்திருக்கலாம். இல்லாவிட்டால் இப்போதே இக்கத்திக்கு இறையாய் விடுவாய்" என்றுசொல்லிக்கொண்டே ஜெயராம் ஒருவழியைச்சுட்டிக்காண்பித்தான். மோகனும்பாள் இப்பொழுது வாய்

திறந்தால் இத்துஷ்டன் நம்மைக்கொன்று விடுவான், எப்படியும் இவன் சொல்வதுபோல் இவனுடன் சென்று பிறகு மெதுவாக தப்பித்துக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன் அவன் காட்டிய வழியே சென்றாள். ஜெயராம் அவளைப் பின்தொடர்ந்து கொண்டே சென்றான். இருவரும் கோயிலின் அருகாமையில் நின்றுக்கொண்டிருந்த வண்டியை அணுகினதும், அவளை வண்டியிலேறச்சொல்லி தானும் ஏறிக்கொண்டான். பிறகு வண்டிக்காரனை நோக்கி ஐயா! உடனே வண்டியை விடு. சீக்கிரம் ஓட்டு என்றான்.

வண்டிக்காரன் :—இதோ சாமி! பாருங்கோ நம்ப வண்டி எப்படி ஓட்ரான்.

ஜெயராம் :—என்ன இந்தமாதரிபோனால் ஸ்டேஷனுக்கு எப்பொழுது போகிறது. குதிரைக்கென்ன கால் நொண்டியா ?

வண்டிக்காரன் :—என்னங்கோ சாமி! அப்படி சொல்றிங்கோ, பாருங்கோ குதிரை காத்தா பறக்ரான். சாமி கஷ்டத்தைப்பார்த்து கூலிகொடுக்கணும்.

ஜெய ராம் :—அதெல்லாம் நீ சொல்லவேண்டியதில்லை. எங்களுக்குத்தெரியும்.

துரைசிங்கம் தன்னுடைய நண்பன் வாக்களித்தபடி தனக்காக அவன் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு ஆச்சரியப்பட்டுக்கொண்டே, வண்டியில் உட்கார்ந்தபடி மோகனம்பாளின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். ஜெயராம் நாம் வாக்களித்தபிரகாரம் இவளைக் கொண்டுவந்து விட்டோம். இனி இவர்களை ஓரிடத்தில் கொண்டுபோய் சேர்ப்பது நமது கடமை என்று தனக்குள் தானே சிந்தித்துக்கொண்டிருந்தான். மோகனம்பாள்

ஜெயராம் ஒருவன்தான் என்று எண்ணியிருக்க, வண்டியில் மற்றொருவன் இருப்பதைக்கண்டதும்,ஜலத்துக்கும் நெருப்புக்கும் மத்தியில் அகப்பட்டுக்கொண்ட எறும்புபோல் தத்தளித்தாள். எப்படி நாம் இத்துஷ்டர்கள் கையிலிருந்து பிழைத்து வீடுவந்து சேரப்போகிறோமென்ற எண்ணத்துடன் தலைகுனிந்துக் கொண்டிருந்தாள்.

இதற்குள்ளாக வண்டியும் சென்டால் ஸ்டேஷனை வந்து அடைந்தது. மூவரும் வண்டியைவிட்டு கீழே இறங்கினார்கள். உடனே துரைசிங்கம் வண்டிக்காரனுக்கு பணத்தைக்கொடுத்து அனுப்பிவிட்டான்.

மறுநாட்காலையில் மோகனும்பாளின் தாயாராகிய விசாலாக்ஷியம்மாள் தினந்தோறும் 5-மணிக்கே படுக்கையைவிட்டு எழுந்திருப்பவள் இன்று 7-அடித்தும் இன்னும் ஏன் எழுந்திருக்க வில்லை என்று, மோகனும்பாளுடைய படுக்கை யறையின் கதவைத்திறந்து பார்த்தாள். ஒருக்கால் அதிகாலையில் எழுந்து தோட்டத்திற்கு சென்றிருக்கலாமென்று தோட்டத்திலும் போய்ப்பார்த்தாள். மோகனும்பாள் அங்கும் காணாமையினால் திடுக்கிட்டு அழுதுகொண்டே தன் புத்திரனிடத்தில் வந்து அச்செய்தியைத்தெரிவித்தாள். உடனே தாமோதர முதலியாரும் பங்களாவிலுள்ள ஒவ்வொரு அறையையும், தோட்டத்தையும் நன்றாகச்சுற்றிப்பார்த்தார். மோகனும்பாள் எங்கும் காணப்படவில்லை. பிறகு அவர் தன்னறைக்குப்போய் தன் சகோதிரியாகிய மோகனும்பாள் வீட்டில் காணவில்லையென்றும், அவளைக் கண்டுபிடிக்கும்பொருட்டு ஒரு இன்ஸ்பெக்டர் சண்முகானந்த விலாஸுக்கு வரவேண்டுமென்றும் டெலிபோனில் போலீஸுக்குப்பேசினார்.

உடனே இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார் பைசிகல் எனவழங்கும் துவிச்சக்கரவண்டியிலேறிக்கொண்டு சண்முகானந்த விலாஸை வந்து சேர்ந்தார்.

இன்ஸ்பெக்டர் :—குட்மார்னிங் மிஸ்டர் (Good Morning Mister) தாமோதர முதலியார். என்னை இப்பொழுது வரவழைத்த காரணமென்ன?

தாமோதர முதலியார் :—குட்மார்னிங்சார் (GoodMorning Sir) என்னுடைய சகோதரியாகிய மோகனம்பாள் காணாமையினால், அவளைக் கண்டுபிடிக்கும் பொருட்டுத் தங்களை இங்கு வரவழைத்தேன்.

இன்ஸ்பெக்டர் :—வீட்டில் யாராவது புதுவேலைக்காரர்களை அமர்த்தினீர்களா ? அல்லது உங்கள் வீட்டில் யாராவது புதிதாக வந்திருந்தார்களா ?

தாமோதர முதலியார் :—அப்படி ஒன்றுமில்லை. எங்கள் வீட்டிலிருப் பவர்களெல்லாம் பழைய வேலைக்காரர்களே. புதிதாக வீட்டிற்குயாரும் வரவில்லை.

இன்ஸ்பெக்டர் :—அவள் தோட்டத்திற்கு போகும் பழக்கமுண்டா ?

தாமோதர முதலியார் :—அவள் தோட்டத்துக்குப் போவதுண்டு.

இன்ஸ்பெக்டர் :—அத்தோட்டத்தை எனக்குக் காண்பியுங்கள்.

தாமோதர முதலியார் இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியாரை அழைத்துக்கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்தார். அப்பொழுதுதான் தோட்டத்தில் வேலை செய்யும் முனியன் எனனும் சிறுவன் பழுப்பு இலைகளை

யெல்லாம் பொருக்கி ஓரிடத்தில் சேர்த்துவிட்டு செடி களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டர் :—அடே பையா ! உன்பெயரென்ன.

முனியன் :—சாமி ! எம்பேர் முனியன்.

இன்ஸ்பெக்டர் :—அடே ! நேற்று யாராவது இங்கு வந் தார்களா ?

முனியன் :—சாமி ! நேத்து சாந்திரம் அம்மா வந்து இங்கு ஓலாத்திக்னுருந்தாங்கோ.

இன்ஸ்பெக்டர் :—அந்தம்மாளைத் தவிற வேறு யாராவது வந்தார்களா ?

முனியன் :—நேத்துயாரும் வர்லே சாமி.

இன்ஸ்பெக்டர் :—அடே நேற்றில்லாவிட்டால் இதற்கு முந்தியாவது வந்திருக்கிறார்களா ?

முனியன் :—ஓ ! ஓ ! ! அப்படி கேளுங்கோ சொல்றேன். ரொம்ப நாளைக்கு முன்ன ஏ ஏ என்று இழுத்துக் கொண்டே இருந்தான்.

அதற்குள் இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார் அவனுடைய கன்னங்களில் பளீர் பளீரென்று இரண்டு மூன்று அறை அறைந்து விட்டு, என்னடா ராகம் இழுத் துக்கொண்டிருக்கிறாய். சீக்கிரம் சொல்லுகிறாயா ! பூஜை வேண்டுமா ! என்று சொன்னார்.

முனியன் :—என்னசாமி சொல்றத்துக்குள்ளோ போட்டு போட்டு பட்டு பட்டுண்ணு அடிக்கிறீங்கோ.

இன்ஸ்பெக்டர் :—அடே ! சீக்கிரம் சொல்லுகிறாயா, இன் னும் பூஜைகேட்கிறதா ?

முனியன் :—சாமி இன்னும் பூஜை போடாதேங்கோ. முன்னே போட்டபூஜை இன்னும் இருக்குது.

இன்ஸ்பெக்டர் :—ஆனால் சீக்கிரம் சொல்.

முனியன் :—முன்னே ஒருநாளு எதிர் பங்களாலே ஈக்கும் ஐயா அவுங்க சிநேகிதர் இதோ ஈக்கும் மாமரத்தின் கீழே (என்று ஒரு மாமரத்தை சுட்டிக்காட்டி) மண்ணைக்கிள்ளிகினு இந்தாங்கோ. நான் என்னையா செய்றீங்கோ இன்னுகேட்டேன். அடே நான்சும்மா கிள்ளிக்கினு ஈக்கிறேன். அடே நான் இங்கு வந்ததாக யார்க்கும் சொல்லாதே இன்னு எங்கிட்டே ஒரு ரூபா எடுத்துக்குடுத்தாங்கோ. நான் யார்க்கும் சொல்றதில்லே இன்னு சொல்லிட்டு, அந்த ரூபா வாங்னேன். அப்றம் நான் என்வேலேபார்க்கப் பூட்டேன். அவரும் பூட்டாரு. நானும் அந்த ரூபாயே எங்க ஊட்டுக்கு மூணும் ஊட்டிலே ஆப்பக்கடை வச்சிக்கிறுங்களே சுப்பம்மா, அந்தம்மா கையிலே குடுத்து; தினம் என்கு அரைனு ஆப்பமும், கால்னு தன்னியும் கொடுக்கச் சொன்னேன். (தண்ணியென்றால் சுக்கும், வெல்லமும் போட்டு ஆப்ப கடைகளில் விற்கும் காபி.)

இன்ஸ்பெக்டர் :—அடே அவரை நீ இங்கு எத்தனை நாளைக்கு முன்பு பார்த்தாய் ?

முனியன் :—சாமி ! நாளு எண்ணலிங்கோ.

இன்ஸ்பெக்டர் :—அடே ! சுமார் எத்தனை நாளிருக்கும்.

முனியன் :—மின்னே மழை பேஞ்சுதே, அதற்கு மூணு நாள்.

இன்ஸ்பெக்டர் :—முன்னே என்றால், எப்பொழுது.

முனியன் :—அஞ்சாறு மாசத்துக்குமுன்னே சாமி. இன்னும் என்ன ஒன்றும் கேட்காதிங்கோ. என்கு அதுக்குமேலே ஒன்னுந் தெரியாது. என்னுத்துக்கு என்னே வீணு அடிக்கிறீங்கோ ? எங்கம்மா பாத்தா சும்மா யிப்பாங்ளா ?

இன்ஸ்பெக்டர் :—இனி நீ போகலாம். உனக்கு இங்கே வேலையில்லை.

என்று சொல்லிவிட்டு தன்னுடைய கைப்புத்தகத்தில் (Pocket Note Book) ஏதோசிலவற்றைக்குறித்துக்கொண்டார் தான் அக்கேஸைக் கண்டுபிடிக்க சிலநாள் செல்லுமென்று தாமோதர முதலியாரிடம் சொல்லிவிட்டு, இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார் போலீஸுக்குப் போய் விட்டார்.

புண்ணின்மீது அம்பு பாய்ந்ததுபோல் கணவனை இழந்து வியாகூலத்துடனிருக்கும் விசாலாட்சியம்மாளின் மனதில் தன்புத்திரி காணுமற்போனது அளவிலா துக்கத்தை உண்டாக்கிறது. விசாலாட்சியம்மாள் தலைவிரி கோலமாய் அன்னபானமின்றி அழுதுகொண்டிருந்தாள். அப்பொழுது திருவனந்தபுரம் தட்சணாமூர்த்தியும் அங்கு வந்துசேர்ந்தார். அவர் அவ்வம்மை அவ்வாறு இருப்பதின் காரணமென்னவென்று தாமோதர முதலியாரைக்கேட்க அவர் தன் தங்கை மோகனாம்பாள் காணுமற்போன செய்தியை அவருக்குத்தெரிவித்தார்.

தட்சணாமூர்த்தி :—நீங்கள் கடைசிமுறையாக மோகனாம்பாளை எப்பொழுது பார்த்தீர்கள் ?

தாமோதரா முதலியார் :—நேற்றிரவு போஜனம் செய்தபிறகு ஹாலிலுள்ள ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்து கொண்டு வெற்றிலைப்போட்டுக் கொண்டிருந்தாள்.

தட்சணாமூர்த்தி :—வீட்டில் இல்லையென்று உங்களுக்கு எப்பொழுது தெரியவந்தது ?

தாமோதர முதலியார் :—இன்று காலை 7-மணிக்குத்தான்.

தட்சணாமூர்த்தி :—வெற்றிலைப் போட்டுக்கொண்ட பிறகு என்ன செய்தாள்.

தாமோதர முதலியார் :—தோட்டத்திற்குச் சென்றாள்.

தட்சணாமூர்த்தி :—மறுபடியும் தோட்டத்திலிருந்து பங்களாவுக்கு எப்பொழுது வந்தாள் ?

தாமோதர முதலியார் :—அவள் தோட்டத்தில் சிலநேரம் உலாவிவிட்டு வந்து படுத்துக்கொள்வது வழக்கமாகையால், திரும்பி பங்களாவுக்கு வந்ததைநாங்கள் கவனிக்கவில்லை.

தட்சணாமூர்த்தி :—நேற்று அவள் என்ன உடை உடுத்திக் கொண்டிருந்தாள் ?

தாமோதர முதலியார் :—சிகப்பு நிறமான பட்டுப்பாவாடையும், பச்சைப்பட்டில் சரிகை புட்டாப்போட்ட தாவணியும், வெண்ணிறமான மஸ்லின்ஜாக்கெட்டும் தரித்துக்கொண்டிருந்தாள்.

தட்சணாமூர்த்தி :—அவள் வீட்டில் காணவில்லை யென்று என்ன செய்தீர்கள்.

தாமோதர முதலியார் :—இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியாரை வரவழைத்து அவருக்கு சமாச்சாரத்தைத் தெரிவித்தோம்.

தட்சணாமூர்த்தி :—அவர் என்ன சொன்னார் ?

தாமோதர முதலியார் :—அவர் வந்து தோட்டத்திற்குச் சென்று தோட்டக்கார பையனை சில கேள்விகள்

கேட்டுவிட்டு தான் அக்கேஸைக்கண்டுபிடிக்க சில நாட்கள் செல்லுமென்று சொல்லிவிட்டுப்போனுர். ஆனுல் அகாரணமாக கொலைசெய்யப்பட்ட எனது தகப்பனுர் கேஸில் தாங்கள் உழைப்பதுபோல் உயிரோடு காணுமற்போன என் தங்கையையும் வீட்டிற் கொண்டுவந்து சேர்க்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தட்சணுமூர்த்தி :—நீங்கள் வருத்தப்படவேண்டாம். நான் உங்கள் கேஸின் உண்மையை கண்டுபிடிக்கவே பட்டணம் வந்தது. என்ணுற் கூடியவரையில் உங்களுடைய சகோதிரியையும் தேடிக்கண்டுபிடித்து கொண்டுவந்து வீடுசேர்க்கிறேன். கடவுள் கிருபை எப்படியோ. ஐயா ! நான் மோகனும்பாளின் அறையைப்பார்க்கலாமா ?

தாமோதர முதலியார் :—ஆ ஹா! அதற்கென்ன ஆக்ஷேபனே. நீங்கள் வந்து பார்க்கலாம்.

என்று சொல்லி அவரை அழைத்துக்கொண்டு மோகனும்பாளின் அறைக்குட் பிரவேசித்தார்கள். தட்சணுமூர்த்தி மோகனும்பாளின் பீரவைகளையும், மேஜைகளையும் ஆராய்ந்து பார்த்துவிட்டு, மேஜையிலிருந்தசில கடிதங்களை எடுத்து தன்ஜேபியில் போட்டுக்கொண்டார். பிறகுதோட்டத்திற்குச்சென்று ஏதோ தேடுபவர்போல நாலாப்பக்கமும் சுற்றிப்பார்த்தார். தோட்டத்திலுள்ள ஒரு பெரிய மாமரத்தினின்று, பிள்ளையார் கோயில்வரை தரையையே கவனித்த வண்ணமாய்ப் போனுர். அங்கு சற்றுநேரம நின்று எதையோ யோசித்துக்கொண்டே அக்கோயிலிலிருந்து ஒரு பெரிய பாதைவரையிலும் சென்முர்.

பிறகு தட்சணாமூர்த்தி தாமோதர முதலியார்வீட்டில் தனக்கு விட்டிருக்கும் அறைகுட்சென்று ஒரு கடிதத்தில் ஏதோ சமாச்சாரம் எழுதி, அதை சுதேசமித்திரன் ஆபீஸுக்கு அனுப்பி அன்று சாயங்காலப் பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி செய்தார். அவ்வாறே அன்றுசாயங் காலப் பத்திரிகையில் ஒரு விளம்பரம் இருந்தது.

விளம்பரம்.

இனும்! இனும்!! இனும்!!!

நேற்றிரவு 8-மணிக்குமேல் புரசைவாக்கம் சக்திவிநாயகர் கோயிலிலிருந்து ஜட்காவண்டி ஓட்டிக்கொண்டு போன பெயர்வழி யாரோ அவர் இக்கீழ்கண்ட விலாசத்துக்கு வந்தால் ரூபாய் 50-இனும் அளிக்கப்படும்.

சண்முகானந்த விலாஸ்,<br>புரசைவாக்கம். } இப்படிக்கு,<br>த ட் ச ணா மூ ர் த் தி.

இப்பிரசுரம் வெளியான மறுநாள் ஒரு சாயபு காலை 7-மணிக்கெல்லாம் புரசைவாக்கம் சண்முகானந்த விலாஸ் என்னும் பங்களாவின் கேட்டண்டை வந்துகாத்துக் கொண்டிருந்தான். பங்களாவின் வாயற்படியண்டை காவலிருந்த முருகேசன் சாயபு என்னத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறானென்பதை கேட்டு தெரிந்துகொண்டு, அதை தட்சணாமூர்த்தியிடம் அரிவித்தான். உடனே தட்சணாமூர்த்தி அவனை உள்ளே வரும்படி கட்டளையிட்டார். முருகேசன் அவ்வாறேசாயபை உள்ளேஅழைத்துக் கொண்டுபோனான். சாயபுதட்சணாமூர்த்தியைக்கண்டதும், "சலாம் மகாராஜ்" என்று சொலலிக்கொண்டே தலையைத் தொட்டு சலாம் வைத்தான்.

தட்சணாமூர்த்தி :—சாயபு என்ன விசேஷம் ?

சாயபு :—சாமி ! அல்லா உட தயவ்லே நம்பள்கிலெண்ணும் கொறவில்லே, ஆனா வண்டிதொட்டிலே இங்கே என்னமோ இனும் கொடுக்கிறாங்கோ இன்னு சொன்னாங்கோ; அதக்கோசரம் வந்தாங்கோ.

தட்சணாமூர்த்தி :—சாயபு ! நீதானா இந்தமாதம் 15-ந்தேதி யன்றிரவு 8-மணிக்குமேல் சக்திவிநாயகர் கோயிலருகாமையிலிருந்து வண்டி ஓட்டிக்கொண்டு போனது.

சாயபு :—ஆமாம் ! நாம்போதான் மஹாராஜ்.

தட்சணாமூர்த்தி :—உன் வண்டியை யார் வாடகைக்குப் பேசினது.

சாயபு :—யாரோ ரெண்டுபேர் வயசுபுள்ளேங்கோ, கிராப் உட்டிகினு இருந்தாங்கோ.

தட்சணாமூர்த்தி :—எங்கேபோவதற்கு வண்டி பேசினார்கள்.

சாயபு :—நம்ப தோட்டத்கு பக்கத்லே இருக்தே புள்ளா கோவுலு அங்கிருந்து பெரிய ரயிலுக்கு (Central Station) போவ பேசனாங்கோ.

தட்சணாமூர்த்தி :—வண்டி எங்கு பேசினார்கள்.

சாயபு :—வண்டி தொட்டிலே.

தட்சணாமூர்த்தி :—அங்கிருந்து ஸ்டேஷனுக்கு கிட்ட வாச்சுதே, ஏன் இங்குவந்துபோகவேண்டும்.

சாயபு :—வண்டியெ புள்ளா கோவுலெண்டே கொண்டார்ந்து நிர்த்தச்சொல்லி, ஓர்த்தர் வண்டிலே ஒக்காந்திகினு, உன்னொர்த்தர் நம்பதோட்டத் உள்ளேபோனாங்கோ.

அப்றம் கொஞ்சநேரம் பொர்த்து ஒரு அம்மாளெ இட்டுகினிவந்து வண்டிலே ஏறசொன்னுங்கோ. அந் தம்மா தலெகுனிஞ்சுகின்ஹ, பயந்துகினி வண்டிலே ஏற்னுங்கோ.

தட்சணாமூர்த்தி :—பிறகு என்ன நடந்தது.

சாயபு :—வண்டியெ ரொம்ப ஜல்தி ஜல்தி ஓட்சொல்லி கோவிச்சிகினுங்கோ. நம்போ அண்ணக்கி வீணு குதிரையெ அடிச்சி கொண்ணூட்டான். ஜாட்டி கூட ஒடஞ்சி பூட்டான்.

தட்சணாமூர்த்தி :—அவர்களை எப்பொழுது ஸ்டேஷனில் சேர்த்தாய்.

சாயபு :—நமபொ 9¼-மணிக்கி கொண்போய் உட்டுட்டான்.

தட்சணாமூர்த்தி :—இறங்கின பிறகு ஸ்டேஷனுக்குச் சென்றார்களா வேறே எங்காவது சென்றார்களா ?

சாயபு :—இறங்னதும் படுத்திகாத் கோசரம் ராம்சாமி மொதலியார் சத்ரத்கு போனுங்கோ. அவுங்கொ இறங்னதும் நம்போ கூலியே வாங்கிகினு தொட்டிக்கி வந்தூட்டான்.

தட்சணாமூர்த்தி :—அவர்கள் வண்டியில் என்ன பேசிக் கொண்டார்கள்.

சாயபு :—என்னமோ அங்ரீஜ்லேபேசினுங்கோ. அதுநம்பள்கி தெரிஞ்சா இல்லே.

தட்சணாமூர்த்தி :—அவர்கள் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து நீ என்ன தெரிந்து கொண்டாய்.

சாயபு :—அம்மாத்ராம் நம்பள்கி தெரிஞ்சா வண்டி ஏன் ஓட்ரான் சாமீ ?

தட்சணாமூர்த்தி :—அவர்கள் ஏதாகிலும் ஊர் பெயராவது தெருபெயராவது பேசிக்கொண்டார்களா?

சாயபு :—அவுங்கோ பேசிக்கினத்லே ரெண்டு மூனு வாட்டி பெங்ளூரின்னுங்கோ. ஆனா அந்தம்மா சொம்மா தலெகுனிஞ்சுகினு ஒக்காந்திருந்தாங்கோ.

தட்சணாமூர்த்தி :—நான் பிரசுரம் செய்தபடி உனக்கு 50 ரூபாய் கொடுக்க யாதொரு தடையுமில்லை. உன் பெயரென்ன.

சாயபு :—மஹாராஜ் நம்பொ பேர் காதர்மோதீன்.

தட்சணாமூர்த்தி :—அதைத் தன் கைப்புத்தகத்தில் குறித்துக்கொண்டு 50-ரூபாய்களை எண்ணி, சாயபுவிடம் கொடுத்தார். அவன் அதை அதிக சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டு "மஹாராஜ்! நீங்கோ அல்லா தயவ்லே நாகூர்மீரா தயவ்லே சந்தோசமா யிருக்ணும்" என்று சொல்லிப் போய்விட்டான்.

கணவன் கொலைசெய்யப்பட்டிறந்த இரண்டுமாதத்திற்கெல்லாம் புத்திரியையும் இழந்த விசாலாக்ஷி மனமுடைந்து அகாலமரணத்தை அதிசீக்கிரத்தி லடைந்தாள்.

# அத்தியாயம் 8.

## துப்பு துலக்கல்.

ஒரு நாட் காலை தக்ஷணாமூர்த்தி எதிராஜுலு நாயுடு வினது வெற்றிலைபாக்குக் கடைக்கெதிரில் கண்டெடுத்த கடிதத்தின் துப்பை துலக்கும் பொருட்டு தாமோதர முதலியாரிடம் சம்பாஷிக்கலானார்.

தட்சணாமூர்த்தி :—ஐயா! உங்களுக்கு தெரிந்தவர் யாராவது கெஜபதி என்ற பெயருடையவர் இருக்கிறாரா?

தாமோதர முதலியார் :—அந்தப் பெயருடன் எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் கிடையாது.

தட்சணாமூர்த்தி :—அல்லது பசுபதி என்னும் பெயருடையவராவது தெரியுமா?

தாமோதர முதலியார் :—எனக்குத் தெரியாது.

தட்சணாமூர்த்தி :—ஐயா! பதி என்று முடியக்கூடிய பெயரை உடையவர் யாராவது உமக்குத் தெரியுமா?

தாமோதர முதலியார் :—இப்பொழுது ஞாபகம் வந்தது. ரகுபதி என்ற பெயரையுடைய என் அத்தைபிள்ளையொருவனிருக்கிறான். அவனுக்கும் என் தகப்பனாருக்கும் மனஸ்தாபமுண்டு.

தட்சணாமூர்த்தி :—எதைப்பற்றி?

தாமோதர முதலியார் :—என் தங்கை மோகனாம்பாளை அத்துஷ்டனுக்குக் கொடுக்க என் தகப்பனாருக்கு இஷ்டமில்லை. ஆனால் அவனுக்கு மாத்திரம் மோகனத்தையே கலியாணம் செய்துக்கொள்ள வேண்டுமென்ற

பிரியம் உண்டு. அவன் என் தகப்பனாருக்கு அடிக்கடி இதைப்பற்றி கடிதம் எழுதுவான்.

தட்சணாமூர்த்தி :—சரி அதிருக்கட்டும். உமது நண்பர் ராஜ ரத்தினம் இப்பொழுது எங்கிருக்கிறார்.

தாமோதர முதலியார் :—பூனாவிலிருக்கிறார்.

தட்சணாமூர்த்தி :— அங்கென்ன செய்கிறார்.

தாமோதர முதலியார் :—ஜீஜீபாய் அண்டு சன்ஸில் சூப்ரண்டாக விருக்கிறார.

தட்சணாமூர்த்தி :—அவர் எப்படிப்பட்டவர்.

தாமோதர முதலியார் :—எனது நண்பர் மிகவும் சாந்தகுண முடையவர். பிறர் பொருளை தூசாக மதிப்பார். கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைவார்.

தட்சணாமூர்த்தி :—அவர் உங்களுக்கு கடிதமெழுதும் வழக்க முண்டா.

தாமோதர முதலியார் :—ஏன் ! நேற்றையதினங்கூட அவரிட மிருந்து ஒரு கடிதம் வந்தது.

தட்சணாமூர்த்தி :—அதில் என்ன எழுதியிருந்தார்.

தாமோதர முதலியார் :—எங்கள் எல்லாருடைய க்ஷேமத்தை யும் விசாரித்திருக்கிறார். எனக்கெப்பொழுது கலியாண மென்றும் கேட்டிருக்கிறார்.

தட்சணாமூர்த்தி :—உன் தங்கையைக் குறித்து ஏதாவது எழுதி யிருக்கிறாரா ?

தாமோதர முதலியார் :—அவர் எங்கள் வீட்டிலிருப்பவர்க ளுக்கெல்லாம் நன்றாய்த் தெரிந்திருப்பவ ராதலால்

எல்லோரையும்போலவே என் தங்கையின் க்ஷேமத்தையும் விசாரித்திருக்கிறார்.

தட்சணாமூர்த்தி :—நானில்லாதபோது எனக்கு வரும் கடிகடிதங்களை வாங்கிவையுங்கள்.

தாமோதர முதலியார் :—அப்படியே ஆகட்டும். உங்களுக்கு நேற்று ஒரு தந்திவந்ததே அது என்ன சமாச்சாரம்.

தட்சணாமூர்த்தி :—சிதம்பரம் தீனதயாளு நாயுடு அம்பலவாண செட்டியாரிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கிக் கொடுக்காததால், அவர் நாயுடுமேல் வாரெணட் எடுத்தபோது அவர் யாருக்கும் தெரியாமல் பட்டணம் வந்துவிட்டாரென்றும், அவரைக் கண்டுபிடிக்க அநேக போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பாடுபட்டும் ஒன்றும் பயன்படாததால் என்னைக்கண்டு பிடிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

தாமோதர முதலியார் :—அந்த நாயுடுவைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தீர்களா ?

தட்சணாமூர்த்தி :—இல்லை.

இவர்கள் பேசி முடிந்ததும் ஒரு வேலைக்காரன் இரண்டு தட்டுகளில் பலகாரமும், இரண்டு கப் காப்பியும் கொண்டுவந்து வைத்தான். தாமோதர முதலியார் வெளியே போகவேண்டி யிருந்தபடியால், இருவரும் அதனை உடனே புசிக்கலானார்கள். பிறகு அவ்வேலைக்காரன் அவர்கள் கையலம்ப ஒரு பாத்திரத்தில் ஜலமும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, கிராம்பு, ஏலக்காய் வைத்திருந்த ஓர் தட்டும் கொண்டுவந்து வைத்தான். அவர்கள் தாம்பூலம் போட்டுக்கொண்டு, அவரவர்கள் வேலையைப் பார்க்க வெளியே சென்றார்கள். பிறகு இருவரும் இரவு

8-மணிக்குள் வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். அன்றிரவு இராப்போஜனம் செய்தபின்பு தாமோதர முதலியார் தன் தகப்பனார் அகாரணமாய்க் கொலைசெய்யப்பட்டதையும், தன் தங்கை உயிருடன் விட்டுப் பிரிந்திருப்பதையும், தன் தயார் அகால மரணமடைந்ததைப் பற்றியும் நினைத்துக்கொண்டு யாருடனும் பேசாதுபோய் தன் படுக்கையறையிலுள்ள ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

அன்றிரவு தக்ஷிணாமூர்த்தியும் தனக்கு விட்டிருந்த அறையில் காற்றில்லாமையால் வெளியே அவ்வறையின் வாயற்படியில் படுத்துக்கொண்டு, தான் துப்புதுலக்க வேண்டிய விஷயங்களை மனதில் நினைந்து யோசித்துக் கொண்டிருந்தார். மணி பனிரெண்டாகியும் அவர் தூங்கவே யில்லை

(திருடர்களில் அநேக வகுப்பினர் உண்டு; சிலர் யாருக்கும் தெரியாமல் இரவில் வந்து திருடிக்கொண்டு போவார்கள். சிலர் தாங்கள் வருவதாகக் கடிதம் எழுதிப் பின்வந்து திருடுவார்கள். மற்றும் சிலர் தீவட்டி கொண்டுசென்று திருடுவார்கள். எல்லோரிலும் மேம்பட்டவர் கௌரவதிருடர்கள்(Gentlemen roughs)என்போரே யாவர். இவர்களைப் பார்த்து, சந்தேகிக்கவே இடந்தராது. இவர்கள் கணுக்காலுக்குக் கீழ் தொங்கும்படியான மெல்லிய வெள்ளை வஸ்திரத்தையும், ஜிப்பா என்று சொல்லக் கூடிய ஓர் அங்கியும் தரித்திருப்பார்கள். அதற்குமேல் ஒரு சில்க் கோட்டும் தலையில் ஒரு (Felt) பெல்ட்கியாப்பும் போட்டுக்கொண்டிருப்பார்கள். கையில் (Wrist Watch) ரிஸ்ட்வாட்ச் என்று சொல்லப்படும் கைக்கடியாரமும், கட்டிக்கொண்டிருப்பார்கள். இவர்கள் ஒருவர் இருவரன்றி, நால்வரைவராகக் கூடிச் செல்வார்கள். பகலில்

தான் திருடுவார்கள். இவர்கள் அநேகமாய் வீடுகளில் திருடாது, ஜனங்கள் கூடியிருக்கும் திருவிழாக்களிலும், சந்தைகளிலும் திருடுவார்கள். இத்தகைய திருடர்கள் சென்னையில் அநேகமாய் மூர்மார்க்கெட் (Moore Market) டிலும், குஜிலி (Evening Bazaar) யிலும் வாசம் செய்கிறார்கள். கும்பலில் ஒருவன் ஒரு நகையைத் திருடிவிட்டால் அவன் மற்றொருவனிடத்தில் கொடுக்க கைமாறிவிடும். பிறகு நகை கைக்குக்கிட்டுவதரிது.)

பேயும் கண்ணுறங்கும் நள்ளிரவில் நான்கு திருடர்கள் சதாசிவ முதலியாரின் வீட்டுவாசலில் நூலேணி வழியாக இறங்கினார்கள். பிறகு அங்கிருந்து மெத்தையின்மீதுள்ள ஹாலுக்குச் சந்தடிசெய்யாமல் ஒருவர்பின் ஒருவராக நுழைந்தார்கள். எல்லோரும் கருப்பு உடையணிந்திருந்தனர். ஒருவன் கையில் கத்தியும், கோடாலியும், மற்றொருவன் கையில் ஒரு சாவிக்கொத்துமிருந்தது. மற்றிருவரும் வெறுங்கையோடு வந்திருந்தார்கள். அவர்கள் தட்சணாமூர்த்தி தலைக்கு நேராகவிருந்த அறையைநோக்கி வந்தார்கள். புதையல் தோண்டப்போய் பூதத்தைக் கண்டால் ஒருவன் எவ்வளவு வருத்தமடைவானோ அவ்வளவு வருத்தத்துடன் அவர்கள் அவ்விடத்திலேயே நின்றுவிட்டார்கள். ஏனெனில், தட்சணாமூர்த்தியைத் தாண்டிக் கொண்டு அவ்வறையினுள் நுழைவது அசாத்தியமாயிருந்தது.

ஒருவன் :—அடே நாம் வந்தது சரியான வேளையல்லடா.

இரண்டாந் திருடன் :—ஏன் அண்ணேன்.

மு-தி :—இதோ இங்குருண்டு கிடக்கும் கட்டையைப்பார்.

மூன்றாந் திருடன் :—நானும் அதைப்பற்றிதான் யோசிக்கிறேன்.

நான்காம் திருடன் :—நமக்கின்னு இவன் எங்கிருந்துவந்து தொலைஞ்சான்.

மு-தி :—இப்போ என்ன செய்யலாம்.

இ-தி :—செய்ரதென்ன, திரும்பாதுதான்.

மூ-தி :—இவன் என்ன கும்பகர்ணனைப்போல கொர்ட்டை யிட்றான்.

நா-தி :—நமது காரியமாவதெப்படி.

மு-தி :—இன்னொருநாள் தான் யாத்துகணும்.

இ-தி :—அப்பவும் இந்த சனியன் இருந்தா ?

மூ-தி :—அண்ணைக்கு ஆயுதத்தோடேவந்து மொதல்லெ ஆளைப்பாத்துகினு (கொன்றுவிட்டு)உள்ளே நுழைய வேண்டியதுதான்.

நா-தி :—சரி வாங்கோ போலாம். என்று நால்வரும் நாலேணி வழியாய் வாசலுக்கு வந்தார்கள்.

இவர்கள் வீதியை யடையுமுன் தட்சணாமூர்த்தி பிச்சைக்காரக் கிழவனைப்போல் தாடி மீசை யணிந்து இடுப்பில் ஒரு கிழிந்த துணியைச்சுற்றிக்கொண்டு பக்கத்து வீட்டுத்திண்ணைமேல் படுத்திருந்தார். திருடர்கள் தாங்கள் வந்தகாரியம் ஜெயமாகாமையால் வருத்தத்துடன் தம திருப்பிடம் சேர்ந்தார்கள். தட்சணாமூர்த்தியும் அவர்களுக்குத் தெரியாமல் பின்பற்றிச்சென்று அவர்களுடைய இருப்பிடத்தை யறிந்துகொண்டு ஒருவருக்கும் தெரியாமல் தன் படுக்கையில் வந்து படுத்துக்கொண்டார். மறுநாள் பொழுது விடிந்ததும் தட்சணாமூர்த்தி அதி அவசரமாய் காப்பி சாப்பிட்டு விட்டு புரசைவாக்கம் போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று நான்கு உடுப்பில்லாத சேவகர்களை

யழைத்துக்கொண்டு தான் முன்னிரவு பார்த்து விட்டு வந்த வீட்டினருகிற்சென்று அச்சேவகர்களை ஓர் மறைவான இடத்தில மறைந்திருக்கச்சொல்லி தான் ஓர் பைத்தியக்காரன் வேடம்பூண்டு அவ்வீட்டிற்குட்சென்றார். அவர் உடம்பெல்லாம் மண்பூசிக்கொண்டு வாயில் வந்தபடி எல்லாம் உளறிக்கொண்டே உள்ளே இருப்பவர்களை நோக்கினார். அங்கே வசித்துவந்த நான்கு திருடர்களும் ஒரே குரலாய், அடேயாரடா தடியா, உன்னையார் உள்ளே வரச்சொன்னது நீ இங்கே என்னவேலையாய் வந்தாய் என்று கேட்டார்கள். பைத்தியக்காரன் அவர்கள் கேட்டதற்கு பதில்சொல்லாமல் அரிசியேன் அதிகவிலையாய்விட்டது என்று அவர்களைக்கேட்டான். அவர்கள் "இவன் யாரடா கர்வம் பிடித்தவனா யிருக்கிறான்" கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் அதனப்பிரசங்கித்தனம் செய்கிறான் என்று சொல்லிக்கொண்டே இவனையடிக்க வந்தார்கள். அதைக்கண்டு இவன் பயப்படாமல் "ஆறுமுகவடிவேலவனே" என்று காவடிச்சிந்திலுள்ள ஒரு பாட்டைப்பாட ஆரம்பித்துவிட்டான். இவன் பைத்தியக்காரன் என்றறிந்த அவர்கள் இவனை அழைத்துக்கொண்டுபோய் கூடத்தில் உட்காரவைத்துக்கொண்டு கேலிசெய்ய வாரம்பித்தார்கள்.

கள்வர் தலைவன் :—அடே நீ இங்கு என்னவேலையாய் வந்தாய் ?

பைத்தியக்காரன் :—மைலாப்பூரிலிருந்து திருவொற்றியூருக்கெத்தனை தூரமென்று தெரிந்துகொண்டுபோக.

இ-தி :—உம்பேரென்னடா :

பைத்திய :—சாப்பாட்டு ராமசாமி.

மூ-தி :— நீ என்ன விளையாடுகிறாய். அப்படிகூட எங்கே யாவது பேரிருக்குமோ, சீதாராமன், கல்யாண ராமன், ஜானகிராமன் என்றிருக்கும்.

பைத்திய :—நான் சிறு குழந்தையாயிருந்தபோது சரியாக சாப்பிடாததினால் என்னுடைய தாயார் நான் நன்றாய் சாப்பிட்டால் ஸ்ரீராமருக்கு ஒருதளிகை விடுவதாக பிரார்த்தித்துக்கொண்டார்கள். அதுமுதல் நான் நன்றாய் சாப்பிட வாரம்பித்தேன். பிறகு ஸ்ரீராமருக்கு ஒரு தளிகைவிட்டு எனக்கும் சாப்பாட்டு ராமன் என்று பேரிட்டார்கள்.

இதைக்கேட்ட திருடர்களெல்லாம் சிறிதுநேரம் வயறுபுண்பட சிரித்தார்கள்.

கள்வர் தலைவன் :—அடா பயலே உனக்கு கலியாணமாயிற்றா ?

பைத்திய :—கலியாணமா யிருந்தால் பெண்டாட்டியை விட்டு விட்டு இவ்விளவுதூரம் உங்களைத்தேடிக் கொண்டு வருவேனா. அதை என்னைக் கேட்காமலே நீங்களே தெரிந்து கொள்ளக்கூடாதா.

பைத்தியக்காரன் திருடர்களோடு விளையாட்டாகப் பேசிக்கொண்டே சரியான அன்ன ஆகாரமின்றி ஒரு சிறு அறையில் அடைக்கப்பட்டிருந்த ஒருமனிதனை கவனித்துக் கொண்டிருந்தான். நான்காம் திருடன் மற்ற திருடர்களைப் போல் பைத்தியக்காரனோடு விளையாடாமல் அவனையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தான். அடைக்கப்பட்டிருந்த மனிதனையே கவனிப்பதைக்கண்ட அத்திருடன் திடீரென எழுந்து அவன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு

"அடே நீ யார்! வந்த வேலையைத் தெரிவிக்கிறாயா அல்லது இத்துப்பாக்கிக் கிரையாகின்றனையா வென்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த ஓர் சிறு கைத்துப்பாக்கியை அவனுக்குக் காட்டினான். இதற்குள்ளாக மற்ற திருடர்கள் ஒன்றும் அறியாத அப்பைத்தியக்காரனை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று சொல்லிக்கொண்டே அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டார்கள். பிராணபத்துக்குள் சிக்கிக்கொண்ட பைத்தியக்காரன் சற்றேனும் சஞ்சலமின்றி தன மடியிலிருந்த ஒரு சிறு ஊதுகுழலை (Whistle) எடுத்து எங்க ஊர் ரெயில் போவதற்கு முந்தி இப்படித்தான் கூவும் என்று சொல்லிக்கொண்டே அதை ஊதினான். அச்சத்தம் எப்பொழுது கேட்குமென்று வெளியில் காத்துக்கொண்டிருந்த சேவகர்கள் சிங்கலியர்களைப்போல் திடுதிடென்று அக்குடிசைக்குள் ஒருவர் பின் ஒருவராக நுழைந்தனர். திருடர்கள் தாங்கள் எவ்வளவோ பெரிய கொலைகளையும், களவுகளையும் செய்து ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமல் தாங்கள் பைத்தியக்காரன் என்று எண்ணியிருந்தவன் சூதாக செய்த சூழ்ச்சியினால் ஆச்சரியத்துடனும், சேவகர்களைக் கண்ட பயத்துடனும், ஒன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்து நின்றார்கள் உடனே சேவகர்கள் யாதொரு கஷ்டமுமின்றி வெகு சுலபமாக அத்திருடர்களுக்கு விலங்கிட்டு, பிறகு ஒருவர் அடைபட்டிருந்த அவ்வறையின் கதவுகளை உடைத்து ஒரு குற்றமும் அறியாத அவரை அக்கடுஞ்சிறையினின்றும் மீட்டுவித்து, திருடர்கள் யாவரையும் போலீஸுக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

சதாசிவ முதலியார் நெடுநாளாக திருடர்கள் வீட்டில் அடைக்கப்பட்டிருந்தா ராதலினாலும், சரியான அன்ன

கார மில்லாமையாலும், அப்பாதகர்கள் என்ன தீங்கு விளைவிப்பார்களோ என்று பயந்திருந்ததாலும் தேகம் மெலிந்து, முகம் வெளுத்து, தாடியும் மீசையும் அதிக மாய் வளர்ந்து பார்ப்பதற்கு விகாரமா யிருந்தது. அவர் தேகம் ஜலத்தைக் கண்டு அதிக நாளான தாகையால் அழுக்கு அடர்ந்திருந்தது. அவர் சிறையினின்றும் விடு விக்கப்பட்டபொழுது அழுக்கடர்ந்த ஒரு கிழிந்த துணி யைக் கட்டிக்கொண்டிருந்தார். அவர் எப்படி அங்கு காலங்கழித்தனரோ என்று நாம் யோசிக்கும்போது நமக்கு பயங்காமும், அவர்மேல் பரிதாபமும் தோன்றும். அவர் சிறையிலிருந்த ஒவ்வொரு நிமிஷமும் தன்னரு மைப் புதல்வனையும் புதல்வியைப்பற்றியுமே நினைத்திருந் தார்.

உடனே தட்சணாமூர்த்தி அவரை ஸ்நானம் செய் வித்து, நல்ல உடைகளைக் கொடுத்து, அவரை அருந்து வித்தார். பிறகு சதாசிவ முதலியாருக்குத் தான் இன்னா னென்று தெரிவித்துக்கொண்டு சிறிது காலம் தன்னிஷ் டப்படி நடக்கும்படி வேண்டிக் கொண்டார். அதற்கு அவர் அக்கொடும் பாதகரினின்றும் தன்னை மீட்டுவித்த கருணாநிதியின் கட்டளைப்படி நடப்பதாக வாக்களித்தார்.

தட்சணாமூர்த்தி :—ஐயா ! தாங்கள் இன்னும் சில நாள் வரையில் தனியாக ஓர் இடத்தில் வசித்து வரவேண் டும்.

சதாசிவ முதலியார் :—என்ன ! இது வரையில் இருந்தது போதாதா, இன்னுமா நான் என் குழந்தைகளை விட் டுப் பிரிந்திருக்கவேண்டும்.

தட்சணாமூர்த்தி :— ஆம்! இப்பொழுது என் சொற்படி யிருந்தால்தான் பிறகு உங்கள் வீட்டிற்குப்போய் நீங்கள் குழந்தைகளுடன் சந்தோஷமாய் வாழ்ந்திருக்கக் கூடும்.

சதாசிவ முதலியார் :—ஆனால் என் குழந்தைகளைப் பார்க்காமல் என்ன செய்யச் சொல்லுகிறீர்?

தட்சணாமூர்த்தி :—நான் திருவொற்றியூரில் தங்களுக்கு ஒரு வீட்டை வாடகைக்கு அமரத்தித்தருகிறேன். அதில் தாங்கள் சுகமாயிருந்து வரவும்.

சதாசிவ முதலியார் :—ஆனால் நான் அங்கு தனியாய் வசிப்பதென்றால் எப்படி, என்னிடத்தில் ஒரு காசுமில்லையே. அந்தப்பாதகர்கள் கடைசியாக என் ஜேபியிலிருந்த 150 ரூபாய்களையும் எடுத்துக்கொண்டு என்னை இப்பாடு படுத்தினார்கள். நான் தனிமையாக அங்கு போஜனத்திற்கு என்ன செய்கிறது.

தட்சணாமூர்த்தி :—அதைப்பற்றி நீங்களொன்றும் கவலைப் படவேண்டாம். அதை எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கு சாப்பாடு ஓட்டலிலிருந்து வரவழைத்து தரும்படி ஏற்பாடு செய்விக்கிறேன். ஆனால் நீங்கள் சாப்பிட்டுவிட்டு வெளியில் உலாவாமலும், இன்னாரென்று யாருக்கும் தெரிவித்துக் கொள்ளாமலும், வெளி தேசத்திலிருந்துவந்த ஒரு வழிப் போக்கனைப்போல் நடந்துகொள்ள வேண்டும்.

சதாசிவ முதலியார் :—நான் எத்தனை தினங்களுக்கு ஆம் மாதிரி இருந்து வரவேண்டும்.

தட்சணமூர்த்தி :—இவ்வளவு நாட்களாகுமென்று என்றால் வரையறுத்துக் கூற முடியாது. ஆனால் கூடிய சீக்கிரத்தில் நான் கொண்டகாரியம் கைக்கூடுமென்று நம்புகிறேன்.

சதாசிவ முதலியார் :—ஆனால் நான் உங்களை ஒன்று வேண்டிக்கொள்வதாவது, நீங்கள் கைக்கொண்ட காரியத்தை சீக்கிரத்தில் முடித்து, என்னை வீடு சேர்ப்பிக்கவேண்டும்.

தக்ஷணமூர்த்தி ஆ ஹா ! அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, தான் கூறிய வண்ணம் திருவொற்றியூரில் அவருக்கொரு தனி வீடு அமர்த்திக் கொடுத்து, தக்க ஏற்பாடுகளும் செய்துவைத்தார்.

பிறகு தட்சணமூர்த்தி வண்டிக்கார காதர்மோதீன் சாயபுவிடமிருந்து அறிந்துகொண்ட விஷயங்களை பரிசோதிக்கும் பொருட்டு, பெங்களூருக்குப்போக பிரயத்தனப்பட்டார். ஆனால் அவர் தாமோதர முதலியாரிடத்தில் தான் ஒருவேலையார்த்தமாய் பெங்களூருக்குப் போகவேண்டுமென்றும் தனக்கு வரும் கடிதங்களையும், தந்திகளையும், பெங்களூர் கண்டோன்மென்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவைக்கும்படிச் சொன்னார். தட்சணமூர்த்தி பெங்களூருக்குச் சென்று, அங்குள்ள கண்டோன்மென்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி அய்யங்காரைக்கண்டு தனக்கு வரும் கடிதங்களை வாங்கி வைக்கும படி சொல்லி, மேலும் தான் அங்குவந்த காரியத்தையும் அவருக்குத் தெரிவித்து தனக்கு வேண்டியபோதெல்லாம் சகாயமும செய்யுமபடி வேண்டிக்கொண்டார்.

இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி அய்யங்காரோ வேலையில் அதிக சாமர்த்தியசாலியா யில்லாவிட்டாலும் அதிக சாமர்த்தியவான்போல் காட்டிக்கொள்வார். இவர் சந்தர்ப்பமிலலா சமயங்களில்கூட தனக்கு கீழ்ப்படிந்த உத்தியோகஸ்தர்களிடத்தில் தன்னைப்பற்றி தற்புகழ்ச்சியாக தான் அநேக கொலைக்கேஸுகளை அதிநுட்பமாக கண்டுபிடித்ததாகவும், அநேக நாட்களாக யாராலும் கண்டுபிடிக்க முடியாமல் விட்டுவிட்ட திருட்டுக்கேஸுகளை எல்லாம் தான் அதிக சாமர்த்தியத்தோடும் தைரியத்தோடும் கண்டுபிடித்ததாகக் கூறி அளவிறந்த ஆனந்தமடைவார். இவர் கொஞ்சம் வயது தளர்ந்தவராதலாலும், பருத்த தேகத்தை யுடையவராதலாலும், கம்பீரமான பார்வையுடையவராதலாலும், இவர் உடுப்பை உடுத்திக்கொண்டு நிற்கும்பொழுது இவரைக் கண்டவனைவரும் அலுக அஞ்சுவார்கள். பார்த்தசாரதி அய்யங்கார், கல்வி அறிவில்லாத கூலியாட்களிடத்திலும், யாசகம் செய்து ஜீவிக்கும் பிச்சைக்காரர்களிடத்திலும் தன் அதிகாரத்தை அளவுக்குமிஞ்சி செலுத்துவார். இவர் கன்னத்தில் அறையும் வேலையையும், காலால உதைக்கும் தொழிலையும் சிறிதேனும் கஷ்டமில்லாமல் அதிக துரிதமாகச் செய்வார்.

பெங்களூரில் பெரிய மரங்களடர்ந்த ஓரிடத்தில் ஒரு சத்திரமுண்டு. அச்சத்திரம் கட்டி அதிக நாட்களானபடியாலும், அதை கவனிப்பார் யாருமில்லாதபடியாலும் அது பாழடைந்திருந்தது. அச்சத்திரத்தின் வழியாக யாரும் போக்குவரவுகிடையாது. யௌவன ஸ்திரீகளும், பாலர்களும் அவ்வழியே தனித்துச்செல்ல அஞ்சுவார்கள். அவ்விடம் பண்டாரம் என்று பெயரை வைத்துக்கொண்டு வயிற்றை வளர்த்துவருபவர்களும், வேலை செய்து ஜீவனம

செய்ய உடம்பு வணங்காத சோம்பேறிகளும் தங்குவ தற்கு ஓர்வசதியான ஸ்தலமாயிருந்தது. அங்குதான் அவர் கள் வீண்பேச்சுப்பேசி காலம் போக்குவது வழக்கம்.

தட்சணாமூர்த்தி பெங்களூரை யடைந்த பிறகு, எண் ணிறந்த பொத்தல்களையுடைய ஒரு அழுக்குவஸ்திரத்தை அணிந்துகொண்டு, ஒரு கறுத்த மலையாளத் துண்டை தேகத்தில் போர்த்திக்கொண்டு க்ஷௌரம் செய்துக் கொள்ளாமல் தலையிலும் முகத்திலும் மயிரை வளர்த்திக் கொண்டு பெங்களூரிலுள்ள ஒவ்வொரு வீதி வழியாகவும், கடைகளின் பக்கமாகவும், ஜனக்கூட்டமுள்ள இடங்களி லும் சென்று காலங்கழித்து வந்தார். தக்ஷணாமூர்த்தி அனுதையான ஒரு சோம்பேறியைப்போலும், லாகிரி வஸ் துக்களை உபயோகித்து மயக்கங் கொண்டவன்போலும் தோன்றினர். அவருடனே எப்பொழுதும் பழகிவரும் அவருடைய சினேகிதர்கள் அவரைக் கண்டாலுங்கூட தெரிந்துகொள்ள மாட்டார்களென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

ஒருநாட் காலை தட்சணாமூர்த்தி முன்புகூறிய சத்திரத் தின் வழியாக போய்க்கொண் டிருக்கும்போது மழை பெய்ய வாரம்பித்ததால் அச்சத்திரத்தில் தங்க சென்றார். அன்றையதினம் ஒருவன் தவிர, மற்ற எல்லோரும் காலைக் கடனை முடிப்பதற்கும், தந்தசுத்தி செய்வதற்கும் வெளியே சென்றிருந்தார்கள். ஆனல் ஒருவன் மாத்திரம் அச்சத் திரத்தின் திண்ணையின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு கஞ்சா இலையை உள்ளங்கையில் வைத்து கசக்கிக்கொண் டே "நாம் பட்டணத்திலிருந்துவந்து அநேக நாட்களாகி விட்டன. நம்முடைய தாய் தந்தையர்களும், சினேகிதர்க

ளும் எப்படி இருக்கிறார்களோ ? மோகனும்பாளுக்கு விவாகமாய்விட்டதோ என்னமோ தெரியவில்லை. இதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் பட்டணந்தான் செல்லவேண்டும். ஆனால் பட்டணஞ்சென்றால் நமக்கு ஆபத்துநேரிடுமே, ஆகையால் இங்கிருந்து வாழ்நாட்களை கழிப்பதே நலம்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டிருந்தான்.

அவன் ஒரு சுத்த சாயவேஷ்டியை தரித்து தலையில் ஒரு துண்டை சுற்றிக்கொண்டிருந்தான். அவன் முகம் வருத்தத்தையும், ஆழ்ந்தசிந்தனையையும் குறித்தது. அவனது இடதுகையில் ரகுபதியென்றும், வலதுகையில் ஒரு ஸ்திரீயின் உருவமும் பச்சைக்குத்தி யிருந்தது. அவனைப்பார்த்தால் ஒரு நல்ல குடும்பத்தைச் சார்ந்தவன் போல் தோன்றும். அவனுடைய வயதோ இருபத்திரண்டு அல்லது இருபத்தி மூன்றிருக்கும்.

அவன் சொன்னதை எல்லாம் சற்று தூரத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்த தட்சணாமூர்த்தி ஒன்றுந் தெரியாதவர்போல் அவனருகிற் சென்று "என்னப்பா பொயப்பெ கெடுக்க காத்தாலேமயபுடிச்சிகிச்சி, ஒருதம் கொடுநாய்னா" என்று சொன்னார்.

ரகுபதி இந்த மழை வெளியே போகவிடவில்லை என்று சொல்லிக்கொண்டே கஞ்சா இலையும் நெருப்பும் போட்டுள்ள ஒரு சிறு மண்குழையை வாயருகில் வைத்து இரண்டுதரம் புகையை இழுத்துக்கொண்டே தக்ஷணாமூர்த்தியிடம் கொடுத்தான்.

தக்ஷணாமூர்த்தி அதை வாங்கி உண்மையாகவே புகையை உள்ளுக்கிழுப்பவர்போல் பாவனை செய்து

கொண்டே குழையை வாயில் வைப்பதும் எடுப்பதுமா யிருந்தார்.

தக்ஷணாமூர்த்தி :—இந்த சத்ரம்கண்டி இல்லாப்போனு காணுமபலே தொப்பகட்டையா நனைஞ்சிபூட்டிருப் பேன். இது எந்தபுண்ணியவா கட்ன சத்ரமோ.

ரகுபதி :—இந்தச் சத்திரமானது பட்டணம் காளி ரத்தின செட்டியாரால் கட்டப்பட்டது.

தக்ஷணாமூர்த்தி :—என்ன போப்பா இந்த ஊரைப்பத்தி நமக்குஒண்ணும்தெரிலே. நானுவந்து மூணுநாளாச்சி

ரகுபதி:—நமது எந்த ஊர் ?

தக்ஷணாமூர்த்தி :—நமதாப்பா ! புச்சேரி.

ரகுபதி :—என்ன வேலையாய் வந்தாய்?

தட்சணாமூர்த்தி :—வேலே ஒண்ணுமில்லே நாய்னு. நம்போ சுமமா ஊர் ஊரா சுத்ரதுதான் வேறென்ன.

ரகுபதி :—என்னிடஞ் சொல்ல அஞ்சுகிராப்போலிருக்கி றது. உண்மையை சொன்னுலென்ன, நான்மாத்தி ரம் இந்த ஊரானு.

தட்சணாமூர்த்தி :—அப்படி ஒண்ணும் இல்லே.

ரகுபதி :—இவ்வளவுசொல்லியும் நிஜத்தைசொல்ல அஞ்சு கிருயே.

தட்சணாமூர்த்தி :—ரொம்பநாளா எனக்கு ராம் சிங் யின்னு ஒரு விரோதி இருந்தான். அவனெ இரண்டு வருஷத் துக்குமுன்னே ஒருநாள் ராத்திரி யார்க்கும் தெரி யாம கொலே பண்ணிட்டேன். அப்புறம புறப்பட்டு இந்தமாதிரி வெளியே வந்துட்டேன். இப்போ ஊருக்

குப்போய் அம்மா நாய்னுவை பாக்குணுமுண்ணு ஆசை, போனு மாட்டிக்கிவமே யிண்ணு பயமாகீது.

ரகுபதி :—உன் பெயரென்ன?

தக்ஷணுமூர்த்தி :—எம்பேரு பாலன்.

ரகுபதி :—நீ எந்த; குலம்.

தக்ஷணுமூர்த்தி :—நானு ஜாதியிலே நாய்க்கன்......நாய்னு உன்னே பாத்தா யாரோ பெரியமனுஷன் வீட்டு பிள்ளெபோலகீது......நீ கேட்டபடிநானு ஒண்ணும் மறைக்காதே உள்ள மர்மத்தே சொல்விட்டேன். அதுபோல நீயாரு இங்கே என்வந்தே, அத்தெ சொல்லணும். நம்ப ஒர்த்தர்க்கு ஒர்த்தர் 'பாத்துக்காதபோனு நம்மே யாரு காப்பாத்ரது.

ரகுபதி கஞ்சா மயக்கத்திலிருந்ததாலும், மாறு வேடத்திலிருந்த தக்ஷணுமூர்த்தி சொல்லியதை உண்மை என்று 'நம்பியதாலும், மதிமயங்கி"என்னுடைய மாமன் பட்டணத்தில் ஒரு பிரபலமான துபாஷ். அவருக்கு மோக னும்பாள் என்று ஒரு பெண்ணுண்டு. எனக்கு அந்தப்பெண் ணையே கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று எண்ணம். அதனுல் நான். அவரை அநேகதரம் நேரிலேயும், கடிதங்களின் மூலமாகவும் கேட்டேன். ஆனுல்என்னுடைய நடவடிக்கைகள் அவருக்குப் பிடிக்காததினுல் எனக்கு கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டார். ஆகையால அவர்மேலுண்டான கோபத்தினுல் ஒருநாளிரவு அவ ரைக் கொலேசெய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர் வழக்கமாக வரும்வழியில் காத்திருந்தேன். ஆனுல் அன் றிரவு பத்துமணிக்குமேல் யாரோ ஒருவர் அவ்வழியாகச் சென்றூர். அவர் ஏறக்குறைய என் மாமனேப்போலவே

யிருந்தார். நான் சற்றும் நிதானியாமல் அவசரத்தில் அவரைக் கொலைசெய்துவிட்டேன். பிறகு அங்கிருந்தால் என்ன கஷ்டம் நேரிடுமோவென்று இவ்வாறு வந்துவிட்டேன்

தட்சணாமூர்த்தி :—சரி! நாய்னு போனதைபத்தி நினைச்சி இப்போ என்ன பிரயோஜனம். நம்போ தலவிதி அப்படிகீது நாமென்ன செய்லாம்......அதிருக்கட்டும் எனக்கு ரொம்ப பசியாகீது என்ன செய்றது.

ரகுபதி :—எனக்குங்கூட இங்கே வந்தநாள் முதல்கொண்டு சரியான சாப்பாடுகிடையாது இங்கிருக்கும் பண்டாரங்கள் செய்யும் ஆகாரத்தில் எனக்கும் சிறிது கொடுப்பார்கள். சில சமயங்களில் என்னிடத்தில் இருக்கும் பணத்திற்கு ரொட்டி பழம் முதலியவைகளை வாங்கி சாப்பிடுவேன்.

தட்சணாமூர்த்தி "ஆனால், என்னண்டேகூட கொஞ்சம் துட்டுகீது, நானுபோய் துன்ரத்துக்கு எதாவது வாங்கியாறேன்" என்று சொல்லிவிட்டு சத்திரத்தினின்றும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்.

அங்கிருந்த இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி அய்யங்காருக்கும் சில கான்ஸ்டேபில்களுக்கும் தாள் ஒரு கொலையாளியைப் பிடிக்கப் போவதாகவும் அவர்களைத் தனக்கு சகாயஞ் செய்யும்படியும் வேண்டிக்கொண்டார். அவர்களும் அதற்கு சம்மதித்து அவருடன் சென்றார்கள்.

மறுபடியும் தட்சணாமூர்த்தி இவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு 11-மணிக்கெல்லாம் சத்திரத்தை அணுகினார். அதற்குள்ளாக வெளியில் சென்றிருந்த பண்டாரங்களும் திரும்பி வந்துவிட்டனர். எல்லோரும தங்க

ளுக்குவேண்டிய ஆகாரங்களை சித்தப்படுத்திக் கொண்டிருந்தனர். சிலர் கூட்டமாக கூடிக்கொண்டு பாட்டுகள் பாடிக்கொண்டிருந்தனர். ரகுபதி யாதொரு கவலையுமற்று அவர்களுடன் சந்தோஷமாய் இருந்தான். தட்சணாமூர்த்தி முதலில் சத்திரத்திற்குள் சென்று ரகுபதியிருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு, பிறகு மற்றவர்களையும் உள்ளே அழைத்துச் சென்றார். அவர்கள் எல்லோரும் ரகுபதிக்குத் தெரியாமல் பின்புறமாய் நின்றார்கள். ரகுபதி திரும்பிப்பார்த்து தன்னைச்சுற்றி போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டு ஒன்றும் சொல்ல நாவெழாமல் திகைத்து நின்றான். தட்சணாமூர்த்தி தன்னுடைய மாறுவேடத்தைக் களைந்துவிட்டிருந்தபடியால் ரகுபதிக்கு அவரை அறிந்துகொள்ள முடியவில்லை.

இ-பார் :—தம்பி எழுந்திரு.

ரகுபதி :—ஏன் ?

இ-பார் :—வேலையாகத்தான்.

ரகுபதி :—என்னவேலை ?

இ-பார் :—ஸ்டேஷனுக்குவா சொல்லுகிறேன்.

ரகுபதி :—நான் ஏன் வரவேண்டும் ?

இ-பார் :—ஏண்டா அதிகமாகப் பேசுகிறாய்......வாயென்றால் உட்கார்ந்துகொண்டு கதையெல்லாம் படிக்கின்றாய்.

கா-கரியப்பா :—சும்மா எழுந்திருண்ணா எழுந்திருப்பானா, கொடுக்கிறதே கொடுத்தா எழுந்திருப்பான்.

கா-மோபரப்பா :—எழுந்திருக்க முடியிலேபோல இருக்குது......தூக்கட்டா.

அதற்குள்ளாக க்ரியப்பா ரகுபதியின் மேலிருந்த ஒரு சிறு துணியால் அவனது இருகாங்களையும் ஒன்றாக சேர்த்துக்கட்டி வலதுகையை தனது இடது கையால் பிடித்துக்கொண்டான். மோபாப்பாவும் அவனது வலது காத்தால் ரகுபதியின் இடது காத்தைப் பிடித்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். தட்சணாமூர்த்தியும் பார்த்தசாரதி அய்யங்காரும் இங்கிலீஷில் பேசிக்கொண்டே அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும் அவனை ஓர் அறையில்விட்டு பூட்டிவிட்டார்கள் (Lock up).

ரகுபதிக்கு மயக்கம் தெளிந்தபிறகு தன்னோடு அன்று காலையில் பேசியிருந்த மனிதன் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தனென்று தான் மயக்கத்திலிருந்தபொழுது அவனுடன் உண்மையை உரைத்ததால் இவ்வளவு கெடுதி நேர்ந்ததென்றும் உணர்ந்துகொண்டான். அவனுக்குத் தன்னுடன் காலையில் சம்பாஷித்துக்கொண்டிருந்த மனிதன்மேல் கோபமும் இனி போலீஸ் உத்தியோகஸ்தர்கள் என்ன செய்வார்களோ என்ற பயமும் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்துக்கொண்டே வந்தது. அப்பொழுது தன்னுடைய கெட்ட நடவடிக்கைகளைக் கண்டு சீர்திருத்தாத தாய்தந்தையர்களையும், தன்னுடனிருந்து தான் துஷ்ட காரியங்கள் செய்யும்போது தன்னை உற்சாகப் படுத்திய நண்பர்களையும் திட்டினான். "நான் செய்த காரியத்தின் பயனை நானே அடைதல்தகுதி" என்று தன்னைத் தானே நொந்துகொள்வான். சில சமயங்களில் என் விதி இப்படியுமிருக்குமா என்று பெருமூச்செரிவான். சில சமயங்களில் தனக்கு அற்ப ஆயுளைக் கொடுத்த கடவுளை நினைந்துகொள்வான். ஆஹா ! ஒரு பெண்

பொருட்டு என்னுயிர் இழக்கவேண்டி நேரிட்டதே என்று கண்களில் நீர் பெருக விட்டுக்கொண்டே வருத்தத்துடன் சொல்வான். இப்படித்தான் இராவணனும், துரியோதனனும் அழிந்தார்களோ என்று நினைப்பான். கொலைசெய்த கைகளை முறுக்கிக்கொண்டே இது வரையில் ஸ்திரீயின் பொருட்டு எத்தனைபேர் உயிர் துறந்தனரோ, இனி எத்தனைப்பேர் உயிர் துறக்கப்போகின்றனரோவென்று ஆச்சரியத்துடன் கூறுவான். சற்றுநேரம் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருப்பான். பிறகு ஏதோ தீர்மானத்துக்கு வந்தவன்போல் சரி, இனி என்னதான் நடக்கிறதோ பார்ப்போம் என்று தைரியத்துடன் கூறுவான். இவ்வாறாக ரகுபதி ஒவ்வொரு நிமிஷத்தையும் அச்சிறையில் ஒரு யுகமாகக் கழித்து வந்தான்.

இஃது இவ்வாறாகவிருக்க தட்சணாமூர்த்தி மோகனும் பாலைக் கொண்டுபோனவர்களைக் கண்டுபிடிக்க முயற்சிகள் செய்ய வாரம்பித்தார். ஒருநாள் அவர் ஒரு தொண்டு கிழவனைப்போல் நரைத்த மயிராலாக்கப்பட்ட ஒருபொய்த் தாடி, மீசையும், தலையில் நறைத்த மயிரையும் தரித்துக் கொண்டு பண்டாரத்தைப்போல் ஒரு நீண்ட அங்கியை உடுத்திக் கொண்டார். சிவபக்தனைப்போல் நெற்றியில் விபூதியும், சந்தனமும் தரித்துக்கொண்டு இடது கையில் திருவோடும், வலது கையில் தடியும் பிடித்து தினந்தோறும் ஒவ்வொரு வீதிக்கும்சென்று, ஒவ்வொரு வீட்டினுள்ளும் நுழைந்து பிச்சையெடுக்க வாரமபித்தார். வீட்டினுள் நுழைந்த பிறகு வீட்டிலுள்ளவர்களை கவனித்துக் கொண்டே "சாம்பசிவம் சாம்பசிவம்" என்று நிதானத்துடனும், மெல்லிய குரலுடனும், சொல்லிக்கொண்டிருப்பார்.

ஒருநாள் இவர் வழக்கம்போல் திமமப்பரெட்டித் தெரு 15-வது எண்ணுள்ள கிருஹத்தில் நுழைந்தார். அக்கட்டடம் சிறிதாயும், புதிதாயும், பார்ப்பதற்கு அழகாயுமிருந்தது. அது மெத்தைவீடானதால் நடைக் கதவிற்கு அடுத்தாற்போல் படிக்கட்டுகளிருந்தன. கூடத்திலுள்ள சுவர்களுக்கு 2½-அடி உயரம் வரையில் கோபி அடித்திருந்தது. அதற்குமேல் ½-அடி உயரத்தில் வர்ண வேலை செய்திருந்தது. கூடத்தைச் சுற்றிலும் ஆங்கிலேய உருவங்களமைந்த அநேக படங்களும், நான்கு பெரிய குளோப்புகளும் மாட்டப்பட்டிருந்தன. கூடத்தின் மத்தியில் ஒரு மேஜையும், அம்மேஜையின் நான்கு பக்கங்களிலும் நான்கு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. அதில் கிழக்குமுகமாயுள்ள ஒரு நாற்காலியில் ரூபலாவண்யமுள்ள ஒரு கன்னிகை உட்கார்ந்திருந்தாள். அவள் இடதுகையை நாற்காலியின்மேல் ஊன்றிக்கொண்டு வலதுகையின்மேல் தலையை சாய்த்தவண்ணம் ஒரு ஆழ்ந்தயோசனை செய்துகொண்டிருந்தாள். அவளைப் பாத்தால் யாருமில்லாத ஒரு பயங்கரமான காட்டில் தனிமையாக அகப்பட்டுக் கொண்டு போக வழிதெரியாமல் தத்தளிப்பவளைப்போலிருந்தது. அவளுடைய கூந்தல் எண்ணெய் தடவாமல்கோதி முடிந்திருந்தது. அவள் விரலில் அணிந்துக்கொண்டிருந்த மோதிரத்திலுள்ள கற்கள் யாவரையும் அவள் கிட்ட வரவொட்டாமல் தடுத்து, அவளைக் காத்துக்கொண்டிருப்பது போல் அதிகப் பிரகாசத்துடன் ஜொலித்துக்கொண்டிருந்தது.

மேஜையின்மேல் இந்துநேசன் என்னும் ஓர் தமிழ்ப் பத்திரிகை யிருந்தது. அதன் பக்கத்திலுள்ள ஒரு தட்டில் நல்ல சுவையுள்ள பலகாரங்களும் பழங்களுமிருந்தன.

அதனோடு ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் சூடான காபியு மிருந்தது. நாற்காலியில் உட்கார்ந்திருந்த கன்னிகை யானவள் அவைகளை ஒன்றும் கவனியாமல் தன்னுடைய எண்ணத்திலேயே ஆழ்ந்திருந்தாள். அவளுக்கு, எதிர் முகமாயுள்ள ஒரு தூணின்மேல் சாய்ந்துக் கொண்டிருந்த ஒரு வாலிபன் மேஜையின்மேலிருந்த பலகாரங்களை புசிக்கும்படி அவளை வேண்டிக் கொண்டிருந்தான். அவன் எவ்வளவு கெஞ்சியும் அவள் அவனை ஏறெடுத்துப் பார்க்க வில்லை. "மோகனா காபி ஆறிப்போகிறது, நீ ஏன் இங்கு வந்தநாள் முதற்கொண்டு சரியாக புசிக்காமல் தேகத் தைக் கெடுத்துக் கொள்ளுகிறாய். நீ என்ன ஆபரணம் கேட்டபோதிலும், என்ன உடை கேட்டபோதிலும் நான் வாங்கிக் கொடுக்கத் தயாராயிருக்க, ஏன் என்னை இகழ் கிறாய். என்னிடம் வந்தபிறகு இங்கிருந்து தப்பித்துக் கொண்டு போகமுடியாது. அவ்வாறிருக்க நீ ஏன் யௌ வன பருவத்தை வீணிலேகழித்து, வருத்தத்தினால்மூப்பை அதிசீக்கிரத்தில் அடைகிறாய்" என்று அவ்வாலிபன்சொன் னான். தணிந்திருக்கும் நெருப்பை விசிறியினால் விசிற எவ்வளவு ஒளியை அடையுமோ, அதைப்போல் அவன் சொன்ன சொற்களெல்லாம் வருத்தத்தில் வருந்தியிருந்த அவள் மனதை புண்படுத்தியது. அவள் ஒன்றும் சொல்லா மல் தலைகுனிந்துக்கொண்டே மௌனமாயிருந்தாள்.

அங்கு நடந்த விஷயங்களை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தக்ஷணாமூர்த்தி தன் கையிலிருந்த தடி தடுக்கி விட்டதுபோல் மெத்தைப் படிக்கட்டுக்கு அருகா மையில் தடியைப் போட்டுக்கொண்டு கீழேவிழுந்தார். அவர் இடதுகையில் வைத்திருந்த திருவோடும் உடைந்து, பிச்சை எடுத்த அரிசியும் கொட்டிப்போய் விட்டது.

உடனே அங்கிருந்த வாலிபன் ஓடிவந்து அவரைத் தூக்கி உட்காரவைத்தான். அதற்குள்ளாக ஏறக்குறைய அதே வயதுள்ள மற்றொரு வாலிபன் மெத்தையின்மேலிருந்து ஓடி வந்தான். விழுந்தக் கிழவரது கை கால்கள் உதறிக் கொண்டிருந்தது. அக்கிழவர் மெத்தைப் படியின்மேல் சாய்ந்தபடியாக உட்கார்ந்துகொண்டு முழங்கால்களைத் தனதிருகரங்களால் தடவிக்கொண்டே "சாம்பசிவம், சாம்பசிவம்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

முதல் வாலிபன் :—நல்ல அடிப்பட்டாப்போல் இருக்கிறது.

கிழவர் :—முருகா..........பழனியாண்டி.

இரண்டாவது வாலிபன் :—கிழவா! எங்கே அடிபட்டது.

கிழவர் :—முழங்காலில்.

மு-வாலிபன் :—பெரியவரே அதன்மேல் சிறிது நல்லெண்ணெ தடவுகிறீர்களா.

கிழவர் :—கொஞ்சம் கொண்டுவாருங்கள்.

கிழவர் அவ்வாலிபன் கொண்டுவந்த எண்ணெயை காலில் தடவிக்கொண்டே "அப்பா! நீங்கள் சிரஞ்சீவியாய் இருக்கக்கடவீர்கள். உங்களைப் பார்த்தால் யாரோ நல்ல குழந்தைகளைப்போல் தோன்றுகிறது. நீங்கள் எனக்கு செய்த உபகாரத்தை நான் என்றும் மறக்கமாட்டேன். கடவுள் உங்களை ரக்ஷிப்பாராக" என்று சொன்னார்.

இ-வாலிபன் :—நாங்களிருவரும் நண்பர்கள்.

கிழவர் :—அப்பா......சாப்பிட கொஞ்சம் ஜலம் கொடுக்கிறீர்களா?

மு-வாலிபன் :—ஐயா! சாதம் சாப்பிடுகிறீர்களா?

கிழவர் :—போட்டால் ரொம்ப புண்ணியமாயிருக்கும்.

உடனே அவ்வாலிபன் அக்கிழவருக்கு அன்ன மளிக்கும்படி தன் வேலைக்காரிக்கு கட்டளையிட்டான். அவள் ஒரு இலையில் பழையதுபோட்டு, சிறிது மாங்காய் ஊர்காயும் வைத்தாள். கிழவர் அதை மெதுவாக புசித்துவிட்டு பிறகு அவர்களிருவரையும் தனதருகிலழைத்து ஒரு சிறு பையிலிருந்து விபூதி யெடுத்து, அவர்கள் நெற்றியிலிட்டுக்கொண்டே "அப்பா! உங்கள் பெயரென்ன" என்று கேட்டார்.

மு-வாலிபன் :—என் பெயர் துரைசிங்கம், எனது நண்பன் பெயர் ஜெயராம்.

கிழவர் :—"அப்பா! என் ஆத்மா, திருப்தி அடைந்தாற் போல் நீங்கள் என்றும் சந்தோஷத்துடன் வாழ்வீர்களாக" என்று சொல்லிவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தார்.

தட்சணாமூர்த்தி சென்னை சண்முகானந்த விலாஸிலிருந்தபொழுது தாமோதர முதலியாரின் தங்கைமோகனாம்பாளை பார்த்திருக்கிறாராதலினால், அவளை விரைவில் அறிந்துகொண்டார். தான் அவ்வீட்டில் பிச்சையெடுக்கச்சென்றபொழுது அவளைப் பலாத்காரமாகக் கொண்டுபோனவர்கள் அவளிஷ்டப்படி நடக்க விட்டிருப்பதினால் அவர்களால் இம்ஸிக்கப்பட வில்லை யென்று தெரிந்துகொண்டார்.

பிறகு அவர் தன் மாறுவேடத்தைக் களைந்துவிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, அங்கிருந்த இன்ஸ்பெக்டரையும், இரண்டு கான்ஸ்டேபில்களையும், தான் ஒரு கேஸ் விஷயமாக இருவரைப் பிடிக்கப் போகிறதாகச் சொல்லி, அவர்களையும் அழைத்துக்கொண்டுவந்து மீண்

டும் அவ்வீட்டை அடைந்தனர். துப்பரியும்தட்சணாமூர்த்தி அவ்வீட்டிலுள்ள இரு வாலிபரையும் கைது (Arrest) செய்யும்படி இன்ஸ்பெக்டரிடம் சொன்னார்.

அவ்வாறே அவர் அவ்வீட்டினுள் நுழைந்து, துரைசிங்கம் என்று பெயரிட்டழைத்தார். அக்குரலைக்கேட்டதும் பின்கட்டிலிருந்து ஒரு வாலிபன் விரைவாக ஓடிவந்தான்.

இன்ஸ்பெக்டர் :—எங்கே உனது நண்பன் ?

துரைசிங்கம் :—ஐயா ! தாங்கள் யார் ?

இன்ஸ்பெக்டர் :—நான் உங்களிருவரையும் ஒரு விஷயமாக கண்டு பேசவேண்டும்.

துரைசிங்கம் :—தாங்கள் இவ்வூரா, அல்லது வெளியூரா.

இன்ஸ்பெக்டர் :—நான் அடுத்த வீதியில் குடியிருப்பவன்.

துரைசிங்கம் :—ஆனால், இங்கேயே இருங்கள் எனது நண்பனை அழைத்துவருகிறேன்.

(என்று சொலலிவிட்டு துரைசிங்கம் மெத்தைமேலிருந்த தனது நண்பன் ஜெயராமை அழைத்துக்கொண்டு கீழேவந்தான்.)

இன்ஸ்பெக்டர் :—“நான் உங்களிருவரிடத்திலும் ஒருவிஷயத்தைப்பற்றி பேசவேண்டும். சற்று வெளியே திண்ணைக்கு வாருங்கள், அங்கு சாவகாசமாக உட்கார்ந்து பேசலாம்” என்று சொல்லி அழைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

அவர்கள் வெளியே வந்ததும் உடுப்பில்லாத இரண்டு சேவகர்களையும், பெரிய மனிதனைப்போல் உடைகளைத்

தரித்துக்கொண்டிருந்த ஒரு புருஷனும் அங்கு காத்துக் கொண்டிருப்பதைக்கண்டார்கள்.

அவர்களைக்கண்டதும் துரைசிங்கத்தின் முகம் வேறுபட்டது. இன்னதுதான் செய்வதென்று ஒன்றுந்தோன்றாமல் பிரமித்து நின்று விட்டான். ஆனால் ஜெயராமோ சற்றேனும் கலக்கமில்லாமல் தன்னை உள்ளேயிருந்து அழைத்துக்கொண்டுவந்த புருஷனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அதற்குள் கான்ஸ்டேபில்களும் அவ்விரு வாலிபர்களின் அருகாமையில் வந்து நின்றார்கள்.

இன்ஸ்பெக்டர் :—ஏன் இன்னும் மயங்குகிறீர்கள் நடவுங்கள்.

ஜெயராம் :—எங்கே ?

கான்ஸ்டேபில் :—போலீஸ் ஸ்டேஷனுக்கு.

துரைசிங்கம் :—எதற்காக ?

இன்ஸ்பெக்டர் :—நீங்கள் செய்த காரியத்துக்காக, மறந்துவிட்டீர்கள்போலும் ?

ஜெயராம் :—நாங்கள் என்ன காரியஞ் செய்தோம்.

இன்ஸ்பெக்டர் :—அதையெல்லாம் உங்களுக்குச்சொல்லிக் கொண்டிருக்க வரயில்லை. சொல்லவேண்டிய இடத்தில் நீங்களே சொல்லிவிடுவீர்கள். நடவுங்கள் சீக்கிரம்.

உடனே ஒவ்வொருவனையும் ஒவ்வொரு கான்ஸ்டேபில் பிடித்துக்கொண்டுவந்து போலீஸில் லாக்கப் (Lock up) செய்யப்பட்டார்கள்.

பிறகு தட்சணாமூர்த்தி கொலைசெய்த ரகுபதியையும், ஒரு கன்னிகையைப் பலாத்காரமாக வெளிதேசத்திற்கு கொண்டுவந்த இரு வாலிபர்களையும் சென்னையில் கேஸ் நடக்கும்போது அவர்களைக் கொண்டுவரும்படி இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி அய்யங்காரிடம் ஏற்பாடுகள் செய்துவிட்டு மோகனும்பாளை அழைத்துக் கொண்டு அன்றுமாலை வண்டியேறி மறுநாட்காலை சென்னை வந்து சேர்ந்தார். தன் சகோதரி உயிர் துறந்திருப்பாள் என்று நினைத்திருந்த தாமோதர முதலியார் மீண்டு கண்டதும் அளவிறந்த ஆனந்தமடைந்தார். சென்னை புரசைவாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார் மோகனும்பாளை பூனாவிலுள்ள இராஜரத்தின முதலியார் கொண்டு போயிருப்பாரென்று அவர்மேல் சந்தேகித்து அவரைச் சென்னைக்குக் கொண்டுவந்து ஜாமீனில் விட்டிருந்தார்.

இந்த சம்பவங்கள் நடந்தபிறகு தட்சணாமூர்த்தி ஒரு நாள் சனிக்கிழமை சாயங்காலம் 4½-மணிக்கு பீபில்ஸ் பார்க்கு பாண்டுஸ்டாண்டுக்குப் போய் (Band Stand) தான் ஒரு பென்சியின்மேல் காற்றுக்காக உட்கார்ந்திருந்தார். அவர் உட்கார்ந்த 5 நிமிஷத்திற்கெல்லாம் ஒரு வியாதியஸ்தன் அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். பாண்டு அடிப்பவர்கள் அநேக ஆங்கிலேய பாடல்களை வாத்தியங்களில் வாசிக்க வாரம்பித்தனர். ஆங்கிலேயச் சீமான்களின் குழந்தைகள் தாளத்திற்குத் தகுந்தாற் போல் குதித்து குதித்து ஒடி விளையாடிக்கொண்டிருந்தனர். அதில் சில ஆங்கிலேயச் சிறுமிகளும், சிறுவர்களும் துவிச்சக்கரவண்டிகளிலேறி பாண்டுஸ்டாண்டைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தனர். இன்னும் சில இந்திய புருஷர்கள் ஆங்காங்குள்ள பென்சுகளில் உட்கார்ந்துக்

கொண்டு தங்கள் தங்கள் குடும்ப விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். தட்சணாமூர்த்தியின் பக்கத்தில்வந்து உட்கார்ந்தவன் பெயர் உமாபதி கிராமணி. அவனுக்கு சுமார் 20 வயதிருக்கும்.

தட்சணாமூர்த்தி தன்னருகில் உட்கார்ந்த வியாதியஸ்தனைநோக்கி—"ஏன் உங்களுக்கு இப்படித்தேகம் மெலிந்து முகம் வெளுத்திருக்கிறது."

உமாபதி :—நான் அநேக நாட்களாக வியாதியா யிருந்தேன்.

தட்சணாமூர்த்தி :—ஏன் ! நல்ல மருந்து சாப்பிடுகிறது தானே.

உமாபதி :—மருந்து சாப்பிட்டதில் ஒன்றும் பிரயோஜனமில்லை.

தட்சணாமூர்த்தி :—மருந்தில் குணமடையாத நோயு முண்டோ ?

உமாபதி :—எனக்கு பயத்தால் ஜுரம் வந்தது.

தட்சணாமூர்த்தி :—என்ன ! வேடிக்கையாயிருக்கிறது, வாலிபனாயிருந்து பயந்து ஜுரம் வந்தது என்கிறாயே.

உமாபதி :—உங்களுக்கென்ன சொல்லாமல் நீங்கள் அதைப் பார்த்திருந்தாலல்லவோ தெரியும். நான் வாலிபனாயிருந்ததால்தான் வீட்டுக்காவது போய்ச்சேர்ந்தேன்.

தட்ணாமூர்த்தி :—அப்பேர்ப்பட்ட பயத்தை உனக்கு உண்டாக்கினது எதப்பா ?

உமாபதி :—அதை ஏன் கேட்கிறீர்கள். அதை நினைக்கும் பொழுதே தேகம் சிலுக்கிறது.

தட்சணுமூர்த்தி :—உனக்கு பயத்தை விளைவித்தவஸ்துவை நான் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால் நானுவது இனிமேலதைக் கண்டால் பயப்படாம லிருப்பேன்.

உமாபதி :—நான் அக்டோபர் மாதம் 5-தேதியன்று இரவு நாடகம் பார்ப்பதற்காக சால்ட்கோட்டார் தியேடருக்குப்போயிருந்தேன். 11-மணிக்குமேல் எனக்கு வயிறு வலித்தது. ஆகையால் நாடகசாலையை விட்டு சிந்தாதரிப்பேட்டையிலுள்ள என் வீட்டுக்குப் போவதற்காக பீபில்ஸ் பார்க்குக்குள் நுழைந்தேன். அப்பொழுதுவயிறு அதிகமாய் வலித்ததால் பக்கிங்ஹாம் கால்வாயின் அருகிலுள்ள ஒரு பெரியமரத்தடியில் மலபாதைக்கு உட்கார்ந்தேன். நான் உட்கார்ந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் 20-அல்லது 22-வயதுள்ள ஒரு மனிதன் நான் இருந்த விடத்திற்கு 15-கெஜ தூரத்திலுள்ள ஒரு மரத்தடியில் பள்ளம் தோண்டிக்கொண்டிருந்தார். அன்றிரவு சந்திரனின் ஒளி அதிகமாயிருந்ததால் நான் அம்மனிதனையும் அவர் செய்த காரியங்களையும் பார்ப்பதற்கு ஏதுவாயிருந்தது. ஆனல் அம்மனிதன் என்னைப் பார்க்கவில்லை. ஏனென்றால் எனக்கு முன்பாக இருந்த மரம் அதிகமாய் தடித்திருந்தது. அவர் என்ன செய்கிறாரென்று அடிக்கடி எட்டிப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். பள்ளம்தோண்டின பிறகு தன் துணியில் மறைத்து வைத்திருந்த ஒரு மனிதனுடையதலையை எடுத்து சற்றுக்கவனித்தார். அத்தலையைச்சுற்றி வைத்திருந்த துணியில் ரத்தம்பரவி யிருந்தது. நான் அத்தலையைக் கண்டதும் பயந்துவிட்டேன். உடனே எழுந்து ஓட

லாமென்று முயன்றேன். ஆனால் என்னால் ஓடமுடிய வில்லை. ஏனெனில் என் கைகால்களெல்லாம் உதறிக் கொண்டிருந்தன. இன்னது செய்வதென்று எனக்கு ஒன்றுந் தோன்றாமல் மதிமயங்கி அங்கேயே நின்று விட்டேன். அப்பொழுது நான் போட்டுக்கொண் டிருந்த ஷர்ட்டு வியர்வையால் நனைந்து விட்டது. பிறகு சற்றுநேரம் பொறுத்து அம்மனிதன் இருக் கிறானா போய்விட்டானா வென்று கவனித்தேன். அப் பொழுது அம்மனிதன் அத்தலையை தான் தோண்டின பள்ளத்தில் புதைத்துவிட்டு அதிகவருத்தத்துடனும், சலிப்புடனும் போய்க்கொண்டிருந்தான். நான் அவனை ஒரு மந்திரக்காரனெனமதித்து பயந்து அவன் தலை மறையு மட்டும் அங்கேயே நின்றுக்கொண் டிருந்தேன். பிறகு அதிவிரைவாக நடந்து என் வீட்டை வந்தடைந்தேன். நான் வந்து படுக்கையில் படுத்துக்கொண்டதும் ஜுரம் வந்து விட்டது. அன் றைய மறுதினம் காலையில் யாரோ ஒருவர் புரசை வாக்கத்தில் கொலைசெய்யப்பட்டதாகவும், ஆனால் தலையில்லாமல் உடல் மாத்திரம் காணப்பட்ட தாக வும் கேள்விப்பட்டேன். அப்பொழுது நான் இராத் திரி பார்த்த சம்பவம் என் நினைவுக்குவந்தது. ஆனால் நான் அதை ஒருவரிடமும் இதுவரையில் கூறவில்லை. ஏனென்றால் கொலைசெய்த குற்றவாளி அகப்படாமற் போனால் போலீஸார் நம்மீது சந்தேகங்கொண்டு தண் டித்து விடுவார்களென்று பயந்திருந்த நான் அதே பயத்தால் மூன்று மாதகாலம் படுத்த படுக்கையாய்க் கிடந்தேன். நான் அதைப்பற்றித் தங்களிடத்தில் சொன்னதிதுவே முதல் முறை.

தக்ஷணமூர்த்தி :—நான் தெரியாமல் அதைக்கேட்டு விட்டேன். நீ சொல்வதை கேட்கும் பொழுதே எனக்கு இவ்வளவு பயமாயிருக்கிறதே. நானே அதை நேரில் பார்த்திருந்தால் வீட்டிற்குப்போய் சேர்ந்திருக்க மாட்டேன் போலிருக்கிறது. இதுவேண்டவே வேண்டாம். இதை விட்டு வேறே சமாச்சாரம் பேசலாம். தம்பி உனக்கென்ன வேலை ?

உமாபதி :—எனக்கு வேலை ஒன்றும் கிடையாது. என்தகப்பனார் வைத்துவிட்டுப்போன ஆஸ்தியை வைத்துக் கொண்டு நானும் என்தாயாரும் நாட்களை கழித்து வருகிறோம்.

தட்சணமூர்த்தி :—உனக்கு விவாகமாய்விட்டதா ?

உமாபதி :—இல்லை.

தட்சணமூர்த்தி :—உன் பெயரென்ன ?

உமாபதி :—என்பேர் உமாபதி கிராமணி.

தக்ஷணமூர்த்தி :—நீ எங்கிருப்பது ?

உமாபதி :—சிந்தாதரிப்பேட்டை சிங்கனன் செட்டித்தெரு 9-வது நெம்பர் வீட்டில்.

தட்சணமூர்த்தி :—தம்பி இப்பொழுது பனிகாலம், உனக்கு உடம்பு அசௌக்கியமென்று சொல்லுகிறாய், சீக்கிரம் போய் வீடுசேர்.

தட்சணமூர்த்தி சொன்னபடியே உமாபதி கிராமணி தன் வீடுபோய்ச் சேர்ந்தான். பிறகு தட்சணமூர்த்தி சண்முகானந்த விலாஸத்திற்குச்சென்று தனக்கென்று விடப்பட்டிருந்த அறையிலுட்கார்ந்து கொண்டு அம்பலவாண செட்டி தன்னைக் கேட்டுக்கொண்டபடி தீனதயாளு

நாயுடுவைக்கண்டு பிடிக்கவேண்டிய முயற்சியைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தார். கடைசியாக ஏதோ ஓர் தீர்மானத்திற்கு வந்தவர்போல் எழுந்து போஜனம் செய்துவிட்டு நித்திரை செய்தார்.

தட்சணாமூர்த்தி மறுநாட் காலை தீனதயாளு நாயுடுவைக் கண்டுபிடிக்க பிரயத்தனப்பட்டதில், அவர் எழும்பூரிலுள்ள தன்மைத்துனன் பக்தவத்சலு நாயுடு வீட்டில் வந்திருப்பதாகத் தெரிந்துகொண்டு அவர் வீட்டிற்குப்போய்அவரை நேரில் கண்டு பேசினதில் அக்டோபர் மாதம் 5-தேதியன்று சாயங்காலம் 4-மணிக்கு வெளியே உலாவப்போன தீனதயாளு நாயுடு திரும்பிவரவில்லை என்று தெரிந்துகொண்டார். தட்சணாமூர்த்தி பக்தவத்சலு நாயுடு விடம் சம்பாஷித்துக்கொண்டே தீனதயாளு நாயுடுவின் உருவமைந்த ஓர் பொட்டகிராப்பை கவனித்த வண்ணமாயிருந்தார். பிறகு நாயுடு விடம் விடைபெற்றுக் கொண்டு தக்ஷணாமூர்த்தி புரசைவாக்கம் போலீஸ்ஸ்டேஷனுக்குச்சென்று இரண்டு கான்ஸ்டேபில்களோடு உமாபதி வீட்டையடைந்து உமாபதியை அழைத்துக்கொண்டு பீபில்ஸ்பார்க்குக்குவந்து அவனது சகாயத்தால் தலை புதைக்கப்பட்டிருந்த விடத்தைத்தெரிந்துகொண்டு அதை பூமியினின்றும் வெளியே எடுத்தார்.

அத்தலை புதைக்கப்பட்டு அநேகநாட்களானபடியால் தலையில மண்படிந்தும் முகம்வெளுத்து மிருந்தது. முகத்தைப்பார்ப்பதற்கு பயங்கரமாகவுமிருந்தது. அத்தலையினின்றும் துர்நாற்றம் வீசிற்று. தட்சணாமூர்த்தி 15-நிமிஷம் வரையில் அத்தலையை உற்றுநோக்கிப்பார்த்து, பிறகு அதை மயானத்தில் புதைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு அம்பலவாணசெட்டிக்கு தினதயாளு நாயுடு அக்டோபர் மாதம் 5-தேதியன்று இரவு 10-மணிக்குமேல் சென்னையில் கொலை செய்யப்பட்டதாக கடிதம் எழுதிவிட்டார்.

# அத்தியாயம் 9.

## கோர்ட்டு விசாரணை.

ஜட்ஜ் :—கியூமன்.

வக்கீல் :—ராமநாத அய்யர்.

கவர்ண்மென்ட் வக்கீல் :—சேஷகிரிராவ்.

(இறந்து விட்டதாக கருதப்பட்டிருந்த சதாசிவ முதலியாரும் நான்கு திருடர்களும் ஜான்மாதம் 15-தேதி திங்கட்கிழமை யன்று சென்னை ஐகோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்டார்கள்.)

### முதல்நாள் விசாரணை.

வ-சேஷகிரி ராவ் :—இதுவரையில் யாவராலும் கொலைசெய்யப்பட்டார் என்று கருதப்பட்டிருந்த சதாசிவ முதலியாரை மீண்டும் உயிருடன் காண்பதுமிகவும் ஆச்சரியமாக விருக்கிறது. அவரை உயிருடன் கண்டுபிடித்தவர் அதிக சாமர்த்திய சாலியாகவே இருக்கவேண்டுமென்று நான் மதிக்கிறேன்.

வ-ராம :—மிஸ்டர் சேஷகிரிராவவர்களே ! சதாசிவ முதலியாரை உயிருடன் கண்டுபிடித்த துப்பறியும் திருவனந்தபுரம் தக்ஷிணாமூர்த்தியின் திறத்தைப்பற்றி பேச உங்களை கோர்ட்டார் இங்கு அமர்த்தவில்லை. நீங்கள் சொல்லாமலே கவர்ண்மென்டார் அவருக்குக்கொடுத்திருக்கும் தங்கப்பதக்கங்களினாலும், நற்சாட்சிப் பத்திரங்களாலும் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் அவர் திறமையை அறிவார்கள்.

வ-சேஷகிரிராவ் :—ராமநாதய்யரே! தாங்கள் என்மீது கோபிக்கவேண்டாம். நான் இவ்வுத்தியோகத்திலமர்ந்து இதுவரையில் இத்தகைய நூதனமான கேஸைப்பற்றி கேள்விப்பட்டதில்லை, ஆதலால் இது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

வ-ராம :—மிஸ்டர் ராவ் அவர்களே! நான் அதைப்பற்றி ஒன்றும கோபித்துக்கொள்ளவில்லை. கோர்ட்டில அனுவசியமாகப்பேசி காலங்கழிப்பது உசிதமல்ல. வேண்டுமானால் சாக்ஷிகளை எந்நேரமானாலும் எத்தகைய கேள்வியாகிலும் கேட்கலாம்.

வ-சேஷகிரிராவ் :—சதாசிவ முதலியாரே! தாங்கள் அக்டோபர்மாதம் 5-தேதி மாலையிலிருந்து இதுவரையில் எங்கு இருந்தீர்கள்?

சதாசிவ முதலியார் :— (சுட்டிக்காட்டிக்கொண்டே) இத்திருடர்கள் வீட்டிலுள்ள ஒரு அறையில அடைக்கப்பட்டிருந்தேன்.

வ-சேஷகிரிராவ் .—உங்களையார் அங்கு கொண்டுபோனது?

சதாசிவ முதலியார் :—வழக்கம்போல நான் அக்டோபர் மாதம 5-தேதியன்று மாலை உலாவுவதற்கு கடற்கரைக்குச் சென்றிருந்தேன். திரும்பிவரும்பொழுது மணி 9-க்குமேல் ஆய்விட்டது.

வ-சேஷகிரிராவ் :—தாங்கள் வழக்கமாக 9-மணிக்குத்தான் வீட்டுக்கு வருவதா?

சதாசிவ முதலியார் :—இல்லை, 7-அல்லது 7½-க்குள் திரும்பி விடுவேன்.

வ-சேஷகிரிராவ் :—என் அன்றுமாத்திரம் அவ்வளவு தாமதமாய்விட்டது?

சதாசிவ முதலியார் :—அன்று இராயபுரத்திலிருக்குமெனது நண்பர் கெங்காதர முதலியாரைக்காணச் சென்றிருந்தேன்.

வ-சேஷகிரிராவ் :—அவரைக்கண்டீர்களா ?

சதாசிவ முதலியார் :—இல்லை, அவர் வீட்டுக்குப்போன பிறகு அவர் சென்னையில் இல்லை என்றுதெரியவந்தது.

வ-சேஷகிரிராவ் :—பிறகு என்ன நடந்தது.

சதாசிவ முதலியார் :—சுமார் 9-மணிக்குமேல் வீட்டுக்குத் திரும்பி சிந்தாதரிப்பேட்டை வாராவதியண்டை வரும்பொழுது (சுட்டிக்காட்டி) இந்நால்வரைச்சந்தித்தேன். நான் இந்நால்வரை நெருங்க நெருங்க எனக்கு ஒருவிதமயக்கம் அதிகரித்தது. பிறகு என்ன நடந்ததென்றும் எனக்கு ஒன்றுந் தெரியாது.

வ-சேஷகிரிராவ் :—அச்சமயத்தில் இவர்களைத் தவிர வேறு யாரும் அங்கு கிடையாதா ?

சதாசிவ முதலியார் :—அப்பொழுது ஊர் சந்தடி அடங்கி விட்டபடியால் இந்நால்வரைத் தவிற வேறு யாரும் அங்கு இல்லை.

வ-சேஷகிரிராவ் :—பிறகு திருடர்கள் வீட்டில் அடைபட்டிருந்தது உங்களுக்கு எப்பொழுது தெரியவந்தது ?

சதாசிவ முதலியார் :—மறுநாட் காலையில்தான் எனக்குத் தெரியும். அப்பொழுது என்னுடைய உடைகளுக்குப் பதிலாகவேறு சில அழுக்கடைந்த வஸ்திரங்களை அணிந்திருக்கக்கண்டேன்.

வ-சேஷகிரிராவ் :—உங்களை யார் அங்கு கண்டுபிடித்தது.

சதாசிவ முதலியார் :—சில தினங்களுக்குப்பிறகு தக்ஷணாமூர்த்தி யவர்களும், சில சேவகர்களும் என்னை இக் கொடிய பாதகர்களினின்றும் விடுவித்தனர்.

வ-சேஷகிரிராவ் :—(திருடர்களை நோக்கி) எதற்காக நீங்கள் சதாசிவ முதலியாரை உங்கள் வீட்டி லடைத்து வைத்திருந்தீர்கள்.

முதல் திருடன் :—நாங்கோ ஒரு நாள் இவரே (சுட்டிக் காட்டி) சிந்தாதரிப்பேட்டை வாராவதி யண்டை பார்த்தோம். இவரு ஊட்டே திருடனும் இண்ணு எங்களுக்கு ரொம்பநாளா எண்ணம். இவருடைய இரும்பு பொட்டி தரையோடே பொச்சி யிக்குது. அந்த பொட்டியெ சாவிப் போட்டு தொறந்துதான் திருடனும். அத்தொட்டு இவரெ எங்க ஊட்லே அடச்சி வைச்சிட்டு சாவியெ எடுத்துகினு இவரு ஊட்டே திருடபோனோம். அங்கே வாஸ்படியண்டே ஓர்த்தர் படுத்துகினு இருந்தாங்கோ, அதனாலே திருடாதே வந்துட்டோம். மைக்காநாளு காத்தாலே ஓர்த்தர் பைத்தியக்காரனப்போல வந்து எங்களெ எல்லாம் போலீஸாரண்டே புடிச்சிக்குடுத்துட்டாரு.

வ-ராம :—மிஸ்டர் ராவ் இன்னும் ஏதாவது அவர்களைக் கேட்கவேண்டி யிருக்கிறதா ?

வ-சேஷகிரிராவ் :—இல்லை.

வ-ராம :—இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியாரே! கொலை செய்யப்பட்டவர் சதாசிவ முதலியார்தான் என்று எப்படி தீர்மானித்தீர்கள் ?

இ-துரை :—வெளியே உலாவச்சென்ற சதாசிவ முதலியார் திரும்பி வரவில்லை என்று அவர் குமாரர் அன்று காலையில் டெலிபோனில் பேசியதாலும், வெத்திலை பாக்குகடை எதிராஜலு நாயுடு தன் கடைக் கெதிரில் தலையில்லாத ஓர் பிணம்விழுந்துகிடப்பதாகச்சொன்ன

தாலும், மேலும் கொலை செய்யப்பட்டவர் சதாசிவ முதலியாரைப் போலவே நீண்ட அல்பகா கோட்டும், ஆமதாபாத்வேஷ்டியும் உடுத்திக்கொண்டிருந்த தால் கொலை செய்யப்பட்டவர் சதாசிவ முதலியா ரென்று தீர்மானித்தேன்.

வ-ராம :—சரியான அத்தாட்சிகளில்லாமல் பிறர் சொல் வதைக் கேட்டும், உடுக்கும் உடைகளினின்றும் ஓர் தீர்மானத்திற்குவரும் உமமையொத்த உத்தியோகஸ் தர்களின் திறமை மெச்சத்தக்கதே. சரி...... எந்த குற்றத்திற்காக குப்புசாமி முதலியாரை லாக்கப் (Lock up) செய்தீர்கள் ?

இ-துரை :—கொலை செய்யப்பட்டவர் சதாசிவ முதலியா ரென்று தீர்மானித்ததாலும், அவருக்கு வேறு விரோ திக ளில்லாமையாலும், அவரிடம் கடன் வாங்கி திரும்பக்கொடுக்க திறமை இல்லாததால் குப்புசாமி முதலியார்தான் அவரைக் கொலை செய்திருப்பா ரென்று நினைத்து அவரை லாக்கப் செய்துவைத் தேன்.

வ-ராம :—இன்ஸ்பெக்டர் அவர்களே ! இந்த போலீஸ் உத்தியோகத்தில் உமக்கு எத்தனை வருஷம் அனு போகமுண்டு.

இ-துரை :—எனக்கு 20-வருஷம் சர்வீஸாயிருக்கிறது.

வ-ராம :—இருபது வருஷங்களாக எத்தனை நிரபராதிகளை குற்றவாளிகளாக்கினீரோ. உம்மால் அவர்களுக்கு என்னென்ன தண்டனை விதிக்கப்பட்டதோ.

ஜட்ஜ் :—ராமநாதய்யரே ! இன்னும் யாரையாவது கேள்வி கேட்கவேண்டி யிருக்கிறதா ?

வ-ராம :—இல்லை ! இல்லை ! !

ஜட்ஜ் :—(திருடர்களை நோக்கி) நீங்கள் திருட முயன்றது மல்லாமல் ஒரு பெரிய மனிதனை சிறைப்படுத்தி வைத் திருந்ததால் உங்கள் ஒவ்வொருவருக்கும் 5-வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்டது. (இ-துரைசாமி முதலி யாரை நோக்கி) இன்ஸ்பெக்டரே ! தாங்கள் ஒரு குற் றமு மறியாத ஓர் நிரபராதியின்மேல் குற்றஞ் சுமத்தி அனீதமாக சிறைப்படுத்தி அவமானத்தை உண்டாக் கியதால் ஆங்கிலேய அரசாக்ஷியின் சட்டத்தின்படி தங்களுக்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

## இரண்டாம்நாள் விசாரணை.

(ரகுபதியும், பெங்களூர் கண்டோன்மெண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி அய்யங்காரும், கான்ஸ்டே பில்களும், உமாபதி கிராமணியும் சென்னை ஐகோர்ட்டுக்கு கொண்டுவரப்பட்டார்கள்.)

வ-ராம :—(ரகுபதியை நோக்கி) நீ கொலைசெய்ததுண்டா ?

ரகுபதி :—எனக்கு ஒன்றுந்தெரியாது.

வ-ராம :—நீ சென்னையை விட்டு பெங்களூருக்கு எப் பொழுது சென்றாய் ?

ரகுபதி :—அக்டோபர் மாதம் 6-ந்தேதியன்று.

வ-ராம :—என்னவேலையாய் ?

ரகுபதி :—சும்மா போனேன்.

வ-ராம :—உனக்கு அங்கு பந்துக்களாவது, சிநேகிதர்களா வது இருக்கிறார்களா ?

ரகுபதி :—இல்லை.

வ-ராம :— நீ சென்னையிலிருந்தபோது இங்நிலைமையிலா யிருந்தாய் ?

ரகுபதி :—இல்லை, நான் பெங்களூருக்குப் போனபிறகு என்னிடத்திலிருந்த பணம் செலவழிந்துவிட்டதால் இந்த நிலைமையி லிருக்கிறேன்.

வ-ராம :—கொலை செய்யப்பட்டவர் உனக்கு பழக்க முண்டா ?

ரகுபதி :—யார்......எங்கு...எப்பொழுது......யாரால்...... கொலை செய்யப்பட்டார்.

வ-ராம :—இது நியாயஸ்தல மானபடியால் உண்மையை உரைக்க வேண்டும். பொய்சொன்னதாக பிறகு தெரிந்தால் கடினமான தண்டனை விதிக்கப்படும். ஆலகயால் உண்மையைச் சொல்லிவிடு.

ரகுபதி :—எனக்கு ஒன்றுமே தெரியாது. ஒன்றுந்தெரியாத விஷயத்தில் நான் என்ன சொல்லக்கூடும்.

ஜட்ஜ் :—மிஸ்டர் ராவவர்களே ! நீங்கள் வேரு யாரையாவது கேள்விகள் கேட்பதாயிருந்தால் கேட்கலாம்.

வ-சேஷகிரிராவ் :—(உமாபதியைநோக்கி) ரகுபதி கொலை செய்தபோது நீர் பார்த்திருந்தீரா ?

உமாபதி :—இல்லை.

வ-சேஷகிரிராவ் :—பிறகு என்ன சாக்ஷி சொல்லவந்தீர் ?

உமாபதி :—ஆனல் அவர் வெட்டப்பட்ட தலையை புதைக்கும்போது பார்த்திருந்தேன்.

வ-சேஷகிரிராவ் :—புரசைவாக்கத்தில் வெட்டப்பட்டவரின் தலைதான் என்று எப்படிச் சொல்லுவீர்?

உமாபதி :—நான் கண்டபோது தலையிலிருந்து ரத்தம்சொட்டிக்கொண்டிருந்ததாலும், அதை சுற்றிவைத்திருந்த துணியில் ரத்தம் தோய்ந்திருந்ததாலும், அது அப்பொழுது தான் வெட்டப்பட்ட தலையென்று தெரிந்து கொண்டேன். மேலும் மறுதினமே புரசைவாக்கத்தில் தலையில்லாத பிணம் கிடந்ததாக கேள்விப்பட்டதாலும், சென்னையில் அன்று வேறெங்கும் கொலை நடக்காததினாலும், நான் கண்ட தலை புரசைவாக்கத்தில் கொலை செய்யப்பட்டதென்று யூகித்துக்கொண்டேன்.

வ-சேஷகிரிராவ் :—தலை எங்கு புதைக்கப்பட்டிருக்கிறது?

உமாபதி :—பிபில்ஸ்பார்க்பக்கிங்காம்கெனல் (Buckingham Canal) வலது கரைபக்கமாய் புதைக்கப்பட்டிருந்தது.

வ-சேஷகிரிராவ் :—இப்பொழுது அங்கில்லையா?

உமாபதி :—இல்லை, சிலதினங்களுக்குமுன்புதக்ஷணாமூர்த்தி என்னையும் சில கான்ஸ்டேபில்களையும், அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அத்தலையை எடுத்துச் சற்றுநேரம் உற்று கவனித்து ஏதோசிலவற்றைத் தன் கைப்புத்தகத்தில் குறித்துக்கொண்டு அதை மயானத்தில் புதைத்துவிடும்படி ஏற்பாடு செய்தார்.

வ-சேஷகிரிராவ் :—அத்தலையை ரகுபதி அங்கு புதைத்த போது மணி என்ன விருக்கும்.

உமாபதி :—இரவு 11½-மணி இருக்கும்.

வ-சேஷகிரிராவ் :—இரவில் யாரோ ஒருவன் தலையைபுதைக் கும்போது பார்த்தாய். அவன் ரகுபதிதானென்று நீ எப்படி நிச்சயமாய் சொல்லக்கூடும்.

உமாபதி :—அன்றிரவு முழுநிலவா யிருந்தபடியால் இவரை யும் இவர் செய்த காரியங்களையும், நன்றாய் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால் இவர் என்னை பார்க்கவில்லை.

வ-சேஷகிரிராவ் :—சரியாக கவனித்து ஆளைப் பார்த்துச் சொல்.

உமாபதி :—நான் அவரைப் பார்க்கவேண்டியதே யில்லை. ஆனால் பெயரைக் கேழ்க்கும்போதே அவர் செய்த காரியம் கியாபகத்திற்கு வருகிறது. உடனே எனக்கு பயமும் உண்டாகிறது.

ஜட்ஜ் :— ராமநாதய்யரே ! இனி தாங்கள் யாரையாவது கேள்வி கேட்கவேண்டியதாயிருந்தால் கேட்கலாம்.

வ-ராம :—(உமாபதியை நோக்கி) ஐயா ! தாங்கள் ரகுபதி யைப் பார்த்தபொழுது அவர் முகம் எப்படி இருந் தது ?

உமாபதி :—அப்பொழுது அவர் முகத்தில் வருத்தமும், சலிப்பும் தோன்றிற்று.

வ-ராம :—அதற்குமுந்தி அவரை உங்களுக்குத்தெரியுமா?

உமாபதி :—அதற்குமுந்தி நான் பார்த்தது கிடையாது. அன்று பார்த்ததோடு அவரை இன்று பார்க்கிறேனே இவ்வளவுதான்.

வ-ராம :—ரகுபதியை நோக்கி — ரகுபதி! இனி பொய் சொல்வதில் பயனில்லை. இப்பொழுதாகிலும் உண்மையை உரைத்துவிடு. உண்மையை ஒளித்ததாக கோர்ட்டாருக்குத் தெரிந்தால் உனக்கு கொடூரமான தண்டனை விதிப்பார்கள்.

ரகுபதி :—ஆ.........ம்.

வ-ராம :—ஆம் என்றால் என்ன?

ரகுபதி :—அவர் சொல்லிவந்ததெல்லாம் உண்மையே.

வ-ராம :—யாரைக் கொலைசெய்தாய்?

ரகுபதி :—ஒரு நாயுடுவை.

வ-ராம :—அவர் உனக்கு விரோதமா?

ரகுபதி :—அவர் யாரென்றும் எனக்குத் தெரியவே தெரியாது.

வ-ராம :—பிறகு ஏன் அவரைக் கொலை செய்தாய்?

ரகுபதி :—அவசரத்தில்.

வ-ராம :—என்ன அவசரம்?

ரகுபதி :—அவர் என் மாமனைப்போல் உடைகளை உடுத்தியிருந்ததால் அவர்தான் என் மாமனென்று எண்ணி அவருக்குத் தெரியாமல் பின்புரம்வந்து அவசரத்தில் அவரைக் கொன்றுவிட்டேன்.

வ-ராம :—ஆம், தலையை ஏன் வேறு இடத்தில் புதைத்து வைத்தாய்?

ரகுபதி :—என் மாமனுக்கு வேறு விரோதிகளில்லையாதலால் நான் அவரைக் கொன்றுவிட்டதாக எண்ணி, என் மெல் சந்தேகிக்கப் போகிறார்களென்று அவ்வாறு செய்தேன்.

வ-ராம :—உன் மாமனது தலை அல்லவென்று உனக்கு எப்பொழுது தெரியவந்தது ?

ரகுபதி :—தலையைப் புதைப்பதற்கு முன்பு சற்று கவனித்த பொழுது அது ஒரு நாயுடுவின் தலையென தெரிந்தது.

வ-ராம :—நாயுடு என்று எப்படித் தெரியும்.

ரகுபதி :—என்மாமன் மீசையை முறுக்கிவிடும் வழக்கங் கிடையாது. ஆனால் நான் புதைத்த தலையிலுள்ள மீசைமுறுக்கி விடப்பட்டும் முகத்தில் நாமமிடும் வடு நன்றாகத் தெரிந்தது.

வ-ராம :—நீ உன் மாமனைக்கொல்லவில்லை என்று தெரிந்த யாரும் உன்மேல் சந்தேகங் கொள்ளமாட்டார்க ளென்று உனக்குத்தெரியுமே, அப்படி யிருக்க நீ ஏன் சென்னையைவிட்டு பெங்களூருக்குப்போக வேண டும் ?

ரகுபதி :—கொலைசெய்து விட்டபிறகு என்முகம் ஒருவித வேறுபாடடைந்ததால் ஜனங்கள் என்மேல் சந்தேகங் கொள்வார்களென்று அவ்வாறு செய்தேன்.

வ-ராம :—ஆமாம்.........நீ ஏன் உனது மாமனை கொலை செய்யக்கருதினாய்.

ரகுபதி :—என்மாமனுக்குமோகனாம்பாளென்றொரு புத்திரி யுண்டு. நான் அவளை எனது பால்ய முதல் காதலித்து வந்ததால் எனக்கே கலியாணம் செய்து கொடுக் கும்படி அநேக தடவைகளில் நேரில் கேட்டும் அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அதுவுமன்றி நான் அநேக கடிதங்கள் எழுதியும் அதற்கும் உடன்பட

வில்லை. அதனால் அவர்மேல் எனக்குகோபமுண்டாய் கொலை செய்யக்கருதினேன்.

வ-ராம :—இ-பார்த்தசாரதி அய்யங்காரை நோக்கி — இவரை நீங்கள் எங்குபிடித்தீர்கள் ?

இ-பார் :—சென்னையில் கொலைசெய்த ஒருவன் பெங்களூரில் ஒரு பாழடைந்த சத்திரத்தில் தங்கியிருப்பதாகச்சொல்லி தட்சணாமூர்த்தியவர்கள் என்னையும் சில கான்ஸ்டேபில்களையும் அழைத்துக்கொண்டு போய் இவரைக்காட்டினார் (ரகுபதி) உடனே நாங்கள் இவரைப்பிடித்து போலீஸுக்குக் கொண்டுவந்து லாக்கப்செய்து வைத்தோம்.

வ-சேஷகிரிராவ் :—தட்சணாமூர்த்தியை நோக்கி — இவர் குற்றவாளி என்று உமக்கு எப்படித்தெரியும்.

தக்ஷிணாமூர்த்தி :—நான் சதாசிவ முதலியார் கேஸில் துப்பு துலக்க பிரயத்தனப் பட்டதில் தலையில்லாத பிணம் இருந்த இடத்தருகில் ஒரு கடிதம் அகப்பட்டது. அதில் கையொப்ப மிட்டிருந்தவர்பெயர் பதி என்று முடிந்திருந்தது. அதற்கு முந்திவுள்ள இரண்டு எழுத்துகள் அழிந்திருந்தன. பிறகு விசாரித்ததில் சதாசிவ முதலியாருக்கு ரகுபதி என்றொரு தமக்கைப் பிள்ளை இருப்பதாக தெரிந்துகொண்டேன். பிறகு அவரைப்பற்றி விசாரித்தபோது தலையில்லாதபிணம் காணப்பட்ட தினமே இவரும் சென்னையில் இல்லை என்று தெரியவந்தது. பிறகு நான் பெங்களூருக்குப் போனபோது ஒருநாள் ஒரு சத்திரத்தில் தங்கினேன். அப்போது நான் இவர்மேல் சந்தேகங்கொண்டு நானும் ஒரு கொலை செய்துவிட்டு வந்தவன்போல்

நடித்து ஒரு பொய்க்கதையைச் சொல்ல, அவரும் அதை நம்பி தான் சென்னையில் கொலைசெய்த விருத்தாந்தத்தை ஆதியொடந்தமாய் சொல்லிவிட்டார்.

ஜட்ஜ் :—மிஸ்டர் ராவவர்களே இன்னும் ஏதாவது கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறதா ?

வ-சேஷகிரிராவ் :—கனம்பொருந்திய நியாயாதிபதியவர்களே ! எத்தனையோ குற்ற மற்றவர்கள் போலீஸார் உபத்திரவத்திற்கு பயந்து தாங்கள் குற்றம்செய்ததாக ஒப்புக்கொண்டு தண்டனைக் குள்ளாகின்றனர். அதைப்போல் ரகுபதியும் நான் கேட்டபோது இல்லை என்றும் பிறகு வக்கீல் ராமநாதய்யர் கேட்டபோது உண்டென்றும் ஒப்புக்கொண்டிருக்கிறான். மேலும் கொலைசெய்யப்பட்டவர் இன்னாரென்று சரியாக தெரியாததால் சற்று நிதானித்து தீர்ப்பு சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வ-ராம :—மிஸ்டர் தட்சணாமூர்த்தி ! கொலை செய்தவரைக் கண்டுபிடித்தீரே, கொலைசெய்யப்பட்டவர் இன்னாரென்று கண்டுபிடித்தீரா ?

தட்சணாமூர்த்தி :—ஆ ஹா கண்டுபிடித்தேன்.

வ-ராம :—அதை கோர்ட்டாருக்குத் தெரியும்படி சொல்லும்.

தட்சணாமூர்த்தி :—நான் சென்னையில் சதாசிவ முதலியார் கேஸ்விஷயத்தில் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும்போது, தன்னிடத்தில் கடன்வாங்கிக்கொடுக்க திறமையின்றி ஓடிவந்து விட்ட தீனதயாளுநாயுடுவைக் கண்டு பிடிக்கும்படி சிதம்பரம் அம்பலவாணசெட்டியார் எனக்கு தந்தி கொடுத்தார். தீனதயாளு நாயுடு

வைப்பற்றி விசாரிக்க பக்தவத்சலு நாயுடு வீட்டிற்குச்சென்று அவரை நேரில்கண்டுபேசினதில், அக்டோபர் மாதம் 5-தேதியன்று மாலை உலாவப்போன தீனதயாளு நாயுடு திரும்பிவரவில்லை என்று தெரிந்து கொண்டேன். நான் தீனதயாளுநாயுடுவின் போட்டோவை பார்த்திருந்தபடியால் புதைக்கப்பட்டிருந்த தலையை எடுத்துப்பார்க்கும்போது இடது கன்னத்தில் மச்சமிருந்ததாலும், மேலும் ரகுபதி சொன்னபடியே சில குறிகள் காணப்பட்டதாலும் நான் அத்தலையை மயானத்தில் புதைத்து விடும்படி ஏற்பாடு செய்துவிட்டு, அம்பலவாண செட்டிக்கு தீனதயாளு நாயுடு அக்டோபர் மாதம 5-தேதி இரவு 9-மணிக்கு மேல் அகாரணமாக கொலைசெய்யப்பட்டதாக கடிதமும் எழுதிவிட்டேன்.

ஜட்ஜ் :—ஜூரிகளே! இதுவரையில் இங்கு நடந்த விஷயங்களை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். இனி இங்குநிற்கும் ரகுபதி குற்றவாளியா அல்லவா வென்று யோசித்துச் சொல்லுங்கள்.

ஜூரித்தலைவர் :—ரகுபதி குற்றவாளி என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

ஜட்ஜ் :—ரகுபதியை நோக்கி — நீ அபிப்ராயமாக உனது மாமனைக்கொல்லக்கருதி வேறொரு மனிதனை கொலை செய்ததால், உன்னை இம்மாதம் 28-ந்தேதி தூக்கில் போடப்படும்.

## மூன்றும் நாள் விசாரணை.

(மோகனும்பாள், துரைசிங்கம், ஜெயராம், இ-பார்த்தசாரதி அய்யங்கார் முதலியவர்களை கோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்டார்கள்.)

**வ-ராம :**—மோகனாம்பாள் ! நீ பெங்களூருக்குப்போக எப்படி நேர்ந்தது ?

**மோகனாம்பாள் :**—ஐயா ! என் தகப்பனார் இறந்து விட்டாரென்று கேள்விப்பட்டபிறகு எனக்குஇரவில் சரியாக தூக்கம் பிடிக்காததால், நான் இராப்போஜனம் செய்தபிறகு தினந்தோறும் எங்கள் தோட்டத்தில் உலாவிவிட்டு வந்து படுத்துக்கொள்வது வழக்கம். அதுபோல் ஒரு நாள் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கும்போது திடீரென (ஜெயராமைக்காட்டி) இவர் என் எதிரிலதோன்றி அவரைப் பின்தொடரச் சொன்னார். நான் சற்று தாமதித்தபோது தன் கையிலிருந்த கத்தியால் என்னை குத்தி விடுவதாக பயமுறுத்திய பயத்தால் நான் அவரைப் பின் தொடர்ந்தேன். பின்பு எங்கள் பங்களாவிற்கு பின்புறத்திலுள்ள பிள்ளையார் கோவிலருகில் நின்றுக் கொண்டிருந்த ஜட்காவண்டியிலேரும்படிச் சொன்னார். வண்டியில் (துரைசிங்கத்தைக்காட்டி) இவர்உட்கார்ந்திருந்தார். வண்டி ராமசாமி முதலியார்சத்திரத் தண்டை-வந்து நின்றது. அன்றிரவு அங்கு தங்கினோம். மறுநாட்காலே வண்டியேறி பெங்களூரை அடைந்தோம். அங்கு ஒரு தனிவீட்டில் என்னை வைத்திருந்தார்கள். இவர்களிருவரும் வெளியிலெங்கும் போவதே கிடையாது. எனக்கு காவலாக ஒரு ஸ்திரீயை அமர்த்தினார்கள்.

**வ-ராம :**—உன்னை நன்ருக காப்பாற்றி வந்தார்களா அல்லது இம்சித்து வந்தார்களா ?

**மோகனாம்பாள் :**—அங்கு எல்லா சௌகரியங்கள் இருந்திருந்தபோதிலும் எனக்கு உண்டான வருத்தத்தி

ஞல் நான் ஒன்றையும் அநுபவிக்கவில்லை. என்னை யொருவரும் இச்சிக்கவுமில்லை. ஆனல் துரைசிங்கம்மாத் திரம் அவரைக் கலியாணம் செய்துக் கொள்ளும்படி அடிக்கடி என்னை கெஞ்சுவார். ஜெயராம் என்னிடம் நெருங்குவதே கிடையாது.

வ-ராம :—ஜெயராம்! எதற்காக நீ மோகனும்பாளை பய முறுத்தி பலாத்காரமாக பெங்களூருக்குக் கொண்டு போனுய்?

ஜெயராம் :—நான் என் சுகத்தைக்கருதி அவ்வாறு செய்தவ னல்ல. ஆனல் எனது பால்ய நண்பன் துரைசிங்கம் மோகனும்பாளைக் காதலித்ததாக என்னிடம் சொன் னதால் மோகனும்பாளை துரைசிங்கத்தினிடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தேன்.

வ-ராம :—துரைசிங்கம்! நீ உனது நண்பனிடத்தில் என்ன சொன்னுய்?

துரைசிங்கம் :—நான் மோகனும்பாளைக் கண்டதுமுதல் என்மனம் அவளையே நாடியிருப்பதாக தெரிவித் தேன்.

ஜட்ஜ் :—மிஸ்டர் ராவவர்களே நீங்கள் ஏதாவது கேள்வி கள் கேட்பதாயிருந்தால் கேட்கலாம்.

வ-சேஷகிரிராவ் :—இ-பார்த்தசாரதி அய்யங்காரே! இவர் கள் மோகனும்பாளை சென்னையிலிருந்து பெங்க ளூருக்கு கொண்டுவந்து வைத்திருந்தது உங்களுக்கு எப்படித்தெரியும்?

இ-பார் :—இவர்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனல் துப்பறியும் தக்ஷணமூர்த்தி இவர்கள் செய்த

காரியத்தை எனக்குச் சொல்லி வீட்டைக்காட்டி இவர்களை அரஸ்டு(Arrest) செய்யும்படிச்சொன்னார். நான் சிலகான்ஸ்டேபில்களைக் கொண்டு இவர்களிரு வரையும் அரஸ்டு செய்தேன்.

வ-சேஷகிரிராவ் :—உலகறிந்த தக்ஷணாமூர்த்தி ! இவர்கள் சென்னையைவிட்டு பெங்களூருக்குப்போய் அங்கு இவர்களிருந்த இருப்பிடம் உங்களுக்கு எப்படித் தெரியவந்தது ?

தக்ஷணாமூர்த்தி :—வக்கீலவர்களே ! மோகனாம்பாள்காணா மற்போன மறுதினமே நான்போய் தோட்டத்தை சுற்றிப்பார்க்க அப்போது மோகனாம்பாள் ஒரு ஜட்காவண்டியில் கொண்டுபோனதாக எனக்கு சில குறிகள் தெரிந்தன. பிறகு வண்டிக்கார காதர் மோதீ னால் இவர்கள் பெங்களூருக்குப் போனதாக தெரிந்து கொண்டு, நானும் பெங்களூருக்குப்போய் ஒரு பிச்சைக்காரனைப்போல் வேடம்பூண்டு வீடு வீடாய் நுழைந்து ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களையும் கவ னித்துக்கொண்டே வந்தேன். நான் மோகனாம்பாளை முன்பு பார்த்திருக்கிறேனாதலால், இவர்களிருந்தவீட் டினுள் நுழைந்ததும் அங்கு உட்கார்ந்திருந்த மோக னாம்பாளை எளிதில் அறிந்துகொண்டேன். கடை சியாக போலீஸாருக்குத்தெரிவித்து இவர்களிருவரை யும் அரஸ்டு செய்வித்தேன்.

ஜட்ஜ் :—ஜெயராமை நோக்கி — நீ உனது நண்பன் பொருட்டு ஒரு கன்னிகையை பயமுறுத்தி பலாத் காரமாக வெளிதேசத்துக்கு கொண்டுபோனபடியால் உனக்கு 6-வருஷம் கடுங்காவல விதிக்கப்பட்டது.

துரைசிங்கத்தை நோக்கி — மோகனுய்பாளை பெங்களூருக்கு கொண்டுபோனதற்கு நீ காரணமாயிருந்த படியால் உனக்கு 8-வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்டது.

தக்ஷிணாமூர்த்தியை நோக்கி — கொலைசெய்யப்பட்டார் என்று யாவராலும் கருதப்பட்டிருந்த சதாசிவமுதலியாரை உயிருடன் கொண்டுவந்து சேர்த்ததாலும், ஒருவராலும் கண்டு பிடிக்கமுடியாத கொலை பாதகனை கண்டு பிடித்ததாலும், பலாத்காரமாக வெளிதேசத்துக்கு கொண்டு போகப்பட்ட கன்னிகையை மீண்டும் அதிக சாமர்த்தியத்துடன் அவளை அவள்பெற்றோரிடம் கொண்டு வந்து சேர்த்ததாலும், நான் உனக்கு இத்தங்கப் பதக்கத்தை இனுமாக அளிக்கிறேன். (எல்லோரும் கரகோஷம செய்தார்கள்.) இன்னும் இத்தகைய நுட்பமான கேஸ்களை கண்டு பிடிக்கும் பொருட்டு உனக்கு நீண்ட ஆயுளை கொடுக்கும்படி நான் கடவுளை பிரார்த்திக்கிறேன்.

---

## அத்தியாயம் 10.

### இரண்டு விவாகங்கள்.

இறந்துவிட்டதாக எண்ணியிருந்த சதாசிவமுதலியார் உயிருடனிருந்ததாலும், காணாமற்போன மோகனாம்பாள் மீண்டும் சுகமாக வீடுவந்து சேர்ந்ததாலும, அக்குடும்பத்தினர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவிடவே முடியாது.

மோகனாம்பாள் காணாமற் போய்விட்டதாக இராஜரத்தினம் கேள்விப்பட்டதுமுதல, நாளுக்குநாள் தேகம் மெலிவடைந்து கொண்டே வந்தது. அதுமுதற்கொண்டு அவர் சரியாக உண்பதும், உறங்குவதும் கிடையாது. மறுபடியும் மோகனாம்பாளைக் கண்டபோது, ஒருவன் தன்னுயிர்க்குயிராய் வைத்திருந்த ஓர் வஸ்துவை இழந்து, மீண்டும் அதைப் பெறுமளவில் எவ்வளவு சந்தோஷமடைவானோ அவ்வளவு சந்தோஷமடைந்தார். பிறகு சில தினங்களுச் செல்லாய் சந்தோஷ மிகுதியால் தன்னுடைய பழைய உருவம் வந்துவிட்டது. அவர் இன்னும் சில தினங்கள் மட்டும் மோகனாம்பாளைக் காணாமலிருந்திருந்தால் உயிர் துறந்தே யிருப்பாரென்பதற்கு சந்தேகமுமுண்டோ.

கொலைசெய்யப்பட்டவர் சதாசிவ முதலியாரல்லவென்று தெரிந்தபிறகு அவருடைய வேலைக்காரர்களும், சிநேகிதர்களும, ஆச்சரியத்துடன் ஆனந்தபரவச மடைந்தனர். அவர்கள் அவருடன் சம்பாஷிக்க ஆவலுற்றார்கள். சதாசிவ முதலியார் தான் திருடர்கள் வீட்டில் அடைப்பட்டிருந்த விருத்தாந்தத்தை காலையிலும் மாலையிலும் தன்னைக் காணவரும் நண்பர்களுக்குச் சொல்லுவதே பெருந் தொழிலாய்விட்டது.

மறுபடியும் தன் தங்கையையும், தந்தையையும் பார்க்கும்படிச்செய்த திருமாலின் திறத்தைக் குறித்து தாமோதர முதலியார் தன் நண்பர்களுடன் சம்பாஷிக்கலானார்.

எல்லோரும் சுகமாக வீடுவந்து சேர்ந்தநாள் முதற்கொண்டு சதாசிவ முதலியார் வீட்டில் பெரிய விருந்துகள் நடந்தன. அவ்விருந்துக்கு சதாசிவ முதலியாரின் நட்பினரும், உறவினரும் அழைக்கப்பட்டனர்.

பிறகு சதாசிவ முதலியார் தன் புதல்வனுக்கும், புதல்விக்கும் விவாகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். வெளி தேசங்களிலுள்ள எல்லா நண்பர்களுக்கும் உறவினருக்கும் முன்னதாகவே திருமணப் பத்திரிகைகள் அனுப்பப்பட்டன. தஞ்சாவூரிலிருந்து நல்ல மேளக்காரர்களை வரவழைக்கப்பட்டார்கள். காவேரி பாய்ச்சலிலுள்ள நிலங்களில் பயிரான காய்கறிகளெல்லாம் சதாசிவ முதலியார் வீட்டில் நிறைந்திருந்தன.

நல்ல கைதேர்ந்த பந்தற்காரர்களைக்கொண்டு தன் பங்களாவிற்கும் எதிரிலுள்ள ஏகாம்பர முதலியார் பங்களாவிற்கும் பெரிய பந்தல்கள் போடுவித்தனர். அப்பந்தல்கள் சரிகைகலந்த நானாவித துணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கால்களுக்கும் பெரிய வாழைமரங்களும், ஈச்சங்கொத்துகளும், இளநீர்க் காய்களுடன் கூந்தற்பனையும் கட்டி தொங்கவிடப்பட்டிருந்தன. பந்தலைச் சுற்றிலும் காகிதத்தால் செய்த புஷ்பங்கள் அலங்காரமாய் ஜோடித்திருந்தன. பந்தல் முழுமையும் மின்சார விளக்குகள் (Electric Lights) எரிந்துக்கொண்டிருந்தன. வீதியின் இரண்டு பக்கங்களிலும் அழகிய சிறு இலைகளையுடைய செடிகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்

தன. அவ்வீதி முழுவதும் ஆத்துமணலால் அழகாக நிரப்பப்பட்டிருந்தது.

ஒருநாள் சுபமுகூர்த்தத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்கிக்கொண் டிருக்கும்போது இராஜரத்தின முதலியாருக்கும், மோகனம்பாளுக்கும் — தாமோதர முதலியாருக்கும், பங்கஜவல்லிக்கும் (ஏகாம்பர முதலியார் புத்திரி) பாணிக் கிரஹணம் நடந்தேறின. வேதாத்தியயனத்தில் முதிர்ந்த அந்தணர்கள் தம்பதிகளை ஆசீர் வதித்தனர். மணக்கோலத்தைக் கண்டுகளிக்க அநேக திக்குகளிலிருந்து வந்த பெரியோர்களும் மணமக்களை வாழ்த்தினார்கள். விவாகத்தை விஜயம் செய்ய வந்திருந்த ஒவ்வொருவரும் சந்தோஷத்தில் மூழ்கி யிருந்தனர். கலியாணத்திற்கு வந்திருந்த ஒவ்வொருவரும் பங்களாவிற்குள் நுழைவதற்கு முன்னமே நல்ல காக்ஷிகளைக் கண்டனர். வீதியிலிருந்து வீட்டுக்குள் நுழைவதற்கு முன்னரே மங்களவாத்தியங்களைக் கேட்டனர். வீட்டில் நுழைந்தபிறகு நறுமணத்தை முகர்ந்தனர். கடைசியாக தேர்ச்சிபெற்ற பாகஸ்தர்களால் சமைக்கப்பட்ட சுவையுள்ள பலகாரங்களுடன் நல்ல உணவை யருந்தினர்.

முகூர்த்தத்தன்று மாலை கச்சேரி நடந்தது. கச்சேரிக்காக இரண்டு பங்களாக்களின் மெத்தைகளின்பேரில் பந்தல்கள் போடப்பட்டன. பந்தல்களில் ஆங்காங்கு அழகிய படங்கள் மாட்டப்பட்டிருந்தது. சுவர்களெல்லாம் குரோட்டன்ஸ் (Crottens) என்னும் இலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மெத்தைகளின்மேல் புருஷர்களுக்காக பாட்டுக் கச்சேரிகளும் கீழே ஸ்திரீகளுக்காக ஆட்டக்கச்சேரிகளும் நடந்தன. கச்சேரிக்கு வந்திருந்த ஒவ்வொருவரும் தங்களுக்கிருக்கும் துன்பங்களை எல்லாம் மறந்து இன்பமுற்

திருந்தனர். இவ்வித ஆடம்பரங்களுடன் இரண்டு விவாகங்களும் மூன்று நாட்கள் நடந்தன.

தக்ஷணாமூர்த்தி :—சதாசிவ முதலியாரை நோக்கி—ஐயா! நான் சென்னைக்குவந்து அநேக நாட்களாகின்றமையால் திருவனந்தபுரம்போக தாங்கள் எனக்கு விடையளிக்கவேண்டும்.

சதாசிவ முதலியார் :—என்னுயிரைக்காப்பாற்றின உங்களை விட்டுப்பிரிந்திருக்க எனக்கு மனம் வரவில்லை. என்னுடைய ஞாபகார்த்தமாக இதை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொண்டே தன் பெயர் பதிந்த ஓர் விலையுயர்ந்த கை கெடியாரத்தை அவருக்குக் கொடுத்தார்.

தக்ஷணாமூர்த்தி முதலில் வாங்கப் பிரியப்படாத போதிலும் அவர் செய்த தொந்திரவினால் வாங்கிக்கொள்ளும்படி நேர்ந்தது.

மோகனாம்பாள்.—ஐயா! நீங்கள் என்னை அப்பாதகர்களிடத்திலிருந்து இதுவரையில் மீட்காதிருந்தால் நான் உயிரிழந்தே யிருப்பேன். இதற்காக உங்களுக்கு என்ன கைம்மாறு செய்வதென்றும் தெரியவில்லை. ஆகையால் இதைத் தடுக்காமல் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டே தன் விரலிலணிந்திருந்த ஓர் வைர மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தாள்.

இராஜரத்தினம் :—நீங்கள் மோகனாம்பாளைக் கண்டுபிடித்திருக்காவிட்டால் இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார் என்னை குற்றவாளி யாக்கியே யிருப்பார். மேலும் என்னுயிர்க் காதலியை இதுவரையில் கண